தேவதானம் பெரியகோவில்

முனைவர். ந. இராசையா

தேவதானம் பெரிய கோவில்

முனைவர் **ந. இராசையா**, எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி.,

ஞானமுருகன் எழுத்தகம்

3-110, அயன் கொல்லங்கொண்டான்,

இராசபாளையம் வட்டம் - 626 142,

விருதுநகர் மாவட்டம்.

தொலைபேசி எண் : (04563) 245728

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	: தேவதானம் பெரிய கோவில்
ஆசிரியர் பெயர்	: முனைவா. **ந. இராசையா,** எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி.,
மொழி	: தமிழ்
முதற்பதிப்பு	: டிசம்பர் 2004
நூலின் தன்மை	: 214 (1x8)
மொத்தப் பக்கங்கள்	: 12 + 104 = 116
அச்சிட்ட புத்தகங்களின் எண்ணிக்கை	: 1000
பாடம்	: தலவரலாறு
அச்சு விகிதம்	: கணிணி வண்ண அச்சு
பைண்டிங்	: அட்டைகட்டு, செக்சன்
பயன்படுத்திய தாள்	: சேசாயி
விலை	: ரூ. 30
உரிமை	: ஆசிரியருக்கு
முகவரி	: முனைவர். ந. இராசையா எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி., **ஞானமுருகன் எழுத்தகம்** 3/110, அயன்கொல்லங்கொண்டான் - 626 142. இராசபாளையம் வட்டம். விருதுநகர் மாவட்டம் தொ.எண். : **(04563) 245728**
அச்சகம்	: **ஸ்ரீ சரவணா பிரஸ்,** 169, அம்பலப்புளி பஜார், இராசபாளையம் விருதுநகர் மாவட்டம் தொ.எண். : **220290**

தேவதானம் பெரிய கோவில்





தவம் பெற்ற நாயகி

தவம் பெற்ற நாயகி

சேத்தூர் சமஸ்தானம் ஜமீன்தார் திருவடமலைத் திருவணாத சேவகப் பாண்டிய மகாராசா அவர்களுக்கு, பழநியாண்டி கரையாளர் மன்னர் பெருமானுக்குப் புத்திரப்பேறு உண்டாக விரும்பி, சமீந்தாருக்குக்குலதெய்வமாகிய தவம் பெற்ற நாயகி மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடுக என்று, மு.ரா. அருணாசலக் கவிராயர் அவர்களை வேண்டிக்கொள்ள அவர்கள் அக மகிழ்ந்து பாடியதே சேறை தவம் பெற்ற நாயகி பிள்ளைத்தமிழ் என்னும் நூலாகும்.

திரு. சேவுகப் பாண்டிய மகாராசா அவர்கள் இதனை அறிந்து மனமகிழ்ச்சி கொண்டு தவம் பெற்ற நாயகி பிள்ளைத் தமிழை நிகழும் பிலவங்க வருடம் வைகாசி மாதம் 16-ம் தேதி (1907) பெரியகோவில் அம்பிகை சந்நிதானத்தில் அரங்கேற்றம் செய்தார்.

நூல் அரங்கேற்றம் செய்யும் காலத்தில் ஐந்து வயதாகிய பெண்பிள்ளை திடீரென அங்குவந்து அரசர் மடியில் அமர்ந்து மகிழ்ச்சியாக இருந்தது. இதைக் கண்ட சபையார் அனைவரும் அம்பிகையே திருவருள் புரிந்தது போன்று இந்தக் குழந்தை வந்தது என்று எண்ணினர்.

அக்காலத்தில் குமர குருபர சுவாமிகள் மதுரை மீனாட்சி யம்மன் பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றும் காலத்தில் திருமலை நாயக்க மன்னர் மடியில் ஒரு பெண் அமர்ந்தது போல் இன்று இங்கு கண்கூடாகக் கண்டோம் என்று அனைவரும் வியந்து கூறினர்.

இவ்வாறு யாவரும் பெரும் மகிழ்ச்சியடைய நூல் அரங்கேற்றதிற்குப் பின்னர் மன்னர் பெருமான் சேவகப்பாண்டியத் தேவர் அவர்கள் அகமும் முகமும் மலர்ந்து வரிசை பல வழங்கினார்.

தவம்பெற்ற நாயகி பிள்ளைத் தமிழ்

செங்கீரைப் பருவம்

திருநின்ற சேறைத் தவம்பெற்ற நாயகீ
செங்கீரை யாடியருளே
சிமையமலை தருபுதல்வி யுமையமலை யொருமுதல்வி
செங்கீரை யாடியருளே
உடங்கண்ணி யோவாது தாமுறை தடாகத்தி
னுண்மலரு நீலமெல்லா
மொறுத்தத் தமைப்பய முறுத்துலாங் கரியமை
யுண்கண்க ளொடுபொரறகோ
ரிடங்கண்ணி முன்னுரு விகந்துபொன் னுருவுகந்
திருமகரம் வந்திருந்தா
லேய்ந்தவிகு குழையுளும் வாய்ந்தவிரு மகரமு
மெதிர்ந்திந்த விழிகளெதிரின்
மடங்கண் ணிலைக்களம் பெயராது பின்வாங்கி
வந்துநனி மாட்டிப்பொரூஉம்
வகையினென் றுக்காயி னுந்தோல்வி வாராதுன்
மலர்முக மசைத்துவண்மைத்
திடங்கண்ணி மன்னர்பயில் சேறைத் தலத்தம்மை
செங்கீரை யாடியருளே
சிமையமலை தருபுதல்வி யுமையமலை யொருமுதல்வி
செங்கீரை யாடியருளே.

செங்கீரைப் பருவம்

ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்த்து முகமசைய ஆடும் நிலை செங்கீரைப்பருவம் எனப்படும்.

வாழ்த்துப்பாடல்

சேறைத் தலபுராணம் சிவபூசைப் படலம்
பாடல் 12 பக்கம் 248

'' பூவருந் தெய்வதானமும் வாழி பொலிதனு சேறையும்வாழி
நாவரும் பழமா மறைகளும் வாழி நரபதி நீதியும் வாழி
யேவரும் புகழ்சை வா கமம் வாழி யிசைபெறு புராணமும் வாழி
தேவரும் பரவுந் தொண்டரும் வாழி சிவனருட் சின்மயன் வாழி''

விநாயகர் காப்பு

சீர் கொண்ட பலவகைச் சிந்துரம் போலச்
சிறந்ததொன் றாமிதென்று
செப்புவார் நாணவச் சிந்துரங் கட்டுயர்
திறந்றெய்வ வேழமென்னப்
போர்கொண்ட வொருவெண் மருப்பினாற் பாரதம்
பொன்மலை யினிற்றனாது
புகழ்பதிற்திருதல்போ லெழதியருள் பிணவப்
பொருளினைப் போற்றல் செய்வாம்.
ஏர்கொண்ட புதிதுபுதி தாருமனை தங்களுக்குள்
கீயுமலர் வாவியெல்லா.
மிசைபெருகு திர்த்தமென் றோதலவை முத்ருவார்க்
கிடுவகைச் செல்வமென்றும்
பார்கொண்ட துதிபெறத் தந்துதிரு மாதும்வெண்
பாமாது முன்முவந்து
பயில்கின்ற சேறைத் தவம்பெற்ற நாயகி
பசுந்தமிழ்ப் பாடல் வரவே.



பெரியகோவில் இராசகோபுரம்

பெரிய கோவிலின் முன்புறத் தோற்றம்



சேத்தூர் அரண்மனை



பதிப்புரை

இந்நூல் சிறப்பு வாய்ந்த பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றான தேவதானம் பெரிய கோயிலின் வரலாற்றைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றை உள்ளடக்கியதாகக் கொண்டுள்ளது. தவறு செய்பவர்கள் யாராகயிருந்தாலும் அவர்களுக்குத் தக்க பாடங்களைக் புகட்டுவதாக அமைந்துள்ளது இந்நூல்.

இந்நூலின் பெருமைகளை உலக மக்களுக்கு எடுத்துக் கூறுதல் இன்றியமையாததாகும். அவ்வாறு எடுத்துக் கூறாததால் பெரிய கோவிலைப் பற்றிய வரலாறுகள் பெரும்பாலும் அழிந்து விட்டன என்றுதான் சொல்லவேண்டும்.

அவற்றை வெளியே கொண்டுவரும் முகத்தான் 1989 இல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது கோவில் அறங்காவலராக இருந்தபோது மகாராஜா என்று அன்போடு அழைக்கப்பட்ட திரு. சிவப்பிரகாசத் தேவர் அப்போது ஆக்கமும் ஊக்கமும் தந்தார். இவருடைய தம்பி திரு. தங்கராஜா என்ற திருமலை குமாரசாமித்தேவர் அவர்கள் சில புகைப் படங்களை வழங்கி ஆர்வம் காட்டினார். தங்கராஜா அவர்களின் மகளும், சிவகிரி ஜமீன் ராணியுமான திருமதி. பாலகுமாரி நாச்சியார் அவர்களும் சேத்தூர் சிவகிரி வரலாறுகள் எழுத வேண்டும் என்று உற்சாகம் காட்டினார்.

உள்ளார் திரு. ச. பூசத்துரை அவர்கள் பார்க்கும் போதெல்லாம் நம்முடைய வரலாறுகளை வெளியில் கொண்டு வாருங்கள் என்று கூறுவார்கள். தக்க சமயங்களில் பொருள் உதவியும் தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் பல்வேறு வழிகளில் உதவி செய்துவரும் நல்ல நெஞ்சங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி !!!

- ஞானமுருகன் எழுத்தகம்.

நூல் ஆசிரியர் :

முனைவர் **ந. இராசையா** எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி.,



மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில்
மேதகு ஆளுநர் சென்னா ரெட்டியார் அவர்கள்
ந. இராசையா அவர்களுக்கு முனைவர் பட்டம்
வழங்கும்போது எடுத்த படம்.

பொருளடக்கம்

1.	முன்னுரை	1
2.	சேத்தூர் தலவரலாறு	3
3.	தேவதானம் பெரிய கோவில்	9
4.	குறுநில மன்னர்கள் காலத்தில் கோவில்	59
5.	சேத்தூர் மன்னர்கள் வரலாறு	62
6.	தேவதானம் கோவில் அறங்காவலர்கள்	65
7.	இதழ்களில் பெரிய கோவில்	77

முன்னுரை

நமது பாரத நாட்டின் தென்பகுதியை அலங்கரிப்பது செந்தமிழ்ப் பாண்டியநாடு. அப்பாண்டிய நாட்டின் தென்மேற்குத் திசையில், மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில் சிறந்து விளங்குவது 'ஆண்மறை நாடு' என்று அழைக்கப் பெறும் சேறையம் பதியாகும். அப்பதியின் கண் நாம் வணங்கும் அம்மையும், அப்பனும் எழுந்தருளியுள்ள கோயில் தேவதானம் பெரிய கோயிலாகும்.

தஞ்சைப் பெரிய கோவில் என்று அழைப்பதைப் போல் இக்கோயிலையும் 'தேவதானம் பெரிய கோயில்' என்று மக்கள் அழைத்து வருவது அதன் பெருமையைக் காட்டுகிறது. இக்கோயில் தேவதானத்திற்கு மேற்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தேவதானமானது சேத்தூர் ஜமீனைச் சேர்ந்த ஊராகும். சேர, சோழ, பாண்டியர்களால் இக்கோயில் சிறப்புப் பெற்றுள்ளது.

இப்பழமை பொருந்திய இந்தத் தலத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமானை சிருங்கம் என்னும் கலைமான் பூசித்ததால் 'சிருங்கர்' என்றும், உமா தேவியின் விருப்பத்திற்கு இணங்க 'அம்மை அப்பர்' என்றும், சோழ மன்னன் பாண்டிய மன்னனுக்கு அனுப்பிய நச்சாடையைத் தவிர்த்து, பாண்டிய மன்னனை இடையூறிலிருந்து விலக்கியதால் 'நச்சாடை தவிர்த்தருளியவர்' என்றும், சோழ மன்னனின் கண்ணைக் கெடுத்து மீண்டும் கண்ணைக் கொடுத்ததால், 'கண்ணைக் கெடுத்துக் கொடுத்தவர்' என்றும், பாண்டிய மன்னனுக்குப் படைத் தளபதியாகச் சேவகம் செய்ததால் சேவுகத் தேவர் என்றும் அழைத்து வருகின்றனர்.

இத்தகைய சிறப்பு மிக்க பெரிய கோயிலைப் பண்டைய காலத்திலிருந்தே சேறை மன்னர்கள் தர்ம கர்த்தாக்களாக இருந்து பரிபாலித்து வருகின்றனர். ஆதி சின்மயத்தேவர் - மனோன்மணி அம்மாள் காலத்திலிருந்து தொடங்கப் பெற்ற அறப் பணியானது தொடர்ந்து நடை பெற்று வருகின்றது.

ஆதி சின்மயத்தேவர் அவர்களுக்குப் பின்னர் வாழையடி வாழையாக வந்த மன்னர் பரம்பரையினரும், திரு. முத்துச்சாமித் தேவர், திரு. சுந்தரராசுத் தேவர், திரு. சேவுகப்பாண்டியத் தேவர், திரு. தியாக சுந்தரதாசுத் தேவர், திரு. வி.டி.எஸ். சிவப்பிரகாசத்

தேவர், ஆகிய ஜமீன்தார்களும் பரம்பரை அறங்காவலர்களாகப் பதவி வகித்து வந்தனர். தற்போது திரு. வி.டி.எஸ்.டி. துரைராஜ் சேகர் அவர்கள் அறங்காவலராக இருந்து வருகிறார்.

இக்கோயிலின் பெருமையை உணர்ந்த நான், **1960** இல் 'சேறை மன்னர்களின் செந்தமிழ்ப் பற்று', 'சேறை மன்னர்களும் பெருஞ் சமையலும்' ஆகிய கட்டுரைகளை நாளேடுகளில் வெளியிட்டேன். நூல் வடிவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்னும் ஆவலில் 1989-ஆம் ஆண்டு 'தேவதானம் 'திருவிழா மலர்' என்னும் சிறிய மலரை வெளியிட்டேன். அதனைத் தொடர்ந்து தற்போது 'தேவதானம் பெரிய கோயில்' என்னும் தலைப்பில் விரிவாக வெளிவர வேண்டும் என்னும் ஆவலில் இந்நூலை வெளியிடுகிறேன். இதுவும் முற்றுப் பெற்ற வரலாறு அல்ல.

சேறைத் தல வரலாறு, சேறைப்பட் பிரபந்தம், நதிவிலாசம், தவம் பெற்ற நாயகி பிள்ளைத் தமிழ், சேறைக் காதல் ஆகிய நூல்களின் துணையைக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் சேத்தூர் ஜமீன்தார்களின் வம்சா வழியினர் பற்றி எழுதிய ஏ. வடிவேலு என்பவரின் நூலும் பேருதவியாக இருந்தது. பல நூல்கள் மேற்கோளுக்காகவும், தகவல்களுக்காகவும் நன்றியுடன் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

நூலிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறினால் அடுத்து வரும் பதிப்பில் திருத்திக் கொள்ள உதவும். இந்நூலுக்கு வாசகர்கள் தமது இதய பூர்வ வரவேற்பினை வழங்கினால் பெரிதும் மகிழ்வேன்.

முனைவர் **ந. இராசையா**

சேறைத் தல வரலாறு

ஆண்மறை நாடான சேறையம்பதி சதுரகிரி மலைக்கும் திரிகூடமலைக்கும் நடுவண் விளங்கும் மேற்கு மலையை அரணாகக் கொண்டு, அதன் அடிவாரத்திலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் அமையப்பெற்ற வளமிகுந்த நல்லூர். செல்வம் கொழிக்கும் பொன்னூர்.

பாண்டியனுக்கும் சோழனுக்கும் போர் நடக்கும் போது அம்மையப்பராகிய இறைவன் பாண்டியன் சேனையிலுள்ள படைவீரர்களை சோழன் சேனைக்குத் தெரிய வொட்டாமல் பகலிலே மறைத்த காரணத்தால் 'ஆண்மறை நாடு' என்ற பெயர் ஏற்பட்டது.

இத்தகைய பெருமைமிக்கது சேறை நாடாகும். 'சோணாடு சோறுடைத்து' என்பது முந்தையரின் மொழி. ஆனால் இன்றைய, திருமொழியென்னவெனில் 'சோற்றுக்கு அலைந்தவர்கள் சேற்றூருக்குச் செல்லுங்கள்' என்பதாகும். இது பொய்யுரையுமல்ல! புகழுரையுமல்ல! மெய்யுரையேயாகும்.

வாழ்வாங்கு வாழ்வதற்குரிய இயற்கை வளனும், செயற்கை வளனும் செறிந்து சிறப்புப்பெற்று ஓங்கி நிற்கும் ஒப்புயர்வற்ற உயர்ந்த ஊர். 'சேற்றூர்' என்றும், 'போற்றூர்' என்றும் இலக்கியங்கள் பாராட்டும் பெருமை பெற்றது. 'சேற்றூர்' என்பதே இன்று 'சேத்தூர்' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

சடையவர்மன் குலசேகரபாண்டியன் (1162), மாறவர்மன் குலசேகரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன், தர்மப் பெருமாள் குலசேகர பாண்டியன் ஆகியவர்களின் கல்வெட்டுக்களால் இந்தச் 'சேறை' நகர் 'சேரூர்' என்று அழைக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

அந்த நாளில் 'சேரூரானது' 'செம்மரம்' என்றும் 'குலசேகரபுரம்' என்றும் அழைக்கப்பட்டு வந்தது. கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் குலசேகரபாண்டியனால் வியாபார

இடமாக நிறுவப்பட்டதனால் ‘குலசேகரபுரம்’ என்று சேத்தூர் அழைக்கப்பட்டது. இன்றும் சேத்தூரில் - மேட்டுப்பட்டியில் ‘சந்தைக்கடை’ என்றே அந்த இடம் அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டிய வரலாற்றில் இச்செய்திகளை இராசசேகர தங்கமணி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சேத்தூர் பழம்பெருமை வாய்ந்த இந்த சேத்தூர், விருதுநகர் மாவட்டம் இராசபாளையம் வட்டத்தில் தென்காசி நெடுஞ்சாலையில் இராசபாளையத்திற்குத் தென்மேற்கில் சுமார் 10-கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இவ்வூர் 1803-ம் ஆண்டுக்கு முன்னர் மதுரை மாவட்டத்து -டனும்; அதற்குப் பின்னர் திருநெல்வேலி மாவட்டத்துடனும்; 1910-ம் ஆண்டு முதல் இராமநாதபுரம் மாவட்டத்துடனும் இணைக்கப்பட்டிருந்தது. 1984-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம் உதயமான போது, இவ்வூர் விருதுநகர் மாவட்டத்தில் இணைக்கப் -பட்டது.

‘சேறைத்தல வரலாறு’ ஆதிகாலத்தில் வடமொழியில் இருந்திருக்கிறது. அந்தப் பழைய நூலை ஆதாரமாகக் கொண்டு கொல்லம் ஆண்டு 750-இல் (ஆங்கில வருடம் கி.பி 1574) சேறைமன்னர் சின்மயத்தேவர் அவர்களின் வேண்டுகோளின் படி சிந்தாமணிப்பிள்ளை என்ற பொன்னாயிரங்கவிராயர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

சேறை மன்னர் சுந்தரதாஸ் பாண்டியத்தேவர் அவர்களின் வேண்டுகோளின்படி, சேறைத்தலபுராணம் 1893-ல் மீண்டும் அரங்கேற்றப்பட்டது. சேறை சமஸ்தான வித்துவான் இராமசாமிக் கவிராயர் அவர்களால் வெளியிடப்பெற்றது.

இந்த சேறைத்தல வரலாற்றிலிருந்தே சேத்தூரைப் பற்றிய செய்திகளையும், தேவதானம் கோவிலைப் பற்றிய செய்திகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

சேறைநாட்டின் எல்லைகள்

'ஆண்மறை நாடு' என்று அழைக்கப்படுகின்ற சேறையம்பதி சதுரகிரி மலைக்கும் திரிகூட மலைக்கும் நடுவண் விளங்கும் மேலைமலையை அரணாகக் கொண்டு அமையப் பெற்ற ஊர். இவ்வூரின் எல்லைகளைப் பற்றி சேறைத்தல புராணம் திருநாட்டுப் படலத்தில் 41, 42-வது பாடல்களின் மூலம் அறியலாம்.

'சந்தமார்ந்திடு பாண்டிய னாட்டி னுட்டகவா
மிந்தநாட்டின தெல்லையை யியம்புது மெழிலாப்
பந்த மீர்ந்திடு கீழ்த்திசை யாண்மறைப் பதியாம்
விந்தை யூர்ந்திடு தென்திசை விசுவனார் புரியாம்
மேற்றிசை தனிற் தேவியாறுற் பத்திவேணி
யாற்றர் நட்பின் றிசை யினிலரிகர புரமாந்
தோற்று நல்வளத் தெய்வதானம் பரஞ்சுடர்க்குச்
சாற்று மாண்மறை நாட்டெல்லை யீதென்பர் சான்றோர்.

சேறை நாட்டின் எல்லைகளாக கிழக்கே ஆண்மறைநாடு, மேற்கே தேவியாறு உற்பத்தியாகும் இடம். அதாவது மலையாள நாட்டின் எல்லை. தெற்கே விசுவநாதப்பேரி - வடக்கே அரிகரபுர -மாகும். அரிகரபுரம் தற்போது இல்லை.

நாட்டுவளம்

சேறை நாட்டின் மேலை மலையில் மணம் கமழும் அகிலும், சந்தனமும் வளர்ந்தோங்கி மணம் வீசும். ஏலமும் மிளகும் வளர்ந்தோங்கி எழில் குன்றாது காட்சி கொடுக்கும். குங்கிலியமும், மருந்து மூலிகைகளும், தேக்குமரமும், கருங்காலி -மரமும் இம்மலையைச் செழிப்படையச் செய்கின்றன. இம்மலையின்கண் யானைக் கூட்டங்களின் பிளிறலும், புலிகளின் உறுமலும், கரடிக்கூட்டங்களின் கதறலும், மானினங்களின் 'மா' ஒலியும், பறவைகளின் பறையொலிகளும் சேர்ந்து மலையின் உச்சியிலிருந்து விழும் நீர்வீழ்ச்சிகளின் 'சோ' வென்ற ஒலிகளை அடக்கும். இம்மலைக்கு விறகு எடுக்கச் செல்லும் மக்கள் யானைத் தந்தங்களையும் மான் கொம்புகளையும் ஏராளமாகக் கொண்டு வருவர்.

வரையாடுகளும், காட்டு மாடுகளும் தம் கன்றுகளுக்குப் பால் கொடுத்தது போக எஞ்சிய பாலை பாறையில் இறக்கியதால் உண்டான பாலாடைக் கட்டிகளைத் தின்று வயிற்றை நிரப்புவதுடன் வீட்டிற்கும் சுமந்துகொண்டு மக்கள் வருவர்.

இம்மலையில் படிந்திருக்கும் கருமுகில் கணங்கள் பசுவாகவும், மலையின் குன்றுகள் பசுவின் மடுக்களாகவும், ஆறுகள் மடுக்களின் காம்புகளாகவும், குளங்கள் பாலைக் குடிக்கும் கன்றுகளாகவும் உருவகப்படுத்தி பாடியதிலிருந்து மலை வளத்தின் சிறப்பு நன்கு விளங்கும் சேறைத்தல புராணம் நாட்டுப்படலத்தில் 9-ஆம் பாடல் அதனை நன்கு விளக்குகிறது.

'கொண்டன் மேதி கொழுங்கு வடே மடி
மண்டலத்தில் வருநதி நீண் முலை
கண்ட நீண்முலைக் காம்பின் வடிந்த பா
லுண்ட கன்றுகளொக்குங் குளங்களே'

தேவியாறு, நகரையாறு, கோரையாறு, புறவடியாறு, மனமாக்கியாறு என்ற ஐந்து பெரிய ஆறுகள் இம்மலையினின்று விரைந்து இறங்கிப் பின் தவழ்ந்து வந்து சேறையைச் செழிப்புறச் செய்கின்றன.

உமையவள் பெயரைப் புனைந்துள்ள தேவியாறு யாவரும் விரும்பும் கிரிகைகளிலும், தவசு செய்வதிலும், தியானிக்கத்தக்க புண்ணிய நதியாகக் கருதப்படுகிறது. அந்த ஆற்றின் திருவோலக்கம் பாறையில் அம்மை தவம் செய்கிறாள். நகரையாறு, சாதரூபம், சாம்புநதம் முதலிய 1108 மாற்று வரையுள்ள பொன்னையும் ஒன்பது வகைப்பட்ட இரத்தினங்களையும் பொருந்தி பல திற மீனினங்கள் மேலே தடவி வர யாவராலும் துதிக்கப்படுகின்ற விண்ணவர்கள் பக்கமே சுற்றி வந்து முல்லை நிலத்தைச் சார்ந்து முழங்கும் சங்குகளை இருகரைகளிலும் வீசி, மருத நிலத்தில் பாய்ந்து வளமாக்கும் பெருமையைப்பெற்றது. நகரையாறு என்றால் நகரும் ஆறு விரிவடையும் ஆறு; என்றும் பொருள் கொள்ளலாம்.

தேவதானம் பெரியகோவில்

கோரையாறு கரைகள் நன்கு விளங்கவும், 'கல்லணை' என்ற பெரியதோர் அணை பொருந்தவும் ஆமைகளைப் பொருந்தியும், முத்துக்களைக் கொண்டும் பலகாடுகளைக் கடந்து கோரநதி என்ற பெயராகிய முல்லை நிலத்தையும், மருத நிலத்தையும் வளமாக்கிப் பெருமைபெற்றது. 'கோரம்' என்றால் அச்சம் தருவது என்றும் பொருள் கொள்ளலாம். கோரையாற்றில் கோரமான பிணியுடைய -வர்கள் மூழ்கினால் நீங்காத பிணியும் நீங்கும் என்று இவ்வட்டார மக்கள் கருதுகிறார்கள். இந்த ஆறு தேவதானத்திற்கு வடக்கே ஒரு பர்லாங் தூரத்தில் தென்காசி நெடுஞ்சாலையைத் தாண்டிச் செல்கிறது. தேரோட்டம் அன்று கும்பிட்டுக் கர்ணம் செய்யும் மக்கள் இந்த ஆற்றில் மூழ்கிக் குளித்துச் சென்று தேருக்குப் பின்னால் கும்பிட்டுக் கர்ணம் செய்வது வழக்கம்.

புறவடியாறு ஒருவகைப் புற்கள் வளர்ந்து சூழ, அருளையார், சாஸ்தா கோயில்களின் பக்கமாகச் சென்று அலைகளும் பொருந்த, அன்னப்பறவைகள் அதன்மேல் வசிக்க, வெள்ளிய சங்கினங்கள் அகலாதிருப்ப, முல்லை நிலத்தினைச் செழிப்புறச் செய்கின்றது.

மனமாக்கியாறு சந்தன மரங்களைப் பொருந்தி, நீராடுந் துறைகளை இசைந்து உயர்வாகிய பூவனேரி என்னும் குளத்தில் வர, அங்கே தங்கி அழகிய பயிர்களை வளர்த்துச் செழிப்புறச் செய்யும். 'மனம் ஆக்கி' என்றால் நல்ல உள்ளத்தைக் கொடுப்பது என்று பொருள்படும். இந்த ஆற்றில் மூழ்குபவர்கள் தீய உள்ளம் படைத்தவர்களாகயிருந்தாலும், நல்ல உள்ளம் படைத்தவர்களாக மாறுவார்கள் என்று இவ்வட்டார மக்கள் கருதுகிறார்கள்.

இந்த ஐந்து நதிகளும் சேறை நகரிலுள்ள குளங்களை நிரப்பி நெல்கொழிக்கும் நல்லூராக்குகின்றன. நெல் அளவுக்கு அதிகமாக விளைவதின் காரணமாகச் 'சோற்றுக்கு அலைந்தவர்கள் சேற்றூருக்குச் செல்லுங்கள்' என்று கூறும் பெருமைபெற்ற ஊர்.

மருதநில வளம்

சேறை வயல்களில் கயல் மீன்களும், வாளை மீன்களும் துள்ளிக் குதித்து ஓடிக்கொண்டிருக்கும். மீன்கள் துள்ளிக் குதிக்கும் போது, வயல் ஓரங்களிலுள்ள வாழை மரங்களில் மோதி வாழைப்

பழங்களைக் கீழே உதிர்க்கின்றன. வாழைப் பூக்களிலிருந்து தேன் இடைவிடாது சொட்டுகின்றது. தேன் வயலில் சொட்டுவதால் நெற்பயிர்கள் பனையிலும் உயரமாக வளர்கின்றன.

மணிவயல் வாளைபாய வளரிளங் கதலி தூங்கும்
இணையின் மென்பழஞ் சிந்துந் தேனிடை விடா தொழுகச் செந்நெற்
பனையெலா மோங்குஞ் சேறைப் பதிவளர் நாட்டுப் பண்ணைக்
கணைநிகர் கருங்கட்பண் மங்கையர் வரவுரைக்கின்றேன்

என்று ‘சேறைப்பட்பிரபந்தம்’ என்ற நூல் கூறுகிறது.

மேலும் மங்கையரின் அழகைக் கண்டு நாணிய வாழை சங்கைக் கவிழ்த்தியதைப் போன்று குலை தள்ளியதாம் என்ற செய்தியைச் ‘சேறைத்தலபுராணம்’ நாட்டுப்படலத்தில் 18-ஆம் பாடல் கூறுகிறது.

‘மங்கைமார் குறங்கெழில் கண்டு நாணிய வாழை
சங்கை யாற்றலை கவிழ்த்தன போற் குலை தள்ளும்’

சோலைகளில் ஓங்கி உயர்ந்த மரங்களில் மலர்கள் பூத்துள்ளன. அதனால் இருட்டாகவே இருக்கும். அந்தச் சோலையின் கிளிகள் சேறை மன்னர்களின் புகழ்பாடக் கேட்ட நாகண வாய்ப் புட்கள் தலையை அசைக்கும். வண்டுகள் பலவிதமான கீதங்களை முழக்கும். அந்தக் கீதங்களைக் கேட்ட செந்தாமரை மலர்கள் வண்டுகளுக்குப் பரிசாகத் தேனை வழங்கும் என்ற ‘சேறைப்புலவர்’ பாடலிலிருந்து சோலை வளம் விளங்குகின்றது.

இப்பகுதியில் வாழும் பெண்களின் ஆட்டத்தை தேவலோகப் பெண்களும் காண வருவர். இனிமையான குரலையுடைய குயில் மாதருடைய குரலுக்குத் தோற்கும். இவ்வாறு பெருமை பெற்ற சேறையைப் பற்றி சேறைத்தல புராணம் திருநகரப்படலத்தில் 2-வது பாடலிலும்; சேறையை ஆண்ட மன்னவன் பெயரை சேறைத்தலபுராணம் பாயிரத்தில் 44-வது பாடலிலும் காணலாம்.

அம்மை பெற்ற நாயகியருந்தவம் புரிந்திடச்
செம்மை பெற்ற வன்பினோடு சேறல் பெற்ற பண்பினாற்
சும்மை பெற்ற சோற்றூரென்று சொல்லு நாமஞ்சேறையாய்

மும்மை பெற்ற வத்தலங் கண்டு முற்று மோதவுற்றதே
அன்னவர் வற்புறுத்தினது மன்றிய ணிதிகழ் சேறை
மன்னவன் சின்மயத் திருவன் மகிழ்ந்துரைக்கு மதனாலும்
பின்னமா ருயிருடனற் பெருங்கதியினுற வேண்டு
மென்னு மொரு காதலினு மிதை யுரைத்தே னியலதனில்
என்று 'சேறைத்தலவரலாறு' கூறுகிறது.

தேவதானம் பெரியகோயில்

இயற்கை வளம் எக்காலத்திலும் குறையாத தருமாசலம் எனப்படும் மேற்கு மலைத் தொடர் உள்ளது. அதாவது துன்பத்தைப் போக்கக்கூடிய கற்பக மரங்களைக் கொண்ட மேற்கு மலைத் தொடர் என்று பொருள் கொள்ளலாம். துன்பத்தைப் போக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டுள்ள மலைத்தொடர் என்றும் பொருள் கொள்ளலாம்.

அம்மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது தேவதானம் பெரியகோயில். சேறை நாட்டின் சிறப்பான பகுதிகளில் ஒன்று தேவதானம். இத்தகு சிறப்பு மிக்க தேவதானத்தில் நச்சாடை தவிர்த்த சுவாமி எழுந்தருளியுள்ளார். இத்தலத்தின் சிறப்பைப் பற்றியும், தேவதானம் ஊரைப்பற்றியும் சேறைத்தல புராணத்தில்



தேவதானம் பெரியகோவிலின் தென்பக்க தோற்றம்

நகரப்படலத்தில் பாடல் மூன்றில் கூறியிருப்பதைக் காணலாம்.

'அன்னகரச் சேறையூ ரடுத்துத் தேவராதியோர்
பொன்னகரமா மெனப்புகுந்து போற்றும் பொற்பினாற்
சொன்னகர நாமந் தேவதான மென்று சொற்றிருந்

தொன்னகர மான்மியந் தொழுதுரைத்தல் செய்குவாம்'

தேவதானம் திருக்கோயிலுக்கு அரசர் இறையிலியாக விட்ட நிலமாதலால் 'தேவதானம்' என்று பெயர் வழங்கப்படுவதாக 'ஊரும்பேரும்' என்னும் நூலில் டாக்டர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

தேவர்கள் வந்து பெருந்தவம் புரிந்திடுவதால் 'தேவதானம்' எனப் பெயர்பெற்றது என்று 'சேறைத்தலபுராணம்' கூறுகிறது.

இந்தக் கோவில் 'பஞ்ச ஸ்தலங்களில் ஒன்று' என எச். ஆர். பேட்டி என்னும் ஆங்கிலேயர் கூறுவதாவது.

The chief temples are four members of Panchastala referred to under Sankarankovil. The fifth temple of the series is at Devadanam, Srivilliputhur Taluk, Ramnad Dist' ('திருநெல்வேலி' என்ற நூலில் பக்கம் 408-ல் கூறியுள்ளார்.)

இத்தகைய பெருமைமிக்க தேவதானம் விருதுநகர் மாவட்டத்தில் குற்றாலம் செல்லும் நெடுஞ்சாலையில் சேத்தூருக்கும் சிவகிரிக்கும் இடையில் உள்ளது. தேவதானத்திற்கு மேற்கே சுமார் 2-கிலோ மீட்டர் தூரத்தில் அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி எழுந்தருளியுள்ள பெரிய கோயில் அமைந்துள்ளது.

தேவதானம் என்ற இத்தலத்திற்கு 'அம்பிகாபுரம்' 'மந்தாகினிபுரம்' 'பராசகேந்திரம்' 'மதுலாபுரம்' என்ற வேறுபெயர்களும் உண்டு இந்தச் செய்தியைச் சேறைத்தலபுராணம் தல விசேடப்பலம் 39-வது பாடலில் காணலாம்

அத்தலந் தனக்கு நாமம்பிகாபுரமே யென்றுஞ்
சுத்தமார்ந் திட்ட மந்தாகினி புரந்து களிலாத
வித்தகப் பராககேத்திரம் வியன் மதலா புரந்தான்
முந்திமா நகரமென்று மொழிந்திடுந் தெய்வதானம்.

உயிரினங்கள் வாழ இன்றிய மையாததாகும். பஞ்ச பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை இல்லை என்றால் உலகமே இல்லை.

சிவன்

இந்த ஐந்து அம்சங்களாகவும் சிவன் இருப்பதாக சைவமதம் சொல்லுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு ஊரில் அவர் குடிகொண்டு இருக்கிறார். இதையே பஞ்ச பூதஸ்தலங்கள் என்று அழைக்கிறோம். பஞ்ச என்றால் ஐந்து. ஸ்தலங்கள் என்றால் கோவில்கள் என்று பொருள்.

தமிழ்நாட்டில் வட மாவட்டங்களில் இந்த பஞ்ச பூத ஸ்தலங்கள் பெருமை வாய்ந்ததாகவும் புனிதத்துவம் நிறைந்ததாகவும் கருதப்படுகிறது. காஞ்சிபுரம் , திருவானைக் காவல், திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகியவையே பஞ்சபூத ஸ்தலங்கள் ஆகும்.

காஞ்சிபுரத்தில் சிவன் பூமியாக (நிலம்) இருக்கிறார். திருவானைக் காவலில் (திருச்சி அருகே) நீராக உள்ளார். திருவண்ணாமலையில் நெருப்பாகக் காட்சி தருகிறார் திருக்காளத்தியில் காற்றாகவும், சிதம்பரத்தில் ஆகாயமாகவும் உள்ளார்.

ராஜபாளையத்தைச் சுற்றி

இந்த ஐந்து ஸ்தலங்களும் புராண அம்சங்கள் நிறைந்தவை. இந்த கோவில்களுக்குச் சென்று வணங்கினால் நம் பாவங்கள் அனைத்தும் நீங்கி எண்ணற்ற வளத்தைக் காணலாம்.

பஞ்சபூத ஸ்தலங்கள் என்றாலே இந்த ஊர்கள் தான் அனைவரின் நினைவுக்கும் வரும். ஆனால் வட மாவட்டங்களில் உள்ள இந்த ஸ்தலங்களுக்குச் சென்று வருவது என்றால் எல்லோராலும் முடியாத காரியம்.

அவ்வளவு தூரம் சென்று பஞ்சபூத ஸ்தலங்களை வழிபட வேண்டிய கட்டாயம் இல்லை. இதோ ..... ராஜபாளையத்தைச் சுற்றிலும் பஞ்ச பூத ஸ்தலங்கள் இருக்கின்றன. சங்கரன்கோவில், தார்காபுரம், கரிவலம் வந்தநல்லூர், தென் மலை, தேவதானம் ஆகியவை இந்த தென்பகுதி பஞ்ச பூத ஸ்தலங்களாகும்.

இந்த பஞ்ச லிங்கங்கள் வண்மை, மேன்மை முதலிய யோகமும், கந்தம், ரூபம், ரசம், பரிசம், சங்கியை, பரிமாணம்,வேற்றுமை, சையோகம், விபாகம், அண்மை, சேய்மை, குருத்துவம், திரவத்வம், சமஸ்காரம் என்னும் பதினான்கு குணங்களையும் உடையது. தென் தமிழ்நாட்டில் சங்கரன்கோவிலில் உள்ள சிவன் கோவில் ''நிலம்'' ஆகவும் ; தார்காபுரம் கோவில் ''நீர்'' அடிப்படையிலும்; கரிவலம் வந்தநல்லூர் கோவில் ''நெருப்பு'' அடிப்படையிலும்; தென்மலை கோவில் ''காற்று'' அடிப்படையிலும்; தேவதானம் கோவில் ''ஆகாயமாகவும்'' அமைக்கப்பட்டு உள்ளன.

5 வகை லிங்கங்கள்

லிங்கமானது சுயம்பு லிங்கம், காணலிங்கம், தைவிலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகைப்படும். சுயம்புலிங்கம் என்பது மனிதர்களால் உருவாக்கப்படாமல் தானாகவே தோன்றியது.

லிங்கத்தின் அடிப்பாகம் பிரம்மாவையும் (படைக்கும் ஆற்றல்), நடுப்பகுதி விஷ்ணு வையும் (காக்கும் ஆற்றல்), மேல் பகுதி சிவனையும் (அழிக்கும் ஆற்றல்) குறிக்கிறது. லிங்கத்தின் பீடம் உமையம்மையின் சக்தி வடிவம்.

சிவபெருமானை வழிபட மகாசிவராத்திரி, திருக்கார்த்திகை, திருவாதிரை ஆகிய 3 தினங்கள் உகந்தது.

இந்த உலகத்தை வழிபட மகாசிவராத்திரியன்று உமாதேவி விடிய விடிய கண்விழித்து சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் தோன்றி உமாதேவிக்கு அருள் புரிந்தார்.

உமாதேவி கேட்டுக் கொண்டபடி மகாசிவராத்திரியன்று கண் விழித்து தம்மை வழிபடுபவர்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்க சிவபெருமான் அருள் பாலிப்பார்.

பக்தர்கள் தன்னை பூஜிக்க, குறிப்பாக சிவராத்திரியன்று வழி

படவே பஞ்ச ஸ்தலங்களான சங்கரன்கோவில், தாருகாபுரம், கரிவலம் வந்த நல்லூர், தென்மலை, தேவதானம் கோவில்களை உருவாக்கினார்.

பக்தர்கள் விரதம் இருந்து இக்கோயில்களில் இரவில் கண் விழித்து வழிபட்டு மறுநாள் விரதத்தை முடித்துக் கொள்வார்கள்.

மகாசிவராத்திரியில் இந்த பஞ்ச ஸ்தலங்களில் வழிபடுவதால் எல்லா நன்மைகளும் கிடைக்கும். (தினத் தந்தி 5-7-2002 ந.இராசையா)

கோவிலின் ஆதிவரலாறு

இப்பகுதி வெகுகாலத்திற்கு முன்னர் வனமாக இருந்தது வனத்தின் நடுவில் திகழ்ந்த கொன்றை மரத்தின் கீழ் ஒரு சிவலிங்கம் இலைகளால் மூடப்பட்டு யாவரும் அறியா வண்ணம் இருந்தது.

இவ்வனத்தில் வாழ்ந்த கலைமான் ஒன்று கொன்றைத் தழைகளைத் தின்னும் விருப்புடன் சிவலிங்கத்தை மூடியுள்ள இலைகளைத் தின்ன ஆரம்பித்தது. இலைக்குவியலில் புதைந்திருந்த சிவலிங்கம் கலைமான் கண்களுக்குப் புலப்பட்டது.

இறைவனைக் கண்ட கலைமான் பக்தியால் உள்ளம் உருகித் தன்பாலைச் சொரிந்து வணங்கியது. நாள்தோறும் இவ்வண்ணம் இறைவனை வழிபட்டுவந்தது.

அக்காட்டில் மேய்ச்சலுக்காக வந்த பசுவும் மானைப் போல் அச்சிவலிங்கத்தைக் கண்ணுற்றது. மானைப் போலவே பசுவும் இறைவன் மீது பேரன்பு கொண்டு பால் சுரந்து பெருமானை வணங்கியது.

இவ்விரு விலங்குகளும் ஒன்றை ஒன்று சந்திக்காமல் பல நாட்கள் இறைவனை வணங்கிவந்தன. ஒருநாள் சிவலிங்கத்தின் அருகில் சாணம், கோமியம் ஆகியவை கிடப்பதைக் கலைமான் கண்டது. மிகவும் மனம் ‘நொந்து, இவ்வசுத்தம் புரிந்தது யார்?’

எனச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் பசு வழக்கம் போல் இறைவனை வழிபட்டு வந்தது. பசுவைக் கண்ட கலைமான், இப்பசுவே இங்கு சாணமிட்டிருக்க வேண்டும் என்று எண்ணிக் கோபங்கொண்டு தன் கொம்புகளால் அதனைத் தாக்கியது. பசுவும் மானைத் தாக்கியது, அவ்விரு விலங்குகளும் சண்டை புரிவதைக் கண்ட இறைவன் அவற்றின் முன் காட்சி கொடுத்துத் தன் சோதியில் கலக்கும்படி செய்தான்.

பசுவின் சொந்தக்காரனான சங்கரன் என்பவன் இக்காட்சியைக் கண்குளிரக் கண்டான். இறைவன் மீது பால் சொரிந்து நீராட்டி மலர்தூவி தான் கொண்டு வந்த கட்டுச் சோற்றை வைத்தும், பழங்கள், தேன், வாசனைச் சாந்து, குங்கிலியம் ஆகியவற்றைக் காணிக்கைப் பொருளாக வைத்தும் இறைவனை வணங்கினான். அவன் இக்காட்சியை ஊரார் பலரிடமும் கூற, பலரும் வந்து இறைவனை வணங்கினர்.

பாறையின் மேலுள்ள கொன்றை மரத்தின் கீழ் இவ்விறைவன் வீற்றிருப்பதால் 'திருமலைக் கொழுந்தீசர்' எனப் பெயர்பெற்றார். அம்மையப்பர், ஆறுடையார், சேவகத்தேவர், நச்சாடை தவிர்த்தவர் என்னும் வேறுபெயர்களும் இப்பெருமானுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தலத்தின் அருகாமையிலுள்ள மேற்குத் தொடர்ச்சிமலை 'தருமாசலம்' என்றும் 'புண்ணியவெற்பு' என்றும் புலவர்களால் பாராட்டப்படும் பெருமையுடையது. இம்மலை சதுரகிரிக்கும், திரிகூடமலைக்கும் நடுவண் விளங்குகின்றது. இம்மலையில் தவம் இயற்றிப் பக்தி சிரத்தையுடனும் வைராக்கியத்துடனும் முயல்பவர்கள் தங்கள் வினைகள் ஒழிந்து வீடுபேறெய்துவர் என்பது பெரியோர்கள் நம்பிக்கை.

மேற்கு மலைத் தொடரிலிருந்து கோரையாறு, தேவியாறு நகரையாறு என்னும் பல ஆறுகள் ஓடிவருகின்றன. கோரையாற்றில் சதுர்ச்சுனை, மேலருவி, கீழருவி கன்னிகா தீர்த்தம், தேவிதீர்த்தம், குயவரி தீர்த்தம், காருத்த தீர்த்தம், பூத தீர்த்தம், அருக்கத் தீர்த்தம், பராசர தீர்த்தம், சங்க தீர்த்தம் எனப் பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

இக்கோயிலை வணங்கி திருவோலக்க அருவியின் கீழ் உள்ள குகைப் பக்கத்தில் அம்மை தவம் செய்த தாலத்தை வணங்கித் திருக்கண்ணீசரைத் துதித்து வருபவர்கள் முக்தி பெறுவார்கள் என்பது ஆன்றோர்கள் கருத்து.

திருக்கோயிலின் அமைப்பு

தேவதானத்திற்கு மேற்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி பெரிய கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. சுற்றிலும் வனத்தால் சூழப்பட்டுள்ளது. கோயிலின் தலை வாயிலுக்கு முன் பெரிய தெப்பக்குளம் உள்ளது. அத்தெப்பக்குளம் நான்கு பக்கங்களிலும்



படித்துறைகளைக் கொண்டும், நடுமையத்தில் அழகான மண்டபத்தைக் கொண்டும் விளங்குகின்றது.

திருக்கோயில் வண்ணக்கோலங்களால் அலங்கரிக்கப்பட்ட வானளாவிய மதில் சுவர்களைப் பெற்று விளங்குகின்றது. மதில் சுவர்களின் நான்கு மூலைகளிலும் காவல் பூதங்கள் காத்து நிற்கும் சிற்பங்கள் உள்ளன. தெற்கு, வடக்கு சுவர்களின்

மையப்பகுதிகளில் முறையே இரண்டு பெரிய வாசல்கள் உண்டு. மதிலுக்கு வெளியே உள்ள வீதி மூன்றாம் பிரகாரம் வெளிவீதியாகும். மதிலுக்கு உட்புறமாக விளங்கும் வீதி இரண்டாம் பிரகாரமாகும். இந்த இரண்டாம் பிரகாரத்தின் தென்மேற்கில் திருமலைக் கொழுந்தீசுவரர் கோயில் உள்ளது. இது குன்றின் மேல் உள்ளதால் இதை மலைக்கோயில் என்று அழைப்பர். அதன் அருகில் சரக்கொன்றை மரம் உள்ளது. இதுவே கோயிலின் தலவிருட்சமாகும். அதன் அருகில் இறைவன் காட்சி தந்த இடம் உள்ளது.

கோயிலுக்குள் நுழையும் பகுதியான 'முன் மண்டபம்' என்று அழைக்கப்படுகின்ற இம்மண்டபம் பல வண்ண ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. நுழைவுவாயில் மண்டபத் தூண்களில் இக்கோயிலைக் கட்டிய ஆதி சின்மயத்தேவர் மரபில் வந்த சின்மயத்தேவர் சிலையும் அவருடைய துணைவியார் மனோன் மணி நாச்சியார் சிலையும் அமைந்துள்ளன. இந்த முன் மண்டபத்தில் தான் கொடிமரம் உள்ளது. கொடிமரத்திற்கு முன்னால் தரையில் ஆமையின் உருவம் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மரபு தமிழ்நாட்டுக் கோயில்களில் காண்பது அரிது. கேரள நாட்டுக்கோயில்களில் மட்டும் காணப்படுகிறது. ஆலயத்திற்குள் செல்பவர்கள் தங்களது ஐந்து பொறிகளையும் அடக்கி ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்திச் செல்லவேண்டும் என்பதைத் தெரிவிக்கும் பொருட்டே இது இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது என்று உணரலாம்.

கொடிமரத்திற்கு அடுத்த நுழைவு வாயிலுக்குள் சென்றால் 'நந்தி மண்டபம்' உள்ளது. இம்மண்டபத்தின் நடுவே அழகான நந்தி உள்ளது. நந்திக்கு எதிரில் சுவாமியின் கோயில் உள்ளது. அங்கு எழுந்தருளியுள்ள லிங்கமானது ஆகாயத்திலிருந்து பார்த்தால் தான் தெரியும். ஆகையால் இதை 'ஆகாயத்தலம்' என்று அழைப்பார்கள்.

நச்சாடை தவிர்த்தருளிய சுவாமியின் கருவறையைச்சுற்றி பல்வேறு தெய்வங்களைக் காணலாம். தென்பகுதியில் மூன்றுகால், மூன்று கை, மூன்று தலைகளைக் கொண்ட சரதேவரின்

உருவத்தைக் காணலாம். சரதேவரின் முன்கை ஒன்று உடலுக்கு குறுக்கே தொங்கி, வேழ முத்திரையைக் காட்டுகிறது. ஏனைய இரண்டாம் கை அக்கினியை ஏந்தியும், மூன்றாம் கை அபயம் அளிக்கும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

அம்மன் சன்னதி

சுவாமி சன்னதியின் வடபுறத்தில் தெற்கு நோக்கி அம்மன் சன்னதி அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கின்ற தேவியின் பெயர் தவம் பெற்ற நாயகி என்பதாகும். ஒரே இடத்திலிருந்து நச்சாடை தவிர்த்தருளிய சுவாமியையும், தவம் பெற்ற நாயகியையும் வழிபடும் வண்ணம் இரு சன்னதிகளும் அமைந்துள்ளது மிகவும் சிறப்பான அம்சமாகும்.

சேறைத்தல புராணம், பாயிர முதல் திருநாட்டுப்படலம் திருநகரப்படலம், நைமிசாரணிப்படலம், பதிகப்படலம், தலவிசேடப்படலம், தீர்த்தவிசேடப்படலம், மூரத்திவிசேடபடலம், திருக்கயிலாயப்படலம், தருமாசலப்படலம்.

தேவி கங்கை தவம்புரிபடலம், பானுபக வனிட்டைபுரிபடலம், பராசர முனிவர் பாவநிவர்த்தி படலம் அரிபிரமேந்திரர் திருவருள் பெற்ற படலம், பண்ணவர் பூசிக்கப் பலாசமானபடலம், முனிவர் கணம் பூசித்த படலம், வீரபாகுபாண்டியனரசியற் படலம், பிரமகத்திவந்த படலம், விக்கிரம சோழன் போர்புரி படலம், சேறை வனஞ் சென்ற படலம், பிரமகத்திதீர்ந்த படலம், சிவபிரான் சேவகஞ் செய்த படலம், விக்கிரம சோழன் கண் கெடுத்த படலம், விக்கிரம சோழன் கண்கொடுத்த படலம், சேற்றூர் செய்து நதியழைத்த படலம், நச்சாடை தவிர்த்த படலம், ஆலயஞ் செய்த படலம், எருத்தடி காட்டிய படலம், தெய்வதான நகர்விழாச் செய்த படலம், ஆரந்திமிர் சேரற்கு நடனஞ் செய்த படலம், சிவபூசைப் படலம் முடிய 30 படலங்களையும் 250 பக்கங்களையும் கொண்டு விளங்குகின்றது.

அப்படலங்களில் சிலவற்றைக் காண்போம்.

தேவியும் கங்கையும் தவம் செய்தது

இக்கோயிலிலுள்ள கருநெல்லி மரத்தடியில் தேவியும், கங்கையும் இறைவனைக் காணத் தவமிருந்தனர். இறைவன் அவர்களுக்கு காட்சி கொடுத்தான். இதனால் இங்குள்ள தேவிக்குத் 'தவம் பெற்ற நாயகி' என்ற பெயர் ஏற்பட்டது. தேவியர் இருவருக்கும் வேண்டிய வரங்களை இறைவன் கொடுத்தார் தேவியார் விரும்பியபடி அம்மையப்பர் பெயர் நிலவும்படி செய்து பெருமான் பக்கத்தில் ஓர் பாறையில் அமர்ந்தார்.

அப்பாறை 'திருவோலக்கப்பாறை' எனப் பெயர் பெற்றது. இதைப்பற்றி சேறைத்தலபுராணப் பாடல்கள் 67, 69 கூறுவதைக் காணலாம்.

'உம்பர் கள்சூழ் திருவோலக் கமாக
இம்பர் இருந்து இயற்கை குறித்தே
வெம்ப செருது விண்மேற்புகு பாறைக்கு
அம்பர வானவர் அப்பெயர் இட்டனர்'
'சேமம் பெறத்தவம் செய்த வரத்தால்
நாமம் தவம்பெற்ற நாயகி என்று
பூமண் டலத்தொடு பொன்னால கேத்தத்
தாமம் குலத்துத் தமைந்தது வன்றே'

திருவோலக்கம்பாறை மேற்குத் தொடர்ச்சி மலையில் இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் அன்னை தவம்பெற்ற நாயகி ஒற்றைக்காலில் நின்று தவமிருக்கும் கோலத்தைக் கண்டு அனைவரும் அருள்பெறுவர். இவ்வட்டார மக்கள் சித்திரா பௌர் ணமி அன்று சிறப்பான விழா எடுப்பார்கள். கோரையாறு இங்கிருந்து தான் உதயமாகிறது.

சிவபெருமான் பாண்டியனுக்குச் சேவகம் செய்தது

பண்டைக் காலத்தில் வீரபாகு என்னும் பாண்டிய மன்னன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் ஓர் அந்தணனைக் கொன்றமையால் உண்டான பிரமகத்திப் பாவத்தைத் தீர்க்கும் பொருட்டு இத்தலத்தை வழிபட்டான். அவனுடைய பாவம் நீங்கியது. அன்று தொட்டு பாண்டிய மன்னன் சிவநேசச் செல்வனாய் இறையன்பு மாறாமல் வாழ்ந்து வந்தான்.

அக்காலத்தில் சோழநாட்டை விக்கிரம சோழன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் மண்ணாசையால் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்தான். சோழன் தன் படை வலிமையால் பாண்டியனை வென்றான். பாண்டியன் புறமுதுகு காட்டி ஓடி, சேறை வனத்திலுள்ள இறைவன் பால் சரண் புகுந்தான்.

தோல்வியடைந்த பாண்டியனைச் சிறைபிடிக்குமாறு தன் படைகளைச் சோழன் ஏவினான். அக்காலை, இறைவன் அருளால் கோரையாற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளத்தைக் கடக்க முடியாமல் சோழநாட்டு படை இடரெய்தியது. பாண்டியனும் இறைவனின் அருளால் சோழனின் இடர்ப்பாடுகளிலிருந்து தப்பித்துக் கொண்டான்.

சிலநாட்கள் கழித்து சோழன் மறுபடியும் சேறை வனம் நோக்கிப் படை நடத்தி வந்தான். சோழ மன்னனின் கொடுஞ்செயலைக் கண்ணுற்ற அம்மையப்பர் பாண்டியன் கனவில் தோன்றி பாண்டியனுக்கு துணையாக தாமும் தனது பூதகணங்களும் வந்து உதவுவதாகவும், சோழன் தங்கியிருக்கும் பாசறைக்குச் சென்று போர் புரியும் படியும் கூறியருளினார். இக்காட்சிப் பாடலை சேறைத்தலபுராணம் சிவபிரான் சேவகஞ் செய்த படலம், பாடல் நான்கில் காணலாம்.

‘சென்று நேரியன் சேனை புகுந்துநீ
யொன்று பூசலுடற் றுமவ் வேளையிற்
குன்று போலுங் குறட்டை யேவிநாம்
வென்று நல்குவம் வெற்றியுனக் கென்றான்’

பாண்டிய மன்னன் வீரபாகுவும் பரம்பொருள் காட்டிய வழிப்படி தனது பெருஞ் சேனையுடன் சோழன் பாசறை நோக்கிச் சென்று போர் புரிந்தான். சிவபெருமான் கனவிற் கூறியபடியே, போர் வீரனாய்க் கோலம் பூண்டு, சோழனுடன் போரிட்டு பாண்டியனுக்குச் சேவகம் செய்து வெற்றியை ஈட்டித் தந்தார்.
விக்கிரம சோழன் கண்பார்வையை இழந்தான். பாண்டியன் பக்திக்கு இறைவன் இறங்கி அவனுக்குப் படைத் தலைவனாய் சேவகம் புரிந்து சோழனை வென்றமையால் இறைவனுக்கு ‘சேவகத்தேவர்’ என்னும் பெயர் உண்டாயிற்று

'விழிமறைந்தது கண்டஞ்சி வேந்தனு மீண்டபோதில்
இழிவுறச்சிவி கைதோளிலேந் துவோர்சுமை போகாமல்
வழியினிற் காறள்ளாடிமண் விழவளவன் வீழ்ந்தான்
அழிவுறச்சுமந் தான்வீழ வன்வசுமைக் குடம்வீழ்ந்தென்ன'

என்ற சேறைதலபுராணம் - விக்கிரம சோழன் கண்கொடுத்த படலத்தில் 24-வது பாடலைக் காணலாம்

கண்பார்வையை இழந்த சோழன் தன்கொடுஞ் செயலுக்கு வருந்திப் பாண்டியனுடன் நட்புக் கொண்டான். இறைவனை நாள் தோறும் வணங்கித் தனக்குக் கண் கொடுக்குமாறு வேண்டினான். இறைவனும் அவன் பக்திக்கு இணங்கி கண் பார்வையைக் கொடுத்தான். சோழனும், பாண்டியனும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். இறைவன் கண் கொடுத்ததால் சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் அமைத்து பெருமானையும், தேவியையும் எழுந்தருளச் செய்து வழிபட்டான். 'திருக்கண்ணீசர்' என்ற பெயருடன் வழங்கும் இக்கோயில் சேத்தூரில் உள்ளது. இதைப்பற்றி சேறைத்தலபுராணம் விக்ரம சோழன் கண் கொடுத்த படலத்தில் 30, 31-வது பாடலில் காணலாம்.

'நாதனருட்படி கோயினாடி முறைப்படி தேவும்
வேதவிதிப்படி யாகமேவ விருந்தின போது
பாதம்வழுத்திட வேயோர் பார்வைவரக் கனிவோடு
தீதறவுத்தர கீழ்பாற்சேர் திசையிற்றனியேகி'
'ஆலயமொன்று புதுக்கியாள் சிவலிங்க நிறுத்தி
யேல்வழியொன்று பெறக்கண் ணீசரெனும் பெயரிட்டு
ஞாலம் விரும்பழகுக்கு நாயகியும் புடை வைத்துச்
சோலை வளந்தனை யுற்றுஞ் சோழனிந்தன னிப்பால்'

நச்சாடை தவிர்த்தது

சிலகாலங் கழித்து கெடுமதியினரின் பேச்சைக் கேட்ட விக்ரமசோழன், பாண்டியன் வீரபாகுவைக் கொல்லும் எண்ணத்தோடு நச்சு தோய்ந்த ஆடை ஒன்றை தயாரித்து அதைப் பாண்டியனுக்குப் பரிசாகக் கொடுத்தான். அந்த ஆடையை அணிந்தவர் எரிந்து சாம்பலாகிவிடுவர்.

இறைவனின் அருளால் சோழனின் சதித்திட்டத்தைப் பாண்டியன் அறிந்தான் தனக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட நச்சாடையைக் கொடுத்தவனுக்கே போர்த்தினான். 'தன் வினையே தன்னைச் சுடும்' என்னும் பழமொழிக்கேற்ப அவன் எரிந்து சாம்பலானான்.

பாண்டியன் வீரபாகுவை நச்சாடை அணியவிடாமல் தவிர்த்துக் காப்பாற்றிய காரணத்தால் இறைவனுக்கு நச்சாடை தவிர்த்தருளிய தேவர் என்னும் பெயர் ஏற்பட்டது. பாண்டியனும் இறைவனுக்குப் புதிய கோவில் கட்டி, நாள் வழிபாட்டிற்கும் ஏற்பாடுகளைச் செய்தான். இதைப்பற்றி சேறைத்தலபுராணம்- நச்சாடை தவிர்த்த படலம்- பாடல் 46-இல் காணலாம்.

சோதி வல்விடத் துகில் கற்றலால்
ஆதி நாமம் நச்சாடை தீர்த்தருள்
நிதியா னென நிகழ்த்தி நித்தமும்
ஓதியாற்று தித்து உயர்ச்சி எய்தினான்

பாண்டிய மன்னன் நச்சாடை கொண்டு வரும் தூதுவனை எதிர் நோக்கியிருந்தான் என்பதை விளக்கும் சேறைத்தலபுராணம் நச்சாடை தவிர்த்த படலம் பாடல் 8-இல் காணலாம்.

'எண்ணியங்கு நேரிய னிருப்ப வந்த எல்லியிற்
புண்ணியன் பணிந்த தொண்டர் புண்படாது காப்பவன்
நண்ணியன்பு செய்வபோல் நச்சையூட்டு மோர்கனர்
மண்ணின்முன் பகைத்த சோழன் வரவிருப்பன் நாளையே'

தூதுவன் கொண்டு வந்த நச்சாடையை தூதுவன் மேலேயே போர்த்திய செயலை சேறைத்தலபுராணம் - நச்சாடை தவிர்த்த படலம் பாடல் 9, 18-இல் காணலாம்.

'வந்தபோதில் அந்தஆடை வாங்கிவந்த தூதன்மேல்
வெந்துபோம் படிக்குவேய்ந்த மேவும் ஊறுதீரென
அந்தமாதி யில்ல வன் அறைந்த உண்மையை தேறியே
சந்தமா றுமொய்ம் பினான் தலைவன் தான் வழுத்தினான்'

'அடைத்த முத்திரித்த பூட்டவன் கையால் விடச்சொலிக்
கிடைத்த கைப்பிரம் பிலேற்றிக் கிட்டவே வரச்சொல்லிப்

படைத்த நஞ்சினாடை யந்தபாவி மீது போர்த்தினான்
துடைத்த வன்சரீர முற்றும் துய்யநீறு செய்ததே'

பாண்டிய மன்னனைக் கொலை செய்ய சோழ மன்னன் ஆந்த்ராக்ஸ் அனுப்பினார்

2001 அக்டோபர் 13-ல் நடைபெற்ற சம்பவமான ஆந்த்ராக்ஸ் விசக்கிருமிகள் பற்றிய பீதி அமெரிக்காவையே கதி கலங்க வைத்தது அறிந்ததே. அத்துடன் நின்று விடாமல் உலக நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்தது. உலக நாடுகளுக்கு இது புதுமையான செய்தியாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாண்டிய மன்னனைக் கொலை செய்வதற்கு சோழ மன்னன் ஆந்த்ராக்ஸ் விஷக்கிருமிகளை அனுப்பி வைத்தான் என்று சேறைத் தல புராணம் கூறுகிறது. இராசபாளையத்திற்கு தென்மேற்கில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் தேவதானம் பெரிய கோவில் உள்ளது. இக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

பஞ்சஸ்தலங்களில் ஒன்றான ஆகாயலிங்கத்தைக் கொண்டுள்ள இறைவன் லிங்கவடிவில் எழுந்தருளியுள்ளார். இந்த இறைவனே பாண்டிய மன்னனை ஆந்த்ராஸ் விசக்கிருமிகளிடமிருந்து காப்பாற்றினார். அதனால், இவருக்கு நச்சாடை தவிர்த்த சுவாமி என்னும் பெயர் ஏற்பட்டது. இது பற்றி வரலாறு கூறுவதாவதுः- பண்டைக்காலத்தில் பாண்டிய மன்னன் வீரபாகு அந்தணனைக் கொன்ற பாவத்தைப் போக்குவதற்கு இக்கோயிலுள்ள இறைவனை வழிபட்டு வந்தான். அவனுடைய பாவமும் நீங்கியது. அன்று முதல் பாண்டிய மன்னன், சிவனேசச் செல்வனாய் இறையன்பு மாறாமல் வாழ்ந்து வந்தான். அப்போது சோழ மன்னன் விக்கிரம சோழன் (கி.பி. **1116-1135**) மண் ஆசையால் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்தான். சோழ மன்னனின் கொடுஞ் செயலை கண்ட இறைவன், தானே பாண்டியனின் படைத் தலைவனாக வந்து சேவகம் செய்தார். பாண்டியனை வெற்றியடையச் செய்தார். விக்கிரம சோழனுக்கு

கண்பார்வையை இழக்கும்படி செய்தார். விக்கிரம சோழன் தன்னுடைய கொடுஞ்செயலுக்காக வருந்தி இறைவன் கோயிலில் வந்து வணங்கினான். அவனுடைய பக்திக்கு இணங்கி சோழ மன்னனுக்குக் கண் பார்வையைக் கொடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு கெடுமதியினருடைய பேச்சைக் கேட்டு, விக்கிரம சோழன் நேருக்கு நேர் நின்று சண்டையிடாமல் மறைமுகமான முறையில் பாண்டியனை கொலை செய்ய முடிவு செய்தான். நச்சு தோய்ந்த ஆடையைத் தயார் செய்தான். அந்த ஆடையை அணிந்தவர் உடனே எரிந்து சாம்பலாகி விடுவர்.

சோழனுடைய தீய எண்ணத்தை அறிந்த இறைவன் பாண்டிய மன்னனுடைய கனவில் தோன்றி நச்சு ஆடையை கொண்டு வரும் தூதுவனுக்கே அணிவிக்கும்படி சொல்லி மறைந்தார்.

இறைவனின் அருளால் சோழமன்னனின் சதித்திட்டத்தை அறிந்த பாண்டியன், தன்னிடம் கொடுக்க வந்த நச்சாடையை தூதுவனிடமிருந்து வாங்கி, அவனுக்கே போர்த்தினான்.

ஆடையை அணிந்த மாத்திரத்தில் தூதுவன் எரிந்து சாம்பலானான். இந்தக் காலத்தில் கடிதங்களின் மூலம் ஆந்த்ராக்ஸ் விஷக்கிருமிகளை அனுப்பியதால் ஒரு பத்திரிகை ஆசிரியர் மரணம் அடைந்தார். ஆனால் அந்தக்காலத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நச்சு தோய்ந்த ஆடையின் மூலம் விசக்கிருமிகளை அனுப்பினான் சோழ மன்னன்.

சோழமன்னனின் தூதுவனே அந்த நச்சாடைக்குப் பலியானான். அந்தக் காலத் தமிழனின் அறிவியலைப் போற்றிப் பாராட்டுவோமாக. (தின பூமி 9-1-2002 ந. இராசையா)

பாண்டியன் வீரபாகு தனக்கு ஆபத்தில் உதவிய பெருமானைப் போற்றி புகழ்ந்து பல திருப்பணிகள் செய்தான் சோழனும் தான் செய்த தவற்றை எண்ணி வருந்திப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் செய்தான். தான் தங்கிய பாசறைக்கு ‘விக்கிரமபாண்டியன்’ எனப் பெயரிட்டு சோழபுரம் என்ற ஊரையும்

அமைத்தான், அதன் பின்னர் விக்கிரமசோழன் சோழநாடு சென்றான்.

இந்த விக்கிரம சோழன் (1118-1135) என்பவன் முதலாம் குலோத்துங்க சோழனின் (1070-1120) நான்கு புதல்வர்களில் இளையோனாவான். இவன் பட்டமேற்றது 1118 என்று குறிப்பிடப்பட்டாலும், தந்தையின் சார்பாக அரசப் பிரதிநிதியாக இவனே தலைமை தாங்கிப் போரை வழிநடத்திய செய்தி வரலாற்றில் காணப்படுகிறது. குறிப்பாக 1093-இல் வேங்கிநாட்டு அரசப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டான் என்று தெரிகிறது.

மேலும் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்ததாக சோழவரலாறு கூறுகிறது. 1081-இல் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். அப்போது பாண்டியர்கள் ஐவர், பாண்டிய நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஆட்சி செய்துவந்தனர். அப்பாண்டிய மன்னர் ஐவரும் உடன்பிறந்தவராகவோ, தாயாதியாகவோ இருத்தல் வேண்டும். குலோத்துங்கன் படைக்கு ஆற்றாமல் பாண்டியர் ஐவரும் தோற்றோடி மறைந்தனர். அவ்வாறு தோற்ற பாண்டியர் ஐவரும் யாவர் என்பதும், அப்போர் நடந்தது எவ்விடத்தென்பதும் அறிதற்கில்லை என்று சோழவரலாறு (பக்கம் 314-315, டாக்டர். கே.கே. பிள்ளை) கூறுகிறது.

இதை ஆதாரமாகக் கொண்டு பார்க்கின்ற பொழுது குலோத்துங்க சோழனின் பிரதிநிதியாக அவன் மகன் விக்கிரம சோழனே இப்பகுதியில் பாண்டியர் வீரபாகு என்பவனுடன் போரிட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இந்த விக்கிரமசோழன் தங்கியிருந்த பாசறை அண்மையி-லுள்ள சோழபுரமாகும். அவன் அவ்வூரை அமைத்ததால், அதற்குச் ‘சோழபுரம்’ என்றும் ‘விக்கிரமபாண்டியபுரம்’ என்றும் பெயர் ஏற்படலாயிற்று.

சோழர்களது ஆதிக்கம் பாண்டிய நாட்டில் (966-முதல் 1119 முடிய) இருந்ததாகத் தெரிகிறது. சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியனுக்குப் பிறகு பாண்டிய நாட்டின் சோழபாண்டியப் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டவன் மாறவர்மன் விக்கிரம சோழ-பாண்டியனாவான் என்றும்; இவனுடைய கல்வெட்டுகள் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் காணப்படுகிறது என்றும் பாண்டிய வரலாறு-இராசசேகர தங்கமணி (பக்கம் 393) கூறுகிறது.

எனவே தேவதானம் வரலாற்றில் கூறப்படும் விக்கிரம சோழன், குலோத்துங்க சோழனின் மகனேயாவான்.

சுற்றுக் கோயில்கள்

கருவறை

அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயிலின் கருவறை சதுரவடிவமானது, அதன் உட்பக்கம் 2 மீ. 88 செ.மீ. கருவறையைச் சுற்றியுள்ள தேவகோட்டங்களில் சிலைகள் ஏதும் முன்பு அமைக்கப்படவில்லை. தற்போது உள்ளவை அண்மைக் காலத்தில் செய்யப்பட்டவை. அதிட்டான வர்க்கங்களான உபானம், ஜகதி, கண்டம், முப்படை குமுதம், பட்டி ஆகியவரிகள் முறையாக அமைந்துள்ளன. தேவகோட்டச் சுவரின் பக்க வாட்டில் இருபுறமும் கும்பலதாக்கள் உள்ளன.

கோயில் கருவறையில் சதுரவடிவமான ஆவுடையார் மட்டும் வழிபாட்டில் உள்ளது. பிரம்மா விஷ்ணு ருத்திர பாகங்களுடன் அடங்கிய லிங்கம் உள் அடங்கியதாக ஐதீகம். கருவறையின் முன்புறத்தில் இரண்டு பலகைக் கற்கள் முன்னோக்கி வந்துள்ளன. அதன் பக்க வாட்டில் இரண்டு தூண்கள் உள்ளன. அவை கால், உடல், கலசம், கும்பம், பத்மம், பலகை ஆகிய பகுதிகளைக் கொண்டவை. 3 மீ, 35 செ.மீ உயரமுடையவை. இவற்றின் இடையே கும்பஞ்சரம் உள்ளது.

விமானம்

அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமியின் கருவறையின்மேல் இருதள விமானம் அமைந்துள்ளது. இரண்டு தளங்களும் சாலைகளாலும், கூடங்களாலும் அலங்கரிக்கப்

-பட்டுள்ளன. முதல் தளத்தின் வடதிசையில் நான்முகனும், தென் திசையில் தெட்சிணாமூர்த்தியும், மேல் திசையில் திருமாலும், கீழ்த்திசையில் ரிசபாருடரும் காட்சி கொடுக்கின்றனர். இவையாவும் நல்ல சுதைச் சிற்பங்களாகும். நான்கு கோடிகளிலும் அழகிய நந்திகள் அமைந்துள்ளன. கிரிவம் எண் பட்டை வடிவமானது. கிரிவத்தில் அழகிய கூடுகளோடு கூடிய தேவகோட்டங்கள் எண் திசை வளையும் நோக்கியவாறு அமைந்துள்ளன. இதில் வனப்புடைய தெய்வச் சிலைகளைக் காணலாம். இதன் சிகரம் கிரிவத்தைப் போன்று எண் கோண வடிவமான திராவிடச் சிகரமாகும். அதன் மீது மகாபத்துமமும் ஸ்தூபியும் உள்ளன. இவ்விமானம் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அண்மைக் காலத்தில் இதன் பழமை அமைப்புக் கெடாதவாறு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபம்

கருவறையை ஒட்டியுள்ள அர்த்த மண்டபம் செவ்வக வடிவமானது. அதன் உட்பக்க நீளம் 5.90 மீ, அகலம் 3.75மீ. அதன் வெளிப்பக்க அளவு 6 மீட்டர் ஆகும். அர்த்தமண்டப வாயில் பக்கவாட்டில் இரண்டு அரைத்தூண்களும், இவற்றை ஒட்டி இரண்டு தூண்களும் அணி செய்கின்றன. இவை சதுரம் எண்பட்டை ஆகிய வடிவமைப்புக்களால் மாறிமாறி கட்டப்பட்டு, உச்சியில் யாளியையும், பூ வேலைப்பாடுகளையும் தாங்கி நிற்கிறது. இதன் உயரம் 2.65 மீட்டர்.

அர்த்த மண்டபத்தின் வாயிலை இரண்டு துவார பாலகர்கள் காத்து நிற்கின்றனர். இவற்றில் ஒன்று வலக்கையால் வன்மயம் முத்திரை காட்டி, இடக்கையை கதையில் மேல் கொண்டு, காத்து நிற்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. மற்றொன்று இடக்கையை கதையின் மேல் கொண்டு, காத்து நிற்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. மற்றொன்று இடக்கையை கதைமேல் கொண்ட வலக்கையால் முத்திரைகாட்டி தத்ரூபமாக வடிக்கப் பட்டுள்ளது.

இக் கோயிலின் கருவறையும், அர்த்த மண்டபமுமே பழமையான பாகங்களாகும். அவை பிற்காலப் பாண்டியர் கட்டிடப் பாணியாகும்.

அம்மன் சன்னதி

இங்கு இறைவி தவம்பெற்ற நாயகி நின்ற நிலையில் அருள்பாவிக்கின்றாள். விமானம் சாலை வடிவமானது. விமானத்தின் முதல் தளத்தைக்கூடும் சாலையும் அலங்கரிக்கின்றன. முன்னால் நந்தியின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோயில் 14, 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

திருச்சுற்றுத் தெய்வங்கள்

அருள்மிகு நச்சாடை தவிர்த்த சுவாமி கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள முதல் திருச்சுற்றில் பல்வேறு தெய்வங்களின் தோற்றத்தைக் காணலாம். தென்பகுதியில் சரதேவன் உருவத்தைக் காணலாம். இதனுடைய அமைப்பைப்பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். இது கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

முருகப்பிரான்

சதுர் புசங்களுடன் காணப்படும் இவ்வுருவம் பின் இரு கரங்களில் சக்திப் படையும், வச்சிரப்படையும் ஏந்தி முன்கை வலக்கையால் அபயம் அளிக்கிறது. இதன் முன் இடக்கை தொடையின் மீது உள்ளது. இவ்வுருவத்தின் நெற்றியில் கன்னியும், மார்பில் சன்னவீரமும், வயிற்றில் உதரபந்தமும், இடையில் ஆடையும் அணி செய்கின்றன. இதன் உயரம் 91 செ.மீ. இவ் வட்டார மக்கள் இச் சிலையை சப்த கன்னியருடன் இணைத்து வீரபுத்திரர் எனக் குறிப்பிடுவது பொருத்தமற்றது. இவ்வுருவம் முருகப் பிரானுடைய சிற்பமாகும். இதுவும் பாண்டியர் காலத்ததாகும்.

கன்னியர் எழுவர்

தென்புறச் சுற்றாலையில் கன்னியர் எழுவருக்கும் அழகிய கற்சிலைகள் உள்ளன. இவைகள் யாவும் நான்கு கைகளுடன் காணப்படுகின்றன. அனைவருடைய முன் இடக்கை தொடையின் மீதும், வலக்கை அபயமளிக்கும் நிலையிலும் காணப்படுகின்றன, இடதுகால் மடித்து வலதுகால் தொங்கிய நிலையில் அமைந்துள்ளன.

பிராமிகைகளில் கெண்டியும், அக்கமாலையும் உள்ளன. மகேசுவரியின் கைகளில் மழுவும், மானும் ஏந்திய நிலையில் உள்ளன. கௌமாரி சக்திப்படையும், வச்சரப்படையும் தாங்கியுள்ளாள். வைணவியும் வராகியும் ஆழியும் சங்கமும் ஏந்தியுள்ளனர். இந்திராணி கையில் சக்தியும் வச்சிரமும் உள்ளன. எல்லோர்க்கும் இளைய நங்கையான சாமுண்டா அங்குசமும், திரிசூலமும் ஏந்தி, விரித்தசடையுடன் காட்சியளிக்கிறாள். கல்லிலே கலைவண்ணம் கண்ட இச் சிலைகள்யாவும் கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப் பாண்டியர்கள் வழங்கியதாகும்.

யோகீஸ்வரர்

யோகீஸ்வரரின், உருவம் அடுத்துள்ளது. பின் கைகளில் முத்தலை சூலமும், மானும் ஏந்தி, முன் வலதுகையால் கடக முத்திரை காட்டும் நிலையில் உள்ளது. முன் இடக்கை தொடையின் மீது உள்ளது. இதன் காலையும் இடுப்பையும் இணைக்கும் யோகப் பட்டமும், விரிந்த ஜடாபாரமும், முகத்தில் தோன்றும் அமைதியும், தெளிவும் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

துர்க்கை

இதனை அடுத்துள்ள விஷ்ணுதுர்க்கையின் சிலையும் கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததே. ஆழியும் சங்கமும் ஏந்திய தேவியின் முடியை கரண்ட மகுடமும் காதுகளில் பத்திர துண்டமும் அணிசெய்கின்றன.

அறுபத்து மூவரின் சிற்பங்களும் முதல் சுற்றாலையின் தென்பகுதியில் உள்ளன. இவை சேத்தூர் ஜமீன்தார்களால் செய்துவைக்கப்பட்டவை.

முதல் திருச்சுற்றின் மேற்கே சோமஸ்கந்தர், மகாலட்சுமி பஞ்சலிங்கம், முருகன் முதலியோருடைய சந்நிதிகள் உள்ளன வடக்கே சண்டிகேசுவரர், நவக்கிரகங்கள், அம்மன் தவம் பெற்ற நாயகி சந்நிதிகளும் உள்ளன.

இரண்டாம் பிரகாரத்தில் கிழக்கில் மடப்பள்ளியும், சரக்கொன்றை மரமும்; திருமலைக் கொழுந்தீசுவரர் கோயிலும் மேற்கில் உள்ளன. தலத்துக்குரிய மரமான சரக்கொன்றைக்குக் கீழ் தேவி தவம் செய்ததாக ஐதீகம். எனவே தான் இறைவிக்குத் தவம் பெற்ற நாயகி என்ற பெயர் ஏற்பட்டது.

திருமலைக்கொழுந்தீசர்

இரண்டாம் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் திருமலைக்கொழுந்தீசுவரர் ஆலயம் உள்ளது. இங்குள்ள திருமலைக்கொழுந்தீசர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். பகவான் பாறையின் மேல் சித்தாந்தமாக தோன்றியுள்ளதாக ஐதீகம். இறைவன் கருவறை சதுரவடிவமானது. விமானம் நாகர வகையைச் சார்ந்தது. இக்கோயில் முக மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. பிற்காலப் பாண்டியர்களால் தோற்றுவிக்கப்பட்ட இக்கோயில் கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டில் கேரள மன்னர்களாலும், சேத்தூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஜமீந்தார்களாலும் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் பிரகாரம் வெளிவீதியின் முன்புறம் நுழை வாயிலுக்குப் பக்கத்தில் அழகிய மண்டபத்துடன் கூடிய தெப்பக்குளம் உள்ளது. தென்புறத்தில் பூதத்தான் கோயிலும் தாமரைத் தடாகமும் உள்ளது. மேற்கில் நகரைக்குளமும் வடக்கே சாஸ்தா கோவிலுக்குச் செல்லும் பெரும்பாதையும் உள்ளது.

மண்டபங்கள்

இக்கோயிலின் பெருமைக்கும், புகழுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது மண்டபங்களாகும். இந்த மண்டபங் -களில் அழகான சிற்பங்கள் அழகுக்கு அழகு செய்கின்றன.

மகாமண்டபம்

இந்த மண்டபம் செவ்வக வடிவமானது இம்மண்டபத்தின் விதானத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் யாவும் எளிமையான அமைப்பை உடையன. முதலாவது தூணில் இரண்டு வரிகளில் தமிழ் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதன் வாசகம் 'வீரபாண்டியச்செகிலியர் தன்மம்' என்பதாகும். இந்தக் கல்வெட்டு கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

வீரபாண்டியச்செகிலியர்

மகா மண்டபத்தின் இரண்டாவது தூணில் முன் குடுமிவைத்த அடியவரின் சிலை ஒன்று அஞ்சலித்த நிலையில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. எளிமையான இவ்வுருவம் காதிலும், கழுத்திலும் அக்கமாலை தரித்து அரையில் ஆடை அணிந்து காட்சி அளிக்கிறது. இவ்வுருவம் 60 செ.மீ. உயரம் உடையது. கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள வீரபாண்டியச் -செகிலியர் இவராக இருத்தல் வேண்டும். கல்வெட்டில் எழுத்தமைதியும் அடியவரின் உறுவமைதியும் கி.பி 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதும் தெரிகிறது. எனவே கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இம்மகா மண்டபம் வீரபாண்டியச் -செகிலியரால் எடுப்பிக்கப்பட்டதாகும்.

மணிமண்டபம்

மணிமண்டபத்தை அழகான சிற்பத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களில் தாருகா வனத்துக் காட்சி ஒன்று தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தேவதானம் பெரியகோவில்

சிவபெருமான் நீண்ட சடைமுடி தரித்து, காலிலே ஒலிமிக்க காலணி அணிந்து, வீதிதோறும் பிச்சை எடுக்கும் பெருமானாக, எழில் வாய்ந்த திருவுருவாய் எழுந்தருளியுள்ளார். அருகிலேயே தட்டைத் தலையிலே தாங்கி வரும் குள்ளச் சிறுபூத கணமும் துள்ளிக் குதிக்கும் மாறும் காட்டப்பட்டுள்ளன.

இதைக் கண்ட தாருகா வனத்துப்பத்தினிப் பெண்டிர் நால்வர் இவர்களில் அண்ணலின் அழகிலே தன்னை மறந்து வியந்து நிற்கும் மங்கை ஒருபுறம்; சிவபெருமான் முகத்திலே தோன்றும் சிறுமுறுவல் கண்டு சிந்தை இழந்த நங்கை ஒருபுறம்; நாயகனைக் கண்ட நாணத்தால் இடையே உள்ள ஆடை நெகிழ, ஒரு கரத்தால் துகில்பற்றி, மறுகரத்தால் உடல் மறைத்து தம்மை மறந்து நிற்கும் நாயகியின் தோற்றம் ஒருபுறம்; பிச்சை அளிக்கும் முன்பு எம்பெருமான் எழில் கண்டு இன்புற்று, முன்கை வளை நெகிழ. ஒருகையிலே கரண்டியுடன் செயலற்று நிற்கும் நங்கை மற்றொருபுறம்; இவ்வாறு சிற்பங்கள் எங்கும் அழகுக் கோலம் கொண்டு காட்சி அளிக்கிறது.

மணிமண்டபத்தின் விதானத்தின் கீழ்ப் பல்வேறு இசைக் கருவிகளை ஏந்திய கலைஞர்களின் தோற்றம் சித்தரிக்கப்பட்டுள்ளது. அடுத்து இசைக்கேற்ப தம் உடலை வளைத்து நடனமாடும் நாட்டிய கலைஞர்களின் தோற்றங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து அங்குசம் பாசம் ஏந்திய நர்த்தன கணபதி அஞ்சலித்த அனுமன், அரசனைத் தொடர்ந்துவரும் அசுவம், எருமைத்தலை அரக்கனை நீண்ட முத்தலைச் சூலத்தால் சம்காரம் செய்யும் தேவி, மயில்வாகனன், வலக்கையிலே கதை ஏந்திய புலிக்கால் முனிவன், கூனிக்குறுகிய முதியோன், காணிக்கையுடன் வந்து நிற்கும் அடியவர் ஆகிய சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் கி.பி 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நுட்பமான சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ஊஞ்சல் மண்டபம்

இம்மண்டபத்தில் இடம்புரி விநாயகர், கையிலே வெண்ணெய் ஏந்திய நவநீத கிருஷ்ணனின் அழகிய சிலைகள் வழிபாட்டில் உள்ளன.

நந்தி மண்டபம்

இம் மண்டபத்தைப் பத்துத் தூண்கள் தாங்கிநிற்கின்றன. இவையாவும் எண் பட்டை வடிவானவை. இம் மண்டபத்தின் நடுவே அழகிய நந்தி அமர்ந்துள்ளது. இவ்விடையின் குறுங்கொம்பும், பக்கவாட்டில் விரிந்த செவியும் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள தூண் ஒன்றில் இம்மண்டபத்தை எடுப்பித்தருளிய அடியாரும், அவர் தேவியும் அஞ்சலித்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

நந்திமண்டபத்தைச் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்றாலையில் காணப்படும் திண்ணைகளின் மீது பைரவர், சந்திரன், சூரியன், அதிகார நந்தி ஆகியோரின் அழகிய கற்சிலைகள் தோற்றம் அளிக்கின்றன.

அடுத்து சதுர்புஜங்களில் உடுக்கை, பாசம், திரிசூலம், கபாலம் ஏந்திய பைரவரும், அல்லி மலர் ஏந்திய சந்திரனும் பின்கைகளில் மானும். மழுவும் ஏந்தி, முன்கைகளை அஞ்சலித்து நிற்கும் அதிகார நந்தியும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் செய்தளிக்கப்பட்ட சிறபக் கலையாகும்.

கம்பத்தடி மண்டபம்

இப்பெரிய மண்டபம் செவ்வக வடிவமானது. இம் மண்டபத்தை 18 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்களின் கீழ் அன்னப்பறவைகள், அர்ச்சுனன் தபசு, ஆடு மேய்க்கும் இடையன், குறமகள், லிங்கம், சேறை அரசன் மனைவி ஆகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அம் மண்டபத்திற்குள் நுழைவு வாயிலுக்கு

அருகிலேயே சேறை மன்னர்களான ஆதி சின்மயத்தேவர், ஆதி சின்மயத்தேவரின் மனைவி மனோன்மணி நாச்சியார் ஆகியவர்களின் சிலைகள் மிக அழகாக அமைந்துள்ளன.

இத்தூண்களின் மேலும் விதானங்களின் கீழும் பல்வேறு சிற்பங்கள் உள்ளன. அவற்றில் அசுரனின் காலை கவ்வி நிற்கும் காட்டுப் பன்றி, அன்னம், மலர்கள், புலி, பிராண மிருகமான யாளி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இம்மண்டபத்தின் மேற்குப் பக்கவாட்டில் ஆறுமுகனுக்கும் சித்தி விநாயகருக்கும் எடுக்கப்பட்ட இரு சன்னதிகள் உள்ளன இச்சன்னதியில் இருபெருந் தெய்வங்களும் சிறப்பாக அமைந்து காட்சி கொடுக்கின்றன.

இம்மண்டபத்தின் நடுவே கொடிமரம் என்று அழைக்கப்படும் கம்பம் உள்ளது. இக்கம்பத்தின் அருகில் நீண்டபெரும் ஆமையின் உருவம் ஒரே கல்லில் செய்து தரையில் பதிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி பக்கம் 11-12 இல் குறிப்பிட்டுள்ளேன். கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கேரளப் பாணியை வெளிப்படுத்துகிறது.

சேறை அம்பலம்

கம்பத்தடி மண்டபத்தை ஒட்டி வடபுறம் சேறை அம்பலம் உள்ளது இவ்வம்பலத்தின் உட்சுவற்றை நான்கு தூண்களும், வெளிச் சுவற்றை ஆறு தூண்களும் தாங்கி அணி செய்கின்றன. உட்சுற்று நடுவே அழகிய மேடை ஒன்று உள்ளது. இதன் மேல் பகுதியை நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட மரவிமானம் அலங்கரிக்கின்றது.

மரச்சிற்பங்கள்

இதன் உட்புறத்தில் சிம்ம வாஹன, அஷ்டபுஜதேவி, எருமை மேல் வரும் காலன், காலனைக் கடித்த கந்த காலரி மூர்த்தி, அண்ணலின் அடியை நம்பி தஞ்சம் புகுந்த மார்க்கண்டேயன் ஒற்றைக் காலில் தவம் செய்யும் இரு முனிவர்கள், சிவபிரான்,

பிச்சாடனர், மூஷிகவாகனத்தின் மேல் விநாயகர், அசுரனை சம்காரம் செய்யும் சிவபிரான், ஊர்த்துவதாண்டவ மூர்த்தி, ஏறு ஊரும் பெருமாள், ஐந்து தலையையுடைய சதாசிவன், மலைமகள் மணாளனாகத் தோன்றும் கல்யாண சுந்தரமூர்த்தி அடியார்கள், சாமரை தாரணி, மயில்வாகனர், வள்ளி தெய்வயானை, பதஞ்சலி, வியாக்கரபாதர், கையிலே துலாக்கோல் தாங்கி நிற்கும் ஐந்து தலை உருவம், தும்புரு, குடமுழா வாசிக்கும் நந்தி, ஆடவல்லான் சிவகாமசுந்தரி, குழல் ஊதும் வேணுகோபால் அன்னவாகனத்தில் வரும் நான்முகன், நாரதர், பைரவர், அன்னத்தின் மீது நின்று கரும்பை வளைத்து மலர் கரத்தால் அம்பு எய்தும் காமன், கிளிமேல் எதிர்வரும் ரதிதேவி, காக்கை வாகனத்தில் தோன்றும் சனீஸ்வரன், சூரியன், சந்திரசேகர மூர்த்தி விஷ்ணு, நந்திதேவர், பிரும்மா, மச்சாவதாரமூர்த்தி ஆகியோரின் சிற்பம் மேல் வரிசையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் சுமார் 15 செ.மீ. உயரமுடையவை.

விமானத்தின் கீழ்வரிசையில் இராமாயண இதிகாசக் காட்சிகள் தொடர்ந்து சித்தரிக்கப்பட்டுள்ளன. இதில் அசோக வனத்தில் சீதையின் தோற்றம், அசோக வனம் நோக்கி அனுமன் செல்லல், சீதையிடம் கணையாழி அளித்தல் ஆகிய இராமாயணக் காட்சிகளைக் காணலாம்.

அடுத்து, தவம் செய்யும் பெரியோன், தசாவதாரங்கள், குழல் ஊதும்பிள்ளை, குழந்தைப் பேறுபெறும் தாய், தாயின் பக்கத்தில் துணை இருக்கும் பணிப்பெண்கள் ஆகிய உருவங்களைக் காணலாம். இதன் பக்கவாட்டில் கேரள அரசனும் தேவியும் காட்டப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து பாம்பணையில் பள்ளி கொண்ட பெருமாள், அண்ணலின் அருகிலே உள்ள நிலமகள் கையிலே சாமரை ஏந்திய பணிப்பெண், அரக்கியின் தனத்திலே பால் குடிக்கும் கண்ணன், கோவர்த்தனன், நர்த்தனமாடும் கண்ணபிரான் கோகுலத்துக் கோபியர்களின் ஆடைகளைக் கவர்ந்து சென்ற மாயையை நீக்க முனையும் கண்ணன், தடாகத்தில் ஆடை இழந்து

தம் நிலை மறந்த, காரணத்தால் உடல் மறைத்து நிற்கும கோபியர் எழுவர் ஆகிய வைணவச் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இதையடுத்து சிருங்கம் என்னும் முனிவனையும் முனிகணங்களையும் காணலாம். இவை யாவும் கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கேரளச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

ஓவியம்

சேறை அம்பலத்திற்குச் செல்லும் வாயிலின் பக்கச் சுவரில் மூஷிக வாகனத்தின் மேல் தேவியுடன் பவனிவரும் வல்லப கணபதியின் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. கணபதி தம் எண்கரங்களில் சங்கு, சக்கரம், அங்குசம், பாசம், கத்தி, கேடயம், தத்தம் ஆகிய ஆயுதங்களை ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளனர். எஞ்சிய முன் இடக்கரத்தால் தேவியை ஆலிங்கனம் செய்து, மூஷிக வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளார். தேவி பெருமாளின் இடது தொடையின் மீது அமர்ந்து காட்சியளிக்கிறார். தேவியின் வலக்கரம் பத்மம் ஏந்தியும் இடக்கரம் தொடையின் மீதும் உள்ளன. வல்லப கணபதியின் உருவம் மஞ்சள் நிறத்திலும், தேவியின் உருவம் பச்சை வண்ணத்திலும், ஆடை சிவப்பு நிறத்திலும், தீட்டப்பட்டுள்ளது. மூஷிகம் நீலநிற வண்ணத்திலும் தீட்டப்பட்டுள்ளது. இவை கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கேரளப் பாணியில் தீட்டப்பட்ட ஓவியமாகும்.

வார்ப்புக்கலை

நம் நாட்டில் உலோகத்தால் விக்கிரகங்களை செய்யும் கலை பண்டைக்காலம் முதல் இன்று வரை வளர்ந்து வந்துள்ளது. தென்னகத்தில் சோழர் காலத்து வார்ப்புக்கலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது அதனை அடுத்துப் பிற்காலப் பாண்டியர் காலத்திய சிலைகளைக் கூறலாம். அவற்றில் சில இக்கோயில் வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளன.

தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவிலுக்குப் பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் சேத்தூர் குறுநில மன்னர்களும் (பாளையக்காரர்கள்) உற்சவ விக்கிரகங்கள் செய்து கொடுத்துள்ளார்கள். இவையாவும் கனமாகச் செய்யப்பட்ட செப்புத் திருமேனிகளாகும்.

தேன் மெழுகுமுறை

தமிழகக் கலைஞர்களால் தெய்வ உருவங்களை மெழுகால் முதலில் செய்து, பின் அச்சில் அமைத்து, மெழுகை உருக்கி வெளியேற்றிய பின்னர் உலோகக் குழம்பை ஊற்றிவார்க்கும் முறையில் செய்யப்பட்டுள்ளது. இதை 'தேன்மெழுகுமுறை' என்பர் இத்தகைய முறையில் தோற்றுவிக்கப்பட்ட 36 செப்புத் திருமேனிகளை இக்கோயிலில் காணலாம்.

செப்புத் திருமேனிகள்
முதல் தொகுதி 13-14 ஆம் நூற்றாண்டு

இக்கோயிலிலுள்ள செப்புத் திருமேனிகள் மூன்று கால கட்டங்களில் செய்யப்பட்டவை. இவற்றில் ஒற்றை மருப்பிலான 'கணபதி', மலைமடந்தையான 'மனோன்மணி', அம்மையப்பராய் விளங்கும் 'சோமாஸ்கந்தர்', உமையாள், வாத ஊரில் பிறந்த மணிவாசகப் பெருமான் ஆகியவை யாவும் கி.பி 13-14 ஆம் நூற்றாண்டில் தமிழகக் கலைஞர்களால் செய்யப்பட்டவை.

இவற்றில் மனோன்மணியின் உருவம் குறிப்பிடத்தக்க கலை அமைதியுடன் விளங்குவதைக் காணலாம். இவ்வனப்புமிகு தேவியின் ஜடாமகுடமும், நெற்றியின் மேல் ரத்தினப் பட்டமும் காதுகளில் மகர குண்டலமும், மார்பின் இடையிலே ஓடும்புரிநூலும், மென்கரங்களை அணி செய்யும் கடகமும், குடகமும், இடையிலிருந்து கணுக்கால் வரை உடலையொட்டிய ஆடையும், காலில் உள்ள பாடகமும் பாதரசமும் மிக நேர்த்தியாக அணி செய்கின்றன. பெண் அழகை இலட்சியப்படுத்தும் உருவத்துக்கு எடுத்துக்காட்டாக வயிற்றில் தோன்றும் திரிவேதியும், மெல்லிய இடையும் மிகச்சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளதைக்

காணலாம். இது மிகவும் பெருமைப்படத்தக்க நுட்பமான கலைப் படைப்பாகும்.

போக சக்தியான 'உமையவளின்' உருவரை, அவள் இனிய முகத்திலே தேன்றும் தியானப்பார்வை, மார்பிலே வழிந்தோடும் புரிநூல், இடையை அணி செய்யும் கச்சை யாவும் பழங்காலப் பாண்டியர் கலையை எடுத்துக்காட்டுவனவாகும்.

இரண்டாம் தொகுதி 15-16 ஆம் நூற்றாண்டு

பற்றுமிக்க பெற்றோர்களான இறைவிக்கும் எம்பிரானுக்கும் நடுவே பாலகுமாரனாகிய குமாரவேல் தோன்றி காட்சியளிக்கும் 'சோமாஸ்கந்தர்' பாண்டியச் சிற்பங்களின் உயர்வுமிக்கப் படைப்புக்களில் ஒன்று. இங்கு கந்தனின் உருவம் குழந்தைப் பருவத்தில் மகத்தான சித்தரிப்பாக அமைகிறது. பெற்றோர்களின் முகத்தில் தோன்றும் உணர்வு பாசத்தின் எல்லைக் கோட்டைக் காட்டி நிற்கிறது. இது கி.பி. 15-16 நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

தண்மதி சூடிய சென்னியனான 'சந்திரசேகரமூர்த்தி' ஆடவல்ல பெருமானான 'கூத்தாடும்தேவர்' 'அவரின்தேவி' 'உமாபரமேஸ்வரி' காரைக்கால் அம்மையார், மகுட பதியான பாண்டியராசன் ஆகிய உருவங்கள் அடுத்து இரு நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பட்டவை. இதில் பாண்டிய மன்னனின் பெருமிதமான தோற்றமும், முகத்தில் தோன்றும் சீவகலையும் சிற்பச் சிறப்பை மேலும் உயர்த்துகிறது.

மூன்றாம் தொகுதி 17-18 ஆம் நூற்றாண்டு

இக்கால வரையறையைச் சார்ந்த செப்புத்திருமேனிகளாக நந்தி, அவரின்தேவி, சண்டேசன், பிறை சூடிய பெருமானின் தேவியார், நடனமாடும் காழிப்பிள்ளையார், உழவாரப்படை ஏந்திய அப்பர், சுந்தரமூர்த்தி, முருகவேள், வள்ளி, தெய்வயானை, பிச்சை உகக்கும் பெருமாள், கண்ணப்பன், சிறுத்தொண்டன், சேரமான், சோழநாயனார் ஆகியோரின் சிலைகளைக் காணலாம்.

இவற்றில் பிச்சைத்தேவரின் அருகில் உள்ள குள்ளச் சிறு பூதகணம் உருவத்தால் சிறியது எனினும் ஆற்றல் மிக்கது. மற்றொரு புறத்தில் தாவிக் குதிக்கும் மான் அண்ணலின் தளிர்கரத்தை எதிர் நோக்கியுள்ளது என்பதை அதன் விழிகள் காட்டுகின்றன. பதிகம் பாடிய நாயன்மார்களின் உருவமைப்பு, அவர்தம் கண்களிலே தோன்றும் அறிவும் அமைதியும் கூட மிகத் தெளிவாக வடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இம்மூன்றாம் தொகுதி பிற்காலப் பாண்டியர்- விசய நகரக் கலைப் பாணியின் தொடர்ச்சிக்கு நல்ல குறிப்பிடத்தக்க சான்றுகள் எனலாம்.

இவற்றில் கூரியமூக்கும், கோணங்கள் நிறைந்த உருவரையும், ஆன்மீக உணர்வுகள் குறைந்து வரும் தோற்றமும், மானிடத் தோற்றத்தை வெளிப்படுத்தும் அங்கங்களும், அக்காலத்தின் கூறாகத் தனித்து விளங்கும் ஆடை வகைகளும் கி.பி 16 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை எழுந்த கலை மரபை வரையறுக்கவல்லவை.

கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் 14 கல்வெட்டுக்கள் உள்ளன. இவை 1940-41 ஆம் ஆண்டு படி எடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பிற்காலப் பாண்டியர் காலத்தவை.

புலமைவிருத்தி

திறமை மிக்கப் புலவர்களுக்கு, வரியை நீக்கி வழங்கப்படும் கொடையை ‘புலமைவிருத்தி’ எனக் கல்வெட்டுக் கூறுகிறது. குலசேகரபுத்தைச் சார்ந்த நகரத்தார்கள் (சேத்தூர்) திருவுடையான் தேவனான சேரகோளூர் என்ற பெரும்புலவருக்கு ‘புலமைவிருத்தி’ அளித்தனர். இச்செய்தியை சோழநாட்டை வென்று முடிகொண்ட சோழபுரமான பழையறையில் விராபிசேடகமும், விசயாபிடேகமும் செய்து கொண்ட சுந்தரபாண்டியன் காலத்திய பதினைந்தாம் ஆட்சியாண்டு கல்வெட்டு (கி.பி 1231) குறிக்கிறது.

இறைவன் திருப்பெயர்கள்

அழகிய பெருமாள் அதிவீரராமன் என்ற ஸ்ரீவல்லபதேவன் கல்வெட்டு (கி.பி 1572) இறைவனை ஆன்மநாட்டு திருபகவான் பாறை நச்சாடை தவிர்த்தருளிய நாயனார் எனக் குறிக்கிறது.

ஜடாவர்மன் பராக்கிரமபாண்டியன் இரண்டு கல்வெட்டுக்கள் திரு. பகவான் பாறை ஆளுடை நாயனார் எனக் குறிக்கிறது.

தலப்பெருமைகள்

தெய்வதானமான தேவதானம் என்ற இத்தலம் *''மூர்த்தி-தலம்-தீர்த்தம்''* என்னும் மூன்று பெருமைகளை உடையது.

1. நால்வகை நிலங்களில் குறிஞ்சி நிலமாகிய மலைப் பகுதியில் கோவில் அமைந்துள்ளது. குறிஞ்சி நிலக்கடவுள் முருகனும் கோயில் கொண்டுள்ளார்.

2. ''நிலம் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம்'' என்னும் பஞ்ச பூதத்தலங்கள் சோழ நாட்டிலும் உள்ளது போல, பாண்டிய நாட்டிலும் உள்ளது. இவற்றில் தேவதானம் ஆகாயத் தலமாகும்.

3. இந்த ஊருக்குச் சிவபுரம் என்ற பெயரும் உண்டு. எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதன்மையாயிருப்பது போல இத்தலம் முதன்மை பெற்று விளங்குகிறது.

4. திருப்பகவன் பாறை, வெள்ளைப்பாறை, ஒலக்கப்பாறை, என்னும் பாறைகளை உடையது.

5. ''பலாசவனம்'' என்ற பெயரை உடையது.

6. ''சிருங்கம்'' என்று கலைமானால் பூசிக்கப் பெற்றது.

7. சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பூசைகள் செய்யப்பட்ட தலம்.

8. பாண்டிய மன்னனுக்கு வந்த நச்சாடையைத் தவிர்த்து அருளிய பெருமை உடையது.

9. இந்தத் தலத்தோடு தொடர்புடைய தலம் சேத்தூரில் உள்ள திருக்கண்ணீஸ்வரர் ஆலயம் ஆகும்.

10. சேத்தூரின் பெருமை :

தேவதானம் அருகில் உள்ள சேத்தூர் என்று இன்று வழங்கி வரும் ஊர் முற்காலத்தில் ''சேற்றூர்'' என்னும் ''சேறை'' என்றும் வழங்கப்பட்டு வந்தது. விவசாயத்திற்கான செழுமையான சேறு பொருந்தியுள்ள காரணத்தால் சேற்றூர் என்றும் கூறலாம்.

அம்மை பெற்ற நாயகி அருந்தவம் புரிந்திடச்
செம்மை பெற்ற சேற்றூர் ரென்று சொல்லு நாடஞ் சேறையாய்
மும்மை பெற்ற தலங்கள் முற்று மோதவுற்றதே''

என்று தலபுராணம் சொல்லும் செய்தியாகும்.

சோழ மன்னர்களில் ஒருவனான விக்ரம சோழனுக்கு கண் கொடுத்த சுவாமியாகும். ஆகையால் இத்தெய்வத்திற்கு திருக் கண்ணீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது. அம்பாளின் பெயர் சௌந்தர்ய நாயகி என்று அழகிய நாச்சியார் என்றும் வழங்கி வருகிறது.

11. இங்கு தல விருட்சமாக சரக்கொன்றை மரம் இருந்து வருகிறது.

12. இத்திருக்கோயிலின் முக்கியத் திருவிழாக்களாக நடைபெற்று வருபவை.

I - மாசி மகத் திருவிழா

முதல் நாள் தபசுத் திருவிழாவும், மாசி மகத்தன்று தெப்பத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன.

II - வைகாசித் திருவிழா :

வைகாசி மாதம் விசாகத்துடன் முடிவடையும் 10 நாள் உற்சவம் நடைபெறும். 9-ம் திருநாளன்று (விசாகத்திற்கு முதல் நாள்) தேரோட்டம் நடைபெற்று வருகின்றன.

தினப்பூசைகளும், திருவிழாக்களும்

''ஆலயத்திற்கழகு அன்றாட பூசை'' என்று பெரியவர்கள் சொல்கிற செய்தி. இந்தப் பூசைகள் ஆறுகால பூசைகள் என்று வகுக்கப்பட்டுள்ளன. இப்பூசைகள் தவறுமானால் தீமைகள் ஏற்படும்.

''கண்ணுதற் பெருமாள் கோயிலிற் காலமெல்லாம்

நண்ணுதற் பூசை விதிப்படி நடத்தல் வேண்டும்

பண்ணுதல் தவறுமாயின் பார்த்திபன் தனக்குபாரிப்

அண்ணபல் லுயிர்க்கும் தீமை அணுகுதர் சரதமாமே''

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் 'அம்பைப் புராணம்' சொல்லுகிறது.

காலை	6-15 மணி	-	திருவனந்தல்
காலை	8-00 மணி	-	விழாபூஜை
காலை	8-30 மணி	-	சிறுகாலை
காலை	9-00 மணி	-	காலசந்தி
காலை	11-15 மணி	-	உச்சிக்காலம்
மாலை	5-30 மணி	-	மாலை பூஜை
மாலை	7-15 மணி	-	அர்த்தசாம பூஜை

இதைத் தவிர குமாரக்கோயிலில் 8 மணிக்கு விழாப்பூசையும், 11 மணிக்கு உச்சிக்காலமும், மாலை 6 மணிக்கு சாயரட்சை பூசையும், இரவு 8 மணியளவில் (அர்த்த சாம பூஜையும் ஆக நான்கு காலங்களில்) அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுதல் மிக்க புண்ணியத்தை தரும்.

'' காலைதொழ சுற்றவினை கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்யோம்
மாலையினில் வந்துணிவன் தானையே வந்திருந்தால்
ஏழ்பிறப்பில் வெந்துயரம் எல்லாம் விடும்''

என்பது சான்றோர் கூற்று.

பிரதோசம் : பிரதோச காலத்தில் சென்று ஈசனைத் தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு. பிரதோசமானது வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வரும். திரயோதசி திதிகளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் பின்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் கொண்ட காலம், சிவபெருமான் ஆலகால விஷம் உண்ட காலம்.

வாழிய இருபக் கத்தும்
வளர்திர யோத சிக்கள்
ஆழியிற் கதிரோன் வீழும்
அதற்கு முன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னு மந்த
நாழிகை இளைய காலம்
பாழியக் கடல் ஆழ் வைப்போர்
பகர்பிர தோசம் என்பார்

என்று 'தனியூரப் புராணம்' பாடுகிறது.

மேலும் இதே பிரதோசம் பற்றி சேறைத் தலபுராணம் திறம்படப் பாடுகிறது.

திருப்பள்ளி எழுச்சிகண்டு சேவித்தோர் சிவ்ஞானஞ்
சேர்ந்து வாழ்வார்
விருப்பமுடன் விழாப்பூசை தரித்தோர் மாமுனியாய்
விளங்கி வாழ்வார்
உருப்பெலாம் பணியவொளிர் காலசந்தி தரித்தோர்
உம்ப ராவார்
கருப்பையினிற் பிறந்திறவாக் கதியடைவர் உச்சியிற்
கண்டோர் தாமே !

என்றும்,

அத்தமயத் னத்திறுதி சேவித்தோர் சிகாந்த
னென்ன லாவார்
பத்தியொடு பாரிநிதி சேவித்தோர் பதுமனறும்

பரத்தி லாவார்
முத்தியுறும் சுனஞ்சணர் சேவித்தோர் அமைந்தன்முது
குறைவோ ராவார்
சித்தியுறும் பிரதோடஞ் சேவித்தோர் பிரதோசம்
தேய்ப்பார் தாமே''

என்றும் பாடுகிறது.

இத்தலத்தில் வருடந்தோறும் பல சிறப்பான விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவை வரிசைக் கிரமமாக கீழே தரப்பட்டுள்ளன.

அ. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் பெருவிழா 10 நாட்கள் நடைபெறும். உற்சவ மூர்த்திகள் பெரிய கோயிலில் இருந்து தேவதானத்திற்கு கொண்டு வரப்படுவர். மூர்த்திகள் பத்து நாட்களிலும் பல வாகனங்களில் புறப்படும். 4-ம் திருநாளில் சுவாமி மற்றும் அம்பாள் வெள்ளி ரிஷப வாகனங்களில் காட்சி தருவார்கள். ஒன்பதாம் நாள் தேரோட்டம் நிகழும். குமரப் பெருமானுக்குத் தேவதானத்திலேயே விழாக்கள் நடைபெறும்.

ஆ. ஆனி மாதம் உத்திர நாளில் நடராசப் பெருமானுக்கு அபிஷேகமும் புறப்பாடும் நடைபெறும்.

இ. ஆடிப்பூர நாளில் அம்மன் கோவிலுக்கு உள்ளேயே புறப்பாடு நடைபெறும்.

ஈ. ஆவணி சதுர்த்தி நாளில் விநாயகருக்கான வழிபாடுகள் சிறந்து நடைபெறும்.

உ. புரட்டாசி 10 நாட்கள் வரை நவராத்திரடி விழா சிறப்பாக நடைபெறும்.

ஊ. ஐப்பசியில் இக்கோயிலின் இணைக்கோயிலாக விளங்கும் சேத்தூர் அருள்மிகு திருக்கண்ணீஸ்வரர் ஆலயத்தில் குடி கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கும், அருள்மிகு குமாரப்பெருமானுக்கும் கந்தர் சஷ்டித் திருவிழா மிகு

விமரிசையாக நடைபெறும்.

எ. மார்கழி மாதத் திருவாதிரை நாளில் நடராசப் பெருமானுக்கும், ஆடவல்லானுக்கும் அபிஷேகமும் அலங்காரமும் நடைபெறும். மார்கழி மாதம் நாள்தோறும் அதிகாலை வேளையில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்கள் இசைத் தட்டுக்கள் மூலம் ஒலிபரப்பப்படும். ஓதுவார்கள். பாடுவார்கள்.

ஏ. தைப்பூசத் திருநாளில்பூசையும் புறப்பாடும் நடைபெறும். மாதாந்திர கடைசி பெருமான் காளை வாகனத்தில் காட்சி கொடுப்பார்.

ஐ. மாசி மக நாளில் தெப்பத் திருவிழா நடக்கும் அம்மையார் தவம் செய்யும் விழாவும் பெருமான் காட்சி தரும் விழாவும் நடைபெறும். பிறவிக் கடலில் வீழ்ந்து கரைகாணாது உழலும் உயிர்களுக்கு அபயம் தருகின்ற காட்சிகளை நினைவுபடுத்தவே தெப்பத் திருவிழா நடைபெறுகிறது.

உருமாறிப் பிறப்பென்னும் கடல் வீழ்ந்து கரைகாணா
துழலும் மக்கள்
கருமாறி அருட்தெப்பம் தனிலேற்றி முத்தியதாம்
கரையில் ஏற்றும்
பெருமான்தாம் என்பதனை உலகுணர்த்த ஆண்டு
தொறும் பிறங்கும் தெப்பத்
திருநாளைக் கொண்ட செயல் கண்டுணர்ந்து
வாழ்மின்கள் சிறந்து நாளும்.

என்று பழம் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

ஒ. பங்குனி மாதம் உத்திர நாளில் சேத்தூரில் திருக்கல்யாண விழா 5 நாட்கள் நிகழும். சித்திரை நாளில் மாதப் பிறப்பு வெள்ளி ரிசப வாகனத்தில் பெருமான் வீதி வலம் வரல்.

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்மதி ஆகும்
அண்ணரின் அடியார் தமைமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்தல் விழாபொழிவு கண்விறிதல்
என்பது சேக்கிழார் வாக்கு.

இந்த வகையில் பூசைகளும் விழாக்களும் இன்றளவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன.

இறைப் பணியாளர்கள்

இவ்வழகிய பெருமாள் அதிவீரராமன் என்ற ஸ்ரீவல்லபதேவனின் காலத்தில் (கி.பி 1485) வெளியாற்றூரைச் சேர்ந்த மன்னர், 'வாழநோக்கினான்' என்பவனைக் கோயில் கணக்கனாக நியமித்து, அவனுக்கு ஊதியமாக நிலக்கொடை அளிக்கப்பட்டது.

தர்மப்பெருமாள் குலசேகரதேவனின் 13 வது ஆட்சி யாண்டில் மாடக்குளம் கீழ்துரை திருவாலயுடையார் கோவிலைச் சார்ந்த ஊருடைய முதலி என்ற வீரபாண்டிய தேவனை மாடத்திய கணக்கு வேலைக்கு நியமித்து அவனுக்கு ஊதியம் நிர்ணயித்ததைக் குறிக்கிறது. இதை ஏற்படுத்தியவன் பராக்கிரம பாண்டிய தேவன் என்றும் சொல்லப்படுகிறது. இக்கல்வெட்டு கோயில் கருவறை தெற்குச் சுவற்றில் உள்ளன. (காலம் 1476.)

கோயில் மண்டபம் தென்கிழக்குச் சுவரில் செண்பக பராக்கிரம பாண்டிய தேவன் கல்வெட்டு உள்ளது. (காலம் சகம்:- 1409-கி.பி 1489) இது கோயிலில் அத்யானம் செய்வதற்கு வசிஸ்ட கோத்திரம் அவ்வாலய சூத்திரத்தைச் சேர்ந்த சங்கரநாராயணப்பட்டனை நியமித்ததைக் குறிக்கிறது. இவனுக்கு ஊதியமாக குடியிருப்பு மனையும் வரியில்லா நிலமும் வழங்கப்பெற்றன. ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் என்ற மன்னன் தேவதானத்தில் முகாமிட்டு தங்கியிருந்த போது அரிநட்டு கருவாநல்லூர் திருக்களாவுடைய நாயனார் கோயிலின் தேவகன்மியான முடிவழங்கும் பாண்டியன் பிரமாதிராயன் என்ற ஆரிய பட்டனை புதுப்பிக்கப்பட்ட திருபகவான் பாறை ஆவுடை நாயனார் கோயில் பூசைக்கு நியமித்ததைக் குறிக்கிறது. இம் மன்னவன் (321) ஆட்சியாண்டு கல்வெட்டை கோயில் கருவறை தெற்குச் சுவற்றில் காணலாம்.

அறக்கொடைகள்

மாறவர்மன் ஸ்ரீவல்லப தேவனின் 31-வது ஆட்சியாண்டு கல்வெட்டு இக்கோயில் 'ஆகவராமன்' என்னும் சக்தி பூசைச் செலவுக்காக, அஷ்டமி நாளில் அர்த்தசாம அபிசேகத்திற்குத் 'தொண்டக்குளம்' என்னும் கிராமம் அரசரால் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. கோயில் மேற்குச் சுவரிலுள்ள இக்கல்வெட்டு அரசரும் ஆரிய நாட்டு வரதுங்க தேவநல்லூர் எழுத்து மண்டபத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டில் 'பூரட்டாதி' அரசருடைய நட்சத்திரமாகச் சொல்லப்படுகிறது. மேலும் பராக்கிரம பாண்டிய தேவரது 28-வது ஆட்சியாண்டில் பல நன்கொடைகள் வழங்கப்பட்டிருப்பதையும், பராக்கிரம பாண்டியன் சந்தி என்னும் பூசைக்கு வழங்கியிருப்பதையும் காணலாம்.

பாண்டியன் மாறவர்மன் காலத்தில் இக்கோயில் இறைவனின் மாலை வேளைப் பூசைக்கு 'பெற்றானேரி' என்னும் நிலத்தை அரசனால் வழங்கப்பட்டது. இக்கல்வெட்டு கோயில் கருவறை மேற்குச் சுவரில் உள்ளது.

ஜடிலவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி, வீரபாண்டிய தேவன் காலத்தில் (24) இக்கோயிலின் இறைவனுடைய அர்த்தசாம பூசைக்கும், பங்குனி உத்திரவிழாவில் சுவாமியின் அபிடேகத்திற்கும் ''தாரான்குளம்'' என்னும் கிராமம் மன்னனால் வழங்கப்பட்டது என்பதை கருவறை தென்மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது.

பராக்கிரம பாண்டியன் காலத்தில் அரிநாட்டு ''பராந்தக மங்கரப்பற்று'' என்னும் ஊரில் நிலப்பகுதி வழங்கியவனின் விருப்பப்படியே ஆன்மநாட்டு திருபகவான் பாறை ஆளுடைய நாயனார் காலை சந்திக்கு விடப்பட்டது.

அழகன் பெருமாள் அதிவீரராமன் என்ற வல்லபதேவன் காலத்தில் (சகம் 1494 கி.பி. 1572) ஆன்மநாட்டு திருபகவான் பாறை நச்சாடை தவிர்த்தருளிய நாயனாரின் விசேட பூசைக்குச்

சேத்தூர் பிடாகையில் மூன்று நிலப்பகுதிகள் அளிக்கப்பட்டன. இந்நிலைப் பகுதியில் ஒரு எல்லையாக கோவலன் ஊரணி என்பது சேத்தூருக்கு மேற்கே உள்ளது. இதனை 'கொல்லன் ஊரணி' என்று இன்றும் மக்கள் அழைத்து வருகிறார்கள்.

மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவன் இப்பகுதியில் முகாமிட்டு தங்கியிருந்தபோது 'திருப்பணிபுரம்' என்னும் கிராமத்தை கோயிலுக்கு வழங்கியதை மற்றுமொரு கல்வெட்டு குறிக்கின்றது. இக்கல்வெட்டு கோயிலின் முன்மண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருப்பணிபுரம்' என்னும் கிராமம் தற்போது இவ்வட்டாரத்தில் இல்லை. கொல்லங்கொண்டான் அருகிலுள்ள திருப்பணிமலையை குறிக்கலாம். ஏனென்றால் இங்கு இருந்து பல கோவில்களுக்கு கட்டுமானக்கல் பெரிய பாளங்களாகச் சென்றதாகக் கூறப்படுகிறது. அதனால் இம் மலைக்குத் திருப்பணிமலை என்ற பெயர் ஏற்பட்டது. அதற்கான தடயங்கள் இன்றும் உள்ளன. எனவே மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவன் கல்வெட்டில் கூறப்படுவது இந்தத் திருப்பணி மலையேயாகும்.

தேவதானங்கள் :

தாராங்குளம், திருப்பணிபுரம், தொண்டாங்குளம், புதுவூர், பெற்றனேரி, முதலியவை இக்கோயிலுக்கென்று பல்வேறு காலங்களில் கொடுக்கப்பட்ட தேவதானச் சிற்றூர்களாகும்.

பிற செய்திகள் :

எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர தேவனின் 30வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கோயில் திருப்பணி விசேசத்திற்கும், திருப்பணிக்காகவும் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

நந்தவனம் :

ஜடிலவர்மன் அபிராம வரதுங்கன் என்ற வீரபாண்டி தேவன்

10வது ஆட்சியாண்டு கல்வெட்டு (சகம் 1520 கி.பி. 1598) ஆன்ம நாட்டு தேவதான புதுவூர் அலிகா குட்டியார்-பெருவாசியாரிடம் பெருமாள் என்பான் கோயிலுக்கு நிலம் வாங்கி நந்தவனம் வைப்பதற்கு நன்கொடையாகப் பணம் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு அம்மன் கோயில் அதிட்டானத்தின் மேற்குச் சுவரில் உள்ளது.

சேறைத்தல வரலாற்று ஆய்வு

சேறைத்தல புராணத்தை ஆய்வு செய்தால் தேவதானம் பெரியகோவில் மிகவும் பழைய வரலாற்றைக் கொண்டது என்பது புலனாகும். தேவதானம் பெரிய கோவிலின் வரலாற்றை, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கோயில்; பாண்டியர்-சோழர்-சேரர் காலத்துக் கோயில்; குறுநிலமன்னர்கள் என்றழைக்கப்படும் பாளையக்காரர்கள் காலத்தில் கோயில்; என்று மூன்று பகுதிகளாகக் கொண்டு ஆய்வு செய்தால், பெரிய கோயிலின் காலம் வரலாற்றுக்கு முற்பட்டது என்பது தெளிவாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கோயில்

ஆதிகாலத்தில், வனத்தின் நடுவேயுள்ள சரக்கொன்றை மரத்தின் கீழ், தானாகத் தோன்றி இலைகளால் மூடப்பட்டிருந்த சிவலிங்கத்தை சிருங்கமென்னும் கலைமானும் ஒரு பசுவும் கண்டு வணங்கி வந்தன. அவைகளின் பக்தியைக் கண்ட இறைவன் காட்சி கொடுத்தான். மாடு மேய்க்கும் “சங்கரன்” என்பவன் அக்காட்சியைக் கண்டு இன்புற்றான்.

இந்த அதிசயத்தைப் பற்றிய செய்திகள் இவ்வட்டார மக்களுக்குப் பரவியது. அனைவரும் சுவாமியின் பெருமையை அறிந்து வழிபடலாயினர். மேலும் உமாதேவியின் விருப்பத்திற்கிணங்கி காட்சி கொடுத்த இடம். உமாதேவி தவக்கோலத்திலேயே இங்கு எழுந்தருளியுள்ள இடம். தேவர்களும் முனிவர்களும் வந்து அம்மையப்பரை வழிபட்ட இடம்.

இத்தகைய பெருமை பெற்ற இறைவனை, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் மக்கள் வாழையடி வாழையாக வணங்கி வந்தனர்.

பாண்டிய - சோழர் - சேரர் காலத்தில் கோயில்

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இங்குள்ள இறைவனை வழிபட்ட தலமாகும். பாண்டியமன்னன் வீரபாகு பாண்டியனுக்கு சோழ அரசன் போர்த்த இருந்த நச்சாடையை ஈசன் தவிர்த்தருளினார் பாண்டியனுக்கும் சோழனுக்கும் நடைபெற்ற போரில், பாண்டியனைக் காக்கும் பொருட்டு பாண்டியனின் படைத்தலைவனாக சேவகம் செய்ததால் ''**சேவகத்தேவர்**'' என்று மக்கள் அழைக்கின்றனர். சோழ மன்னனுக்கு கண்ணைக் கொடுத்து அருள்புரிந்தார் இறைவர்.

இந்நிகழ்ச்சிகள் யாவும், மதுரையில் பாண்டியர் அகன்று சோழர் ஆதிக்கம் ஏற்பட்ட காலமாகும். பாண்டியர் சோழருக்குக் கீழ் அடிமையாக வாழவிரும்பவில்லை. சோழருக் கெதிராகப் போர் முரசுகொட்டி கிளர்ச்சியைத் தொடங்கி தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு சோழர்-பாண்டியர் விக்கிரம சோழனுக்கும், வீரபாகு பாண்டியனுக்கும் நடைபெற்ற போர்களைப் பற்றிய செய்திகள் சேறைத்தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தப் போர் நடைபெற்ற காலத்தைப் பற்றி சேறைத்தல வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், சோழ-பாண்டிய வரலாறுகளின் மூலம் காலத்தை அறிய முடிகிறது.

சேறைத்தல புராணத்தில் கூறப்படும் வீரபாகு பாண்டியன் என்பவனைப் பற்றிய குறிப்புகள் பாண்டிய சோழ வரலாற்றில் காணப்படவில்லை. குலோத்துங்க சோழன் ஐந்து பாண்டியர்களையும் வென்றதாக வரலாறு கூறுவதால், அவர்களில் வீரபாகு பாண்டியனும் ஒருவனாக இருத்தல் வேண்டும்.

சேறைத்தல புராணத்தில் விக்கிரம சோழனுக்கும் வீரபாகுவிற்கும் மூன்று கட்டமாக போர்கள் நடைபெற்றதாகச் செய்தி கூறப்படுகிறது. குலோத்துங்க சோழனின் பிற்பகுதியில் ஆரம்பித்த போரானது விக்கிரம சோழன் காலம் வரை தொடர்ந்து நடந்திருத்தல் வேண்டும். அதன் பின்னரே விக்கிரம சோழன் சோழநாடு திரும்பி இருத்தல் வேண்டும்.

பேரரசன் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்திலும் பாண்டிய நாட்டின் மீது போர் நடைபெற்றுள்ளது. சேரன் பாஸ்கரரவிவர்மன் என்பவன் மீது படையெடுத்துச் செல்லும் போது, சேரனின் நண்பனாகிய பாண்டிய மன்னன் அமரபுயங்கன் என்பவன் இராசராசனை எதிர்த்துப் போரிட்டான். அமரபுயங்கன் பாண்டியர்களின் படைத்தலைவனாகவும் இருத்தல் கூடும் என்ற கருத்தும் கூறப்படுகிறது. இராசராசனே அமரபுயங்கனை வெற்றி கொண்டபோதிலும் சோழருக்கு அடிபணியாது அஞ்சா நெஞ்சத்துடன் போரிட்டான். சோழ ஆதிக்கத்தினை, இவன் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் போரிட்டான்.

இப் பாண்டியவேந்தன் யாருடைய மைந்தன் என்பதும், எந்த ஆண்டில் அரசுக் கட்டிலேறினான் என்பதும், இவன் யாருக்குப்பின் அரியணையேறினானென்பதும் அறிந்து கொள்ள இயலவில்லை என்று பாண்டிய வரலாறு பக்கம் 385-இல் இராசசேகர தங்கமணி கூறுகிறார்.

'அமரபுயங்கன்' என்ற பெயரின் பொருளைப் பகுத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். 'அமர்' என்றால் 'போர்' என்றும், 'புயங்கன்' என்றால் 'சிவபெருமான்' என்றும் பொருள் கொள்ளலாம். சிவபெருமான் படைத்தலைவனாகப் போர் செய்தான் என்று சேறைத்தல வரலாறு கூறுவதால் சிவபெருமானே 'அமரபுயங்கன்' என்ற பெயரில் சோழனை எதிர்த்துப் போரிட்டான் என்று கொள்ளலாம். சோழவரலாறும், பாண்டியர்களின் படைத் தலைவனாக அமரபுயங்கன் இருந்திருக்கலாம் என்று கூறுவதும் சிந்திக்கத் தக்கதாகும். மேலும் அமரபுயங்கன் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் சேரநாட்டின் எல்லையோரத்தில் எதிர்த்ததாகக்

கூறுவதால் அமரபுயங்கன் சோழரை எதிர்த்துப் போர் செய்தது சேறை நாட்டு எல்லைப்பகுதியேயாகும்.

சோழர்களுடைய ஆதிக்கம் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட காலத்தில் சோழர்களும் பாண்டியர்களும் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் பெருமையை ஓங்கச் செய்தனர். சேர, சோழ, பாண்டியர்களால் இக்கோயில் சிறிய அளவில் கட்டப்பட்டு பூசைகளும் ஆராதனைகளும் செய்யப்பட்டன.

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன் என்பவன் மதுரையை ஆண்டுவந்தான்.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்பவன் தேவதானக் கோயிலில் கடமை தவறிய அர்ச்சகர் ஒருவரை நீக்கிய செய்தி குறிப்பிடத்தக்கதாகும்.

திருநெல்வேலி மாவட்டம் (தற்போது விருதுநகர் மாவட்டம்) தேவதானத்தில் மிக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரு கல்வெட்டுக்களால் இவ்வேந்தன் காலத்திய ஒருசில செய்திகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

இவற்றுள் ஒன்று (A.R.E 1939-40 p 244) இவ்வேந்தனது காலத்திய கோயில் அர்ச்சகர்கள் தங்களது கடமையைச் செய்யாமல் வீண்பொழுது போக்கினர். இவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று பலமுறை அழைப்பு விடுத்த போதிலும் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

ஒருமுறை கோயிலுக்கு வருகை தந்த மன்னன் இவர்கள் சரியாகத் தமது திருப்பணிகளைச் செய்யாத காரணத்தால் அவர்களை விலக்கிவிட்டு, புதிய அர்ச்சகர் ஒருவரை நியமித்தான். இவ்வாறு நியமிக்கப்பட்ட அர்ச்சகர் பெயர் முடிவழங்கும் பாண்டிய பிரம்மாதிராயரான சூரிய பட்டராகும். இக்கோயிலைப் புதுப்பிக்கத் தக்க ஏற்பாடுகளையும் செய்தான். கோயில் விவகாரங்களைக் கவனிக்க படைத்தலைவர்கள் போன்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டார்கள். இச்செய்தியை பாண்டிய வரலாற்றில் பக்கம்

421-422 இல் இராசசேகர தங்கமணி கூறுகிறார்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178-1281) என்பவன் காலத்தில் மதுரையை ஆண்டுவந்த குலசேகரப் பாண்டியனுடன் போரிட்டு பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். அக்குலசேகர பாண்டியனின் மைத்துனனான விரதம் முடித்த பெருமாள் என்பவன் தேவதானம் கோவிலைச் சேர்ந்த சேத்தூரில் விஷ்ணுவுக்கு ஆலயம் ஒன்று எழுப்பி, அதற்கு 'சேரன் கரையன் விண்ணகர்' என்னும் பெயரினை இட்டான் என்ற செய்தியை 'பாண்டிய வரலாறு' என்னும் நூலில் பக்கம் 439-இல் இராசசேகர தங்கமணி என்பவர் கூறியுள்ளார்.

இப்போது இக்கோயில் சீனிவாசப்பெருமாள் கோயில் என்று அழைக்கப்பட்டு வருகிறது. குலசேகரப் பாண்டியன் இக்கோயில் வழிபாட்டிற்கும் பூசைக்குமாக திரு அரங்கநேரிக் கிராமத்தை வழங்கினான் என்றும் தெரிகிறது.

நாகமலை



தேவதானத்திலிருந்து பெரியகோயிலுக்குச் செல்லும் வழியில் நாகமலை சுப்பிரமணியர் கோயில் உள்ளது. தேவதானத்திலிருந்து பெரிய கோயில் வரை மருத மரங்கள் நட்டனர். ஒரு சமயம் மழையில்லாததால் மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றக்கூட முடியாமல் வெகுதூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டது. அப்போது சேத்தூர் ஜமீன்தாரும், சாப்டூர் ஜமீன்தார் நாகசாமி நாயக்கரும் கோவிலுக்கு வரும் போது, தாகத்தால் வருந்திய நாகப்ப நாயக்கர் மரக்கன்றுகளைக் காப்பாற்றி

வருபவனிடம் தண்ணீர் கேட்டார். அதற்கு அவன் தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் வருந்திய நாகசாமி நாயக்கர் முருகனை வேண்டி மனமுருகிப் பாடினார். உடனே மழைபெய்தது. சேத்தூர் ஜமீன்தாரும், நாகசாமி நாயக்கரும் மிகுந்த சந்தோசமடைந்தனர். அந்த இடத்திலுள்ள மலைமேல் சுப்பிரமணிய சுவாமிக்குக் கோயில் கட்டினார். நாகசாமி நாயக்கரால் கட்டப்பட்ட கோயிலாமையால் நாகமலை என்னும் பெயர் ஏற்பட்டது.

தேவதானம் குமர கோவில்



தேவதானம் பெரிய கோயிலைச் சேர்ந்த குமரகோயில் உள்ளது. இங்கு முருகன் எழுந்தருளியுள்ளார். இங்குதான் தேவதானம் பெரிய கோயில் அலுவலகமும் உள்ளது. வைகாசி மாதம் நடைபெறும் திருவிழாவின் போது நான்காம் திருவிழா, ஏழாம் திருவிழா, ஒன்பதாம் திருவிழா, பத்தாவது திருவிழா ஆகிய விழாக்களில் பெரிய கோயிலிலிருந்து தேவதானம் குமர கோயிலுக்கு உற்சவமூர்த்திகள் கொண்டுவரப்பட்டு மக்கள் வழிபாட்டிற்காக வைப்பர். மக்களும் இந்தத்திரு நாட்களில் இறைவனை வழிபடுவர்.

திருவிழாக் காலங்களில் இன்னிசை, நாட்டியம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் குமரகோயிலுக்கு முன்னர் தான் நடைபெறும். கோயிலின் அருகில் ஜமீன்தாரின் எழுகோணப் பங்களா இருந்தது குறிப்பிடத்தக்கது.

முனைவர் ந. இராசையா

800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சேத்தூர் சீனிவாசகப் பெருமாள் கோவில்



மதுரை மன்னன் விசுவநாதநாயக்கர் ஆட்சிக் காலத்தில் பிரிக்கப்பட்ட 72 பாளையப்பட்டுகளில் சேத்தூரும் ஒன்றாகும். சேத்தூருக்கு சிறப்பையும், புண்ணியத்தையும் அளிக்கும் கோவில் அங்குள்ள அருள்மிகு சீனிவாசகப் பெருமாள் கோவில் ஆகும்.

சேத்தூர் சீனிவாசகப் பெருமாள் கோவில் ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது.

இக்கோயிலை குலசேகர பாண்டியனின் மைத்துனரான விரதம் முடித்த பெருமான் கட்டினார் என்றும், இக்கோவிலுக்கு ''சேரன் கரையன் விண்ணகர்'' என்ற பெயரை சூட்டினார் என்றும் ராசசேகர தங்கமணி என்பவர் எழுதிய பாண்டிய வரலாறு கூறுகிறது.

சுறா மீன் உருவம்

இக்கோவில் உயரமான மதில் சுவர்களைக் கொண்டது. நுழைவு வாயிலுக்கு முன்பாக முன் மண்டபம் உள்ளது. உற்சவ காலங்களில், உற்சவ மூர்த்தியை இந்த மண்டபத்தில் வைத்து பூஜை செய்வார்கள்.

கோவிலுக்கு உள்ளே வெளிமண்டபத்தில் மேல் தளத்தில் சுறா மீன் உருவம் பொறிக்கப்பட்டு உள்ளது. எனவே இக்கோவில் பாண்டியர்கள் கட்டிய கோவில் என்பது தெளிவாகிறது.

உள்மண்டபத்தின் நடுவில் கருடாழ்வார் சிலை உள்ளது. அதன் முன்பு உற்சவ மூர்த்தியான சீனிவாசகப்பெருமாள், லட்சுமி, பூமாதேவி, விக்கிரகங்கள் உள்ளன. வலதுபுறம் உடையவர், ராமானுஜர், பெரியாழ்வார் சிலைகளும், இடது பக்கம் கல்லால் செதுக்கப்பட்ட ஜன்னலும் உள்ளன.

கல்வெட்டுகள்

சன்னதியை அடுத்து கர்ப்பக் கிரகம் உள்ளது. அதில் மூலவரான சீனிவாசகப் பெருமாள் வலதுபுறம் லட்சுமி, இடதுபுறம் பூமாதேவி விக்கிரகங்கள் உள்ளன.

வெளிச்சுவர்களில் கல்வெட்டுகள் உள்ளன. அதில் கோவில் பாராமரிப்பு பற்றி கூறப்பட்டு உள்ளது.

திருவிழா

இக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் வரும் 5 சனிக்கிழமைகளிலும் சிறப்பு பூஜை நடக்கிறது. 3 சனிக் கிழமை -களில் பெருமாள் சப்பரத்தில் வீதி உலா வருகிறார்.

சித்திரா பவுர்ணமி அன்று பெருமாளின் வீதி உலா மிகச் சிறப்பாக நடைபெறும். பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் லட்சுமி தவசுக்கோலத்தில் காட்சி தருவது கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

இடிந்து விட்டது

இந்தக்கோவிலை கோவில் கமிட்டியினரும் பரம்பரை புரவலர் சேத்தூர் ஜமீன்தார் துரைராஜ் சேகரும் இணைந்து நிர்வகித்து வருகிறார்கள்.

கோவிலின் மடப்பள்ளி இடிந்து விட்டது. அதனால் பக்தர்கள் பொங்கல் வைக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். கோவிலின்

கிணறும் பழுதுபட்டு உள்ளது.

இக்குறைபாடுகளை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.(தினத் தந்தி 7-3-2000 ந. இராசையா)

சோழ மன்னனுக்கு கண்பார்வை அளித்த திருக்கண்ணீசுவரர்

தேவதானம் கோயிலைச் சேர்ந்த திருக்கண்ணீஸ்வரர் கோயிலைப் பற்றிய செய்திகள் குறிப்பிடுவதாவது.

சுலோசன ஈஸ்வரமுடையார் கோயில் புராதன காலத்தில் 'கண்ணுடைய ஈஸ்வரமுடையார்' என்று அழைக்கப்பட்டது. இக்கோயில், தற்போது திருக்கண்ணீஸ்வரர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள திருக்கண்ணீஸ்வரர் கோவில் பதிமூன்றாவது நூற்றாண்டில் கட்டப்பட்டது. மலைமண்டிலத்தி -லுள்ள கீழ்குலத்தைச் சேர்ந்த சாத்தான் இரவி என்பவனால் கட்டப்பட்டது.



கல்வெட்டில் காமகோட்டம் உடைய அழகிய நாச்சியார் என்று அழைக்கப்படும் சவுந்திரநாயகி அம்பாள் என்று கூறப்பட்டுள்ளது.

பதிமூன்றாவது நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் கலஞ்சான் சிங்கன் என்ற தவப்பெருமாள் என்ற யோகி அழகிய நாச்சியார் தேவி ஆலயத்தில் ஒருவிடிவிளக்கு எரிவதற்காக பணம் கொடுத்தான்.

இக்கிராமத்தைச் சேர்ந்த அழகன் சிங்கன் என்ற சிங்களராயன் தவயோகிகளுக்கு உணவளிக்க ஒரு மண்டபம் (சத்திரம்) கட்டினான். இன்றும் அந்தக் கட்டிடம் சத்திரம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. தற்போது அந்தச் சத்திரத்தில் பேரூராட்சி மன்றம் உள்ளது.

கனவில் இறைவன்

சோழ மன்னனான விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135) சேத்தூரை அடுத்த தேவதானத்தில் நச்சாடை தவிர்த்து அருளிய சுவாமி கோவில் கட்டினான்.

பின்பு அவன் கனவில் இறைவன் (சிவன்) தோன்றி சேத்தூரை உண்டாக்கவும், அங்கு தனக்கு ஒரு கோவில் கட்டவும் கூறினார். அதன்படி விக்கிரம சோழன் திருக்கண்ணீசுவரர் கோவிகை் கட்டினான் என்று சேறை தல புராணத்தில் கூறப்பட்டு உள்ளது.

நியாயமற்ற போர்

பாண்டிய மன்னன் மீது சோழ மன்னன் விக்கிரம சோழன் நியாயத்திற்குப் புறம்பாக போர் தொடுத்தான். சிறந்த சிவபக்தனான பாண்டிய மன்னன் போரில் தோல்வி அடையும் நிலை ஏற்பட்டது.

அப்போது சிவபெருமான் மனித உருவில் வந்து பாண்டியன் படைத் தளபதியாகப் போரிட்டார் அதனால் சோழ மன்னன் போரில் தோல்வி அடைந்தான். அவன் கண்களை சிவபெருமான் குருடாக்கி விட்டார்.

மீண்டும் கண் பார்வை

கண் பார்வை இழந்த சோழ மன்னன் தனக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்க சிவனை நோக்கி தவம் இருந்தான்.

அவன் கனவில் சிவபெருமான் தோன்றி, சேத்தூரை உருவாக்கி, அங்கு தனக்கு கோவில் கட்டி வழிபாடு நடத்தினால் கண் பார்வை மீண்டும் கிடைக்கும் என்று அருளினார்.

அதன்படி சோழ மன்னன் சேத்தூரில் சிவன் கோவில் கட்டி வழிபட்டான். அதன் பிறகு அவனுக்கு கண் பார்வை கிடைத்தது. அதன் காரணமாக இந்த கோவில் திருக்கண்ணீசுவரர் கோவில் என்று அழைக்கப்பட்டது.

பங்குனி மாதம் 5 நாள் திருவிழாவும், சித்திரை மாதம் திருவிழாவும் நடைபெறும்.

கந்த சஷ்டி விழா

திருக்கண்ணீசுவரர் கோவில் வளாகத்தில் முருகன் கோவிலும் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் கந்த சஷ்டி விழா மிகவும் விமரிசையாக நடந்து வருகிறது.

சேத்தூரில் ஏழை முதல் பணக்காரர் வரை எல்லா குடும்பத்தினரின் திருமண விழா இந்த முருகன் கோவிலில் தான் நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் என்பவன் கொடையாகக் கொடுத்த நிலங்களுக்கு, நிலவரியை நீக்கினான்.

தேவதானம் பெரிய கோயிலுக்கு, பாண்டிய மன்னர்களில் மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவன், ஜடிலவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியதேவன், பராக்கிரமபாண்டியன், அழகன்பெருமாள் அதிவீரராமன் என்ற வல்லபதேவன், எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரதேவன், ஜடிலவர்மன் அபிராம வரதுங்கன் என்ற வீரபாண்டியதேவன் ஆகியவர்கள் வழங்கிய அறக்கொடைகளைப் பற்றிக் கூறுவதால். பாண்டியர்களின் காலத்தில் கோயில் சிறப்பான நிலையில் விளங்கியது நன்கு புலனாகும்.

சோழ அரசர்களிலும் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், பேரரசன் ராசராசன் ஆகியவர்களின் குறிப்புகளும் சேறைத்தலவரலாற்றில் குறிப்பிடுவதால் சேறை வரலாறும், தேவதானம் பெரிய கோயிலின் வரலாறும் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவாகும். (தினத் தந்தி 21-11-2001 ந. இராசையா)

குறுநில மன்னர்கள் காலத்துக் கோயில்

தேவதானம் பெரிய கோவிலின் வரலாற்றில், குறுநில மன்னர்கள் என்று அழைக்கப்படும் பாளையக்காரர்களின் காலத்தில் கோயில் நிலை எவ்வாறிருந்தது என்பதைக் காணலாம்.

பாண்டியர்களின் ஆட்சி மதுரையில் நடைபெற்றுக் கொண்டு இருந்த காலத்திலேயே, சேறை மன்னர்கள் திசைக்காவல் பொறுப்பேற்று குறுநில மன்னர்களாகத் திகழ்ந்து வந்தார்கள். பின்னர் மதுரையில் பாண்டியர் நாடு வீழ்ச்சியடைந்து நாயக்கர் ஆட்சி தோன்றலாயிற்று. விசுவநாத நாயக்கனும் (1529) அரியநாத முதலி என்பவனும் சேர்ந்து பாளையக்காரர் ஆட்சிமுறையை வகுத்தனர். அதன் படி பாண்டிய நாட்டை 72 பாளையங்களாகப் பிரித்தனர். இந்த 72 பாளையங்களில் சேத்தூர் பாளையமும் ஒன்றாகும்.

சேத்தூர் பாளையத்தில் பாண்டியர்களின் ஆட்சியின் போது முதன் முதல் நியமிக்கப்பட்ட குறு நிலமன்னர் ஆதிசின்மயத்தேவர் என்பவராவார். இவரைத் தொடர்ந்து இவருடைய வம்சா வழியினர் 'விக்கிரமசோழன்' என்பவன் சேத்தூரை உண்டாக்கி திருக்கண்ணீஸ்வரர் கோயிலையும் கட்டினான் என்ற செய்தி கூறப்படுகிறது.

இந்த இரண்டு செய்திகளும் உண்மையானதாகக் கொள்ளத்தக்க ஆதாரங்களும் உள்ளன ஆதிசின்மயத்தேவர் உண்டாக்கிய ஊர் தற்போது உள்ள சேத்தூர் அல்ல. மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் ஆதிசின்மயத்தேவன் கட்டிய கோட்டை இடிந்து கிடப்பதால், ஆதியில் சேத்தூர் அங்குதான் இருந்திருக்க வேண்டும். அதன் பின்னரே தற்போதுள்ள சேத்தூர் தோன்றி இருக்கக்கூடும்.

தேவதானம் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், விக்கிரமசோழனின் கனவில் சித்தர் போலத் தோன்றி, சேத்தூரை உண்டாக்கி, இறைவனுக்கு ஓர் ஆலயமும் கட்டும்படி கூறினான். இறைவனின் ஆணையின்படியே சேத்தூரை உண்டாக்கியதாகச்

சேறைத்தலபுராணத்தில் 'சேத்தூர் செய்து நதியழைத்த படலத்தில்' கூறப்பட்டுள்ளது.

நேரியன் விழியிரண்டு நிமலனாற் கிடைக்கப்பெற்ற
பேரியற் சரிதங் கேட்டேம் பேசிடுமன் னோன் சேறை
யூரது நதியுங்கண்ட துரையென முனிவர் கூற
நாரியைப் பாகம்வைத்தோர்க்கன்பன் பனுநவிலுற்றான்

சிவம்பிரதிட்டை செய்து திருக்கண்ணைப் பெற்றசோழன்
றவம்பெறுதேவி பாகன் றானங்கோர் விழிகொடாது
நவம்பெறு மிவ்வனத்தை நாடி யோரிலிங்கஞ் செய்ய
வவம்பெரும்பாவம்போகும் வலக்கண்ணு முண்டாமென்றார்

முன்னமலை மாமகண்முயன்று தவம் செய்யச்
சின்னவளினெடு சேறலாகிய சிறப்பாற்
சொன்னயமதாகிய சேற்றூறெனத் துதித்தே
கனவில் புயத்துவளவன் கழலுற்றான்.

பின்னர், பூவினியமன்னன் 'பூவன்நேரி' என்ற குளத்தை வெட்டி மனத்தினால் எண்ணியதால் 'மனமாக்கிஆறு' என்று பெயர்பெற்ற ஆற்றையும் உண்டாக்கினான், காயத்தால் வரித்துக் குளித்தலால் காயக்குளி நதியென்று தோற்றுவித்தான். அது கடலில் சேரும் பெருமையும் பெற்றது. சேத்தூருக்கு மேற்கே குளம் வெட்டினான். அக்குளத்தின் பெயர் 'வளவவேந்தன் குளம்' என்பதாகும். அக்குளம் தற்போது 'வாளவந்தான் குளம்' என்று வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேத்தூர் தோன்றிய வரலாற்றைப்பற்றி சேறைத்தல வரலாறு கூறுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் ஆதிசின்மயத்தேவர் உண்டாக்கிய ஆதிசேத்தூர் அழிவுற்ற பின்பு, தற்போதுள்ள சேத்தூரில் சேறை மன்னர்கள் குடியேறி இருந்திருக்கக்கூடும்.

ஆதிசின்மயத்தேவர் வழியில் தோன்றிய சின்மயத்தேவரின் அரசசபையில் சேறைத்தலபுராணம் அரங்கேற்றப்பட்டதால் அதிலிருந்தே சேறை மன்னர்கள் வரலாற்றையும் அவர்கள் தேவதானம் கோவிலுக்குச் செய்த திருப்பணிகளையும் காண்போம். நூல் அரங்கேற்றப்பட்டது கி.பி. 1574.

நெற்கட்டான் செவ்வல், வடகரை ஆதிக்கம், ஊத்துமலை. சிங்கம்பட்டி, ஊர்க்காடு ஆகிய ஊர்களிலுள்ள பாளையக்காரர்கள் அனைவரும் இராமநாதபுரம் பகுதியிலிருந்து இப்பகுதிக்கு வந்தவர்களாவர். சிவகிரிப் பாளையக்காரர் மதுரை பாண்டிய மன்னர் படைமுகாமிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் சேத்தூர், கொல்லங்கொண்டான் ஆகிய பாளையக்காரர்கள் மட்டும் காஞ்சீபுரத்திலிருந்து இங்கு வந்ததாக வரலாறு கூறுகிறது.

எனவே, ஏனைய பாளையக்காரர்களைக் காட்டிலும் சேத்தூர்ப் பாளையக்காரர்கள் சற்று மாறுபட்ட நிலையில் இருப்பதைக் காணலாம். இருந்தாலும் மற்ற பாளையக்காரர்களோடு சகல காரியங்களிலும் ஒத்துழைத்து வந்தார்கள்.

சேத்தூர் ஆதியில் சேறைநாடு, ‘ஆண்மறை நாடு’ என்று அழைக்கப்பட்டு ஒரே நாடாக இருந்து வந்தது. அதன் கிழக்கு எல்லை தற்போதுள்ள கீழ் ஆண்மறைநாடு, மேல் ஆண்மறை நாடு ஆகும். அதன் பின்னரே, ‘ஆண்மறைநாடு’ என்றழைக்கப்பட்ட ‘சேறைநாடு’ சேத்தூர், கொல்லங்கொண்டான் என்ற இரு பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்படலாயிற்று.

கோயிலின் வருமானம்

தேவதானம் அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி ஆலயத்திற்கு நஞ்சை, புஞ்சைகள் உள்ளன.

நன்செய் நிலங்கள்	541-33 ஏக்கர்
புன்செய் நிலங்கள்	120-12 ஏக்கர்
தோப்புக்கள்	190-26 ஏக்கர்

இந்த நிலங்கள் பெரும்பாலும் தேவதானம், முத்துச்சாமிபுரம், கோவிலூர் முதலிய கிராமங்களில் உள்ளன.

வருடந்தோறும் குத்தகை மூலமாக சுமார் ரூ. 85,000 ஆயிரம் நெல் குத்தகை மூலமாக 1,200 கோட்டை வருமானம் வரும். உண்டியல் மூலம் சுமார் ரூ. 5,000 வரும். இக்கோயிலில் ரூ.61010-83 மதிப்புள்ள நகைகள் உள்ளன. திருமணம்

நடத்தப்படுவதன் மூலம் வருமானம் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க ஆண்மறைநாட்டினை ஆட்சிசெய்து வந்த சேத்தூர் குறுநிலமன்னர்களின் வரலாற்றைப் பற்றிக் காண்போம்.

சேறை மன்னர்கள் வரலாறு

காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு, முதல் பராந்தக சோழன் சோழநாட்டை ஆண்டு வந்தான். இப்பராந்தக சோழனை வீரசோழன் என்றும் அழைத்தனர். இவன் கி.பி. 907 முதல் 955 வரை ஆண்டு வந்தான். அப்போது வீரமானியத் தேவர் என்பவர் சோழநாட்டின் பொருள் காப்பாளராகப் (பண்டாரத்தார்) பணியாற்றி வந்தார் அவருடைய இல்லத்தரசி விசயமங்கை என்பவளாவாள் இவர்களுக்கு ஆதியாத்தேவர், சதிருத்திரத்தேவர், தொண்டைமான் தேவர் ஆகிய மூன்று புத்திரர்கள் இருந்தார்கள்.

வீரமானியத்தேவர் சைவபக்தராக விளங்கினார் பொருள் காக்கும் பணியை தன்னுடைய பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு, இறைவனுக்குத் தொண்டுகள் செய்து வாழ்ந்து வந்தார்.

சிறிது காலம் சென்றவுடன் முதல் பராந்தகசோழன் என்ற வீரசோழன் காலமானான். புரவலசோழன் என்பவன் சோழச் சக்கரவர்த்தியாகப் பட்டமெய்தினான். புரவல சோழன் சிறுவனாக இருந்ததால், குமரேசன் என்ற அமைச்சர் ஆட்சியை கவனித்துக் கொண்டு வந்தான்.

அப்போது, குமரேசன் ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் போட்டான். இச்செய்தியை அறிந்த வீரமானியத் தேவரின் மூன்று புதல்வர்களும் அமைச்சரின் சதித்திட்டத்தை முறியடித்து, சோழநாட்டைக் காப்பாற்ற முன்வந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், வீரமானியத் தேவரும் இறந்துவிட்டார். அமைச்சரின் சதித்திட்டம் வெற்றி பெறவே வீரமானியத் தேவரின் புதல்வர்கள் மூவரும் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய உற்றார், உறவினர்கள் அனைவரும் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்கள்.

தஞ்சையில் அப்போது முதலாம் குலோத்துங்க சோழன் (1070-1120) என்பவன் ஆண்டுவந்தான். வீரமானியத் தேவரின் புத்திரர்கள் சோழ மன்னனைச் சந்தித்து தங்கள் நிலைமைகளை எடுத்துக் கூறினார்கள். ஏற்கனவே வீரமானியத் தேவரின் பெருமையைப் பற்றிக் கேள்விபட்டிருந்த சோழச்சக்கரவர்த்தி, அவர்கள் அனைவருக்கும் தங்கும் வசதிகள் செய்து கொடுத்துக் கௌரவப்படுத்தினான். அவர்களில், காளிங்கராயத்தேவன், வாண்டாயத் தேவன், சின்மயத் தேவன் ஆகியவர்களைத் தளபதிகளாகவும் நியமித்தார்.

இந்நிலையில் தஞ்சைக்கும், காஞ்சிக்கும் போர் ஏற்படவே சொந்த நாட்டை ஆதரிப்பதா? அல்லது புகுந்த நாட்டை ஆதரிப்பதா? என்ற இக்கட்டான சூழ்நிலையில் இருநாட்டையும் ஆதரிக்காமல் மதுரைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தனர்.

அப்போது மதுரையில் பராக்கிரமபாண்டியன் ஆண்டு வந்தான். பராக்கிரமபாண்டியன் இவர்களின் வீரத்தைச் சோதிக்கும் பொருட்டு பெரிய கொம்பு யானையைப் பிடித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டான். பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்கள் பெரிய கொம்பு யானையைப் பிடித்து மதுரை வீதிக்குக் கொண்டுவந்தனர். அவர்களின் வீரத்தைப் பாராட்டி பராக்கிரம பாண்டியன் அவர்களனைவருக்கும் தக்க மரியாதைகளும், சீர்வரிசைகளும் செய்து 'வேளம்புதூர்' என்ற ஊரையும் பரிசாகக் கொடுத்தான். அனைவரும் மதுரையிலேயே தங்கினர்.

தென்பாண்டிய நாடடில் அடிக்கடி எதிரிகளின் தாக்குதல் இருந்து வந்தது. இதை ஒடுக்க சின்மயத்தேவன் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பிவைத்தான் பாண்டியன். சின்மயத் தேவனுக்கு உதவியாக காளிங்கராயத் தேவன், வாண்டையாத் தேவன் என்பவர்களும் உடன் வந்தனர். தற்போதுள்ள சேத்தூருக்கு மேற்கே மலையடிவாரத்தில் முகாமிட்டுத் தங்கினர். அங்கு ஒரு கோட்டை கட்டினர். அந்தக்கோட்டை 'சின்மயன் கோட்டை' என்று வழங்கப்பட்டு வருகிறது தற்போது அக்கோட்டை இடிந்த நிலையில்

உள்ளது. இந்த இடம் தான் ஆதியில் சேத்தூராக விளங்கியது, அதன் பின்னரே தற்போதுள்ள சேத்தூர் ஏற்பட்டது.

இந்நிலையில் பந்தளநாட்டின் தளபதியாகிய 'திருவநாதன்' என்பவனின் தலைமையில் வந்த மாபெரும்படையை எதிர்த்துப் போர் செய்து சின்மயத்தேவர் வெற்றிபெற்றார். இதை அறிந்த பராக்கிரமபாண்டியன், சின்மயத்தேவரை அங்கேயே தங்கியிருக்கும் படி ஆணையிட்டான்.

இந்தப் பந்தளநாடு கேரளநாட்டைச் சேர்ந்த பகுதி. 'திருவநாதனை' வெற்றிகொண்டதால் 'திருவநாதன்' என்ற சிறப்புப் பெயரைச் சேறைமன்னர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் சூட்டிக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. இதைப்பற்றி ஆங்கிலத்தில் கூறுவது காணலாம்.

பராக்கிரமபாண்டியனின் ஆணையின்படி திசைக்காவல் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலேயே தங்கிவிட்டார்கள். இந்தப் பாளையத்தின் முதல் குறுநிலமன்னர் 'ஆதிசின்மயத்தேவர்' என்பவராவார். ஆதிசின்மயத் தேவர் தான் தேவதானம் பெரியகோவிலைக் கட்டியவர். ஆதிசின்மயத்தேவனும் அவர் மனைவி மனோன்மணி நாச்சியாரும் பெரியகோவில் கம்பத்து மண்டபத்திலுள்ள தூணில் சிற்பமாகக் காட்சி கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர்.

ஆதிசின்மயத்தேவருக்குப் பின்னால் வாழையடி வாழையாக குறுநிலமன்னர்கள் தொடர்ந்து சேத்தூரில் ஆட்சி செய்துவந்தனர். அவர்களில் கடைசிமன்னர் சேத்தூர் ஜமீன்தார் வடமலை திருவநாத வணங்காமுடி சேவுகப் பாண்டியத்தேவர் என்பவராவர். கி.பி. 1550-ல் ஆரம்பமான சேத்தூர் பாளையம் கி.பி. 1973 இல் முடிவுபெற்றது.

இனி இந்த மன்னர் பரம்பரையினரைப் பற்றியும் இவர்கள் தேவதானம் பெரியகோவிலில் அறங்காவலர்களாக இருந்து அறப்பணிகள் செய்தவற்றைப் பற்றியும் காண்போம்.

ஆதிசின்மயத்தேவர் வகையராக்கள் கி.பி. 1000

ஆண்டுகளுக்கு முன்னர் பரம்பரைபரம்பரையாக ஆண்டு வந்தனர் அவர்கள் பரம்பரையில் வந்த சுந்தரபாண்டியத் தேவர் (1526-1558) என்பவரின் மகன் சின்மயத் தேவராவார்.

தேவதானம் பெரிய கோயில் அறங்காவலர்கள் திசைக்காவலர்கள்

1. திருவநாதத் தேவர்		
2. சின்னையாத் தேவர்	I	
3. வல்லப்பதி தேவர்		
4. வீரபாண்டியத் தேவர்		
5. காளத்தியப்பத் தேவர்		
6. வீரபாண்டியத் தேவர்	II	
7. திருவுத்தேவர்	I	
8. சின்னயாத் தேவர்	II	
9. சிதம்பரத் தேவர்	I	
10. அழகுத் தேவர்	I	
11. முத்துச்சாமித் தேவர்	I	979-991
12. சொக்கலிங்கத் தேவர்		991-1041
13. அழகுத் தேவர்	II	1041-1081
14. குமர குருபாத் தேவர்		1081-1131
15. சங்கரபாண்டியத் தேவர்	I	1131-1192
16. நரசிங்கத் தேவர்		1192-1242
17. திருக்காளைத் தேவர்		1242-1272
18. கூடலிங்கத் தேவர்		1272-1352
19. முத்துக்குமாரசாமித் தேவர்		1352-1422
20. திருவுத்தேவர்		1422-1482
21. காளத்தியப்பத் தேவர்		1482-1526

1. சின்மயத்தேவர்	I	
(விசுவநாத நாயக்கர்காலம்)		1550-1582
2. அழகன்பெருமாள் தேவர்		1582-1596
3. சின்மயத் தேவர்	II	1596-1600
4. அழகப்பத் தேவர்		1600-1636
(அரியநாதமுதலி காலம் 1520-1600)		
5. சுந்தரதாசுத்தேவர்	I	1636-1650
6. சிவப்பிரகாசத் திருவநாதத் தேவர்	I	1650-1730
(திருமலைநாயக்கர் காலம் 1623-1659)		
7. சின்னயாத் தேவர்		1730-1740
8. சிதம்பரத்தேவர்		1740-1750

9. திருவநாதத்தேவன் II 1750-1780
(பூலித்தேவன் காலம்)
10. சுந்தரபாண்டியத்தேவர்
11. சிவப்பிரகாசத்தேவர் (தம்பி) 1780-1790
12. சின்மயத்தேவர் III 1790-1803
(வீரபாண்டிய கட்டபொம்மன் காலம்)

ஜமீன்தார்கள்

13. சேவுகபாண்டியத் தேவர் I 1803-1827
14. வடமலை திருவநாதத் தேவர் III 1827-1828
15. முத்துச்சாமித் தேவர் 1947-2875
16. சுந்தரதாசுத் தேவர் II 1875-1902
17. வடமலை திருவநாத வணங்காமுடி II
சேவுகபாண்டியத் தேவர் 1902-1973.

சேறை மன்னர்களாக 1750 முதல் 1973 வரை சுமார் இருபது பேர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் அனைவரும் தேவதானம் பெரிய கோவிலுக்கு அறங்காவலர்களாகத் தொண்டாற்றி வந்தனர். அம்மாமன்னர்களில் பலரும் நற்காரியங்கள் பல செய்து சிறப்புப் பெற்றனர். தெய்வப்பணியோடு தேசப்பணியையும் சேர்த்துச் செய்து புகழ்பெற்ற மன்னர்களும் உண்டு. அவர்கள் குறுநில மன்னர்களாகவும், பாளையக்காரர்களாகவும், ஜமீந்தார்களாகவும் விளங்கினார்கள். அத்தகு புகழ்மிக்க மன்னர்களில் சிலரைப்பற்றிக் காண்போம்.

சின்மயத் தேவர் 1550-1582

சேறைத்தல வரலாறு அரங்கேற்றப்பட்ட கி.பி. 1574 இல் குறுநில மன்னராக ஆட்சி செய்த சின்மயத்தேவர் என்பவரிலிருந்து பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்தனர். அதற்கு முன்னர் ஆதிசின்மயத் தேவரின் பரம்பரையினர் எப்போதிருந்து ஆட்சி செய்தனர் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. எனவே கி.பி. 1574 இல் இருந்து ஆட்சி செய்த மன்னர்களின் சேவைகளைப் பற்றிக் காண்போம்.

முதலாவது மன்னரான சின்மயத்தேவர் சேறைத்தல

வரலாற்றைப் பெரிய கோயிலின் சந்நிதியில் வைத்து அரங்கேற்றம் செய்தார். இவர் காலத்தில் அறிஞர்கள் நிறைந்த தமிழ்ச் சங்கம் இருந்தது. அச்சங்கப் புலவர்களும், சிவனடியார்களும், பிரபுக்களும் கூடி ஆய்வு செய்து சேறைத்தல வரலாறு என்ற நூல் அரங்கேற்றப்பட்டது. சின்மயத்தேவர் சேறைத்தல வரலாறு பாடிய புலவருக்கு பொன்னாயிரம் கொடுத்து வழிபட்டார். அதனால், புலவரைப் பொன்னாயிரங் கவிராயர் என்றே அனைவரும் அழைத்தனர்.

நூல் அரங்கேற்றம் செய்தபோது, சங்கப் புலவரில் ஒருவரான சந்திராமுதக் கவிஞர் என்பவர் பொறாமை கொண்டு, இந்நூலில் குற்றங்களிருக்கின்றன என்று கூறினார். குற்றம் யாதெனக் கூறுமாறு சபையோர் வேண்டினர்.

இந்தப் புராணத்தில் கூறப்படும் நாடும், நகரமும் வடமொழிப் புராணத்தில் கூறவில்லையே! என்று குதர்க்கங்களைக் கூறினார். அதற்குப் பதிலுரைத்த பொன்னாயிரங் கவிராயர், கந்தபுராணம் என்ற வடமொழி நூலில் நாடு நகரம் கூறாதிருக்க, தமிழில் அதை மொழி பெயர்த்த பரஞ்சோதி முனிவர் கூறியிருக்கிறார். அதே போல்தான் இந்நூலும் செய்துள்ளேன். அதனால் குற்றமில்லை என்று கூறினார். மேலும்பல ஆதாரங்களை எடுத்துக்கூறினார்.

சந்திராமுதக் கவிஞர் மேற்கொண்டு எதுவும் சொல்ல முடியாமல், சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, சேக்கிழார், கச்சியப்பர் ஆகியவர்கள் நூலை கடவுள் அங்கீகரித்ததைப் போல் இந்நூலை கடவுள் அங்கீகரிக்கவில்லையே என்றார். அப்போது மழைபெய்தது. அதனையே சிறப்பாகக் கொள்ள வேண்டும் என்று கூறினர் ஆனால் புலவரோ அதை ஏற்றுக்கொள்ளாமல் புட்பவருடம் பொழிவது சப்தமேகங்களுள் ஒரு மேகத்தின் சுபாவ குணம், இதெப்படி அற்புதமாகும் என்று வீண்வாதம் செய்தார். சபையோர் சஞ்சலம் அடைந்தனர்.

அப்போது தவம்பெற்ற நாயகியின் சந்நிதியிலே வாழ்கின்ற கிளி ஒன்று உள்ளே சென்று, உமாதேவியின் திருக்கரத்திலிருந்த

பூச்செண்டையும். மோதிரத்தையும் வாயினாற் கவ்விக் கொண்டு வந்து புலவர் கையிலே புனைந்து 'சரி சரி' என்று மழலை மொழியில் சொல்லிச் சென்றது. சபையோர் எல்லோரும் அதிசயித்தனர். பின்னர் சந்திராமுதக்கவிஞர் அதனை ஏற்றுக்கொண்டார் அச்சபையில் மகாவித்துவானாக இருந்த வேலய்யப்ப சுவாமிகள் பாராட்டி, பாடல் வெளியிட்டுள்ளார்.

அதன் பின்னர் சின்மயத்தேவர், பொன்னாயிரங்கவிராயரை சிவிகையில் இருக்கச் செய்து நகர்வலம் செய்து மகிழ்வித்துச் சிறப்புச் செய்தார்.

சின்மயத்தேவர் சபையில் பொன்னாயிரங் கவிராயரால், தென்மலைத் திரிபுரத்தீசர் புராணமும், புதுவை வடவரலீசர் புராணமும் எழுதி அரங்கேற்றப்பட்டது.

பொன்னாயிரங் கவிராயர், திருக்கண்ணீஸ்வரர் செந்தமிழ் பாமாலை, திருவோலக்க வெற்புமை நான்மணி மாலை, சேறைக் பதிற்றுப்பத்தந்தாதி, சேறையுலா, சேறைக் கலம்பகம், சங்கரக்குமாரர் பிள்ளைத் தமிழ். உபநய விநாயகரொளிர் மணிமாலை முதலிய பிரபந்தங்களைப் பாடி அரங்கேற்றினார்.

இதில் குறிப்பிட்டுள்ள நூல்கள் எதுவும் தற்போது கிடைக்கவில்லை. இந்நூல்களை ஆய்வு செய்தால் சேத்தூரின் புகழ் நன்கு விளங்கும்.

பந்தளதேச ஆக்கிரமிப்பு

இத்தகு சிறப்பு மிகுந்த சேறை மன்னர் 'திருவநாதனை', அடக்கி வெற்றிபெற்றதால் ''திருவநாதன்'' என்ற சிறப்புப் பட்டமும் பெற்றார். கோவிலின் பலபகுதிகளை நிறுவி கோவிலுக்கு நிலங்கள் பலவும், பொன்னும் மணியும் பதித்த அணிகள் பலவும், வாகனங்களும், பண்டபாத்திரங்களும் ஏராளமாக வழங்கினார். இவர் சபையில் படிக்காசு சுவாமிகள் என்பவரும் பெரும்புலவராயிருந்தார்.

மதுரையில் நாயக்கராட்சி ஏற்பட்டபோது விசுவநாத நாயக்கனால் 72 பாளையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதில்

சேத்தூரும் ஒன்று. சேத்தூர் பாளையத்தின் முதல் பாளையக் -காரராகப் பொறுப்பேற்றவர் சின்மயத்தேவர் என்பவரேயாவார்.

சின்மயத்தேவர் தமிழ் இலக்கியத்தில் பாண்டித்துவம் பெற்றவர். சங்கம் வைத்து புலவர்களை ஆதரித்துப் பெருமை பெற்றார். இச்சின்மயத்தேவர் சேறை சமஸ்தான மூதாதையரான ஆதிசின்மயத்தேவர் மரபில் வந்த சுந்தர பாண்டியத்தேவர் என்பவரின் மகனாவார்.

சிவப்பிரகாசத் திருவநாதத்தேவர் - 1650-1730

திருமலை நாயக்கர் காலத்தில் சேத்தூர் பாளையக்காரராக சிவப்பிரகாசத் திருவநாதத்தேவர் விளங்கினார் சிவகிரி ஜமீந்தார், சேத்தூர் மன்னர் சிவப்பிரகாசத் திருவநாதத் துரையை துன்பப்படுத்தினார். அத்துன்பத்திலிருந்து காப்பாற்ற, வடகரை ஆதிக்கம் பாளையக்காரர் சின்னணஞ்சாத்தேவர், இளையபட்டம் பெரியசாமித்தேவர் ஆகியோர் பெரும்படையை அனுப்பி சேத்தூர் மன்னருக்கு உதவி செய்தார். ஒரு சமயம் சேறை மன்னர் சிவப்பிரகாசத் திருவநாதத்தேவரை பார்க்க, வடகரை ஆதிக்கத்தின் தானாதிபதியாகிய பொன்னம்பலம் பிள்ளை என்பவர் வந்தபோது சேறை மன்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்த கையை அவசர அவசரமாக அலம்பி வருவதைக் கண்டார் தானதிபதி, ஒரு கையில் அன்னமும், வலக்கையில் கிடக்கவேண்டிய கணையாழி இடக்கையிலும் இருக்கக் கண்ட தானாதிபதி ஒரு பாடல் பாடினார்.

''ஒரு கையிலே யன்ன மொருகையலே சொன்னம்
வருகையிலே சன்மான வார்த்தை - பெருகுபுகழ்ச்
சீமான் திருவாழ் சிவப்பிரகாசத்திருவக்
கோமானுக் குள்ள குணம்''

என்று பாடினார் என வடகரை ஆதிக்க வரலாறு கூறுகிறது.

வடகரை ஆதிக்கத்திலிருந்து சேத்தூருக்கு ஆதரவாக வந்த சின்னணஞ்சாத்தேவர் படை வீரர்களின் ஒரு பிரிவினர் சேத்தூரிலேயே தங்கினார்கள். அவர்தம் வம்சா வழியினர் சேத்தூரில் உள்ளனர். சின்னணஞ்சாத் தேவர் கூட்டம் என்று அழைக்கப்பட்டு வருகிறார்கள். இன்னும் இந்த சின்னணஞ்சாத் தேவர் கூட்டம் சேத்தூரில் எக்கலாதேவி அம்மன் கோவிலின்

தென்பகுதியில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும் இவர்கள் தெய்வநம்பிக்கை உடையவர்களாக விளங்கிவருகிறார்கள்.

சுந்தரதாசுத் தேவர் 1636 - 1650

சேத்தூர் ஜமீன்தார் சுந்தரதாசுத் தேவர் அவர்கள் தன்னுடைய தமையனார் சிவப்பிரகாசத் தேவர் அவர்கள் மீது ''அன்னம்விடுதூது'' என்னும் பிரபந்தம் பாடி மிக்க வரிசைகள் பெற்றுள்ளார்.

சிவப்பிரகாசத் திருவநாதத் தேவர் 1650 - 1730

சேத்தூர் குறுநிலமன்னரான திருவநாதத் தேவர் என்பவரின் வள்ளல் தன்மையைப்பற்றி சுவையான நிகழ்ச்சிகளாக டாக்டர் உ.வே சாமிநாத ஐயர் தனது நினைவுமஞ்சரியில் குறிப்பிட்டுள்ளார்.

சின்னையாத் தேவர் 1730-1740

சேத்தூர் சமஸ்தானத்தில் 1730இல் ஜமீன்தாராக சின்னையாத் தேவர் என்பவர் இருந்தார். இவர் வேட்டையாடுவதில் வல்லவராகையால் வேட்டைக்காரர் சின்னையாத்தேவர் என்றே மக்கள் அழைப்பார்கள். ஒரு சமயம் இவர் வேட்டையாடும் போது புலியால் தாக்கப்பட்டு இறந்தார். இதனால் அவர் மனைவி ராக்கம்மாள் நாச்சியார் மிகவும் தாங்கமுடியாத வேதனையுடன் அவர் சிதையுடன் விழுந்து உயிர்விட்டார். இவரை எல்லோரும் தம்புராட்டியார் என்று அழைத்தனர். அந்த மகாராணியார் இறந்த இடத்தில் உருவான நினைவுச் சின்னம் இன்று இராக்கம்மாள் கோயில் என்று அழைக்கப்படுகின்றது.

சிதம்பரத் தேவர் 1740-1750

சிதம்பரத்தேவர் என்பவர் ஜமீனை ஆண்டபோது ஆர்காடு நவாப் வரிகேட்டு ஓலை அனுப்பினான். அப்போது மழையில்லாதிருந்ததால் வரிகட்ட முடியவில்லை. அரண்மனை சப்திக்கு வந்தது. இதனால் அவமானமடைந்த மன்னர் தன்

தமையன்மார்களுடன் தீக்குளித்து உயிர்விட முடிவெடுத்தார். அதன்படி நள்ளிரவில் யாரும் அறியா வண்ணம் அரண்மனையைவிட்டு வெளியேறி நடுவக்குளத்தின் அருகே தீயிட்டுக்கொண்டு உயிர்த்தியாகம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியை அறியாத சேத்தூர் மக்கள் மன்னனுடைய மானத்தைக் காக்கவேண்டுமென்று முடிவெடுத்து, அனைவரும் அணிந்திருந்த தாலி உட்பட அனைத்து நகைகளையும், கொண்டுவந்து அரண்மனைக்கு முன்னால் குவித்தனர். நவாப்பும் வரிகேட்டு வந்தான். ஆனால் இவர்களுக்கெல்லாம் மன்னரின் மரணச்செய்தி தான் கிடைத்தது. இச்செய்திகேட்ட மக்கள் தாங்காத் துயரமடைந்தனர். ஆனால் நவாப்போ சேறை மன்னர்களின் உயிர்த்தியாகத்தையும், மக்களின் ஆதரவையும் நினைத்து வரிவாங்காமலே திரும்பிச் சென்றான். அவர்கள் இறந்த இடத்தில் நடுகல் நாட்டப்பட்டு இன்றும் வழிபாடு செய்து வருகிறார்கள் சேத்தூர் மக்கள்.

திருவநாதத் தேவர் 1750 - 1780

நவாப்புக்கு வரிகட்டாமல் உயிர்த்தியாகம் செய்த சிதம்பரத் தேவரின் மகன் திருவநாதத் தேவர் என்பவர் சேத்தூரின் வரலாற்றில் வரிகொடுக்க மறுத்து, ஆங்கிலேயரை எதிர்த்து மாபெரும் புரட்சியை நடத்தியவராவார். இந்திய விடுதலைப்போரில் முதன்முதல் ஆங்கிலேயரையும் நவாப்பையும் எதிர்த்து வரிகொடுக்க மறுத்து 1755 இல் வீரப்போர்புரிந்தான் நெற்கட்டான் செவ்வல்பாளையக்காரன் மாவீரன் பூலித்தேவன். அம்மாவீரனோடு சேறை மன்னர் கூட்டணி சேர்ந்து, தன் இறுதிக் காலம் வரை எதிர்த்து விடுதலை இயக்க வரலாற்றில் இடம் பெற்றான். மாவீரன் பூலித்தேவனும், திருவநாதனும் வெள்ளையர்களை எதிர்த்துப் பல கட்டப் போர்களை நடத்தியுள்ளார்கள். வடகரை ஆதிக்கத்தின் மன்னரான குமார சின்னணஞ்சித் தேவரும் இவர்களுடன் சேர்ந்து வெள்ளையரை எதிர்த்தான். சேத்தூரில் பெரும்படை ஒன்றை நிறுத்தி வைத்தான். அக்கூட்டத்தினரே இன்று சின்னணஞ்சித்தேவர் என்ற வம்சா வழியினராக சேத்தூரில் இருந்து

வருகிறார்கள். விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாவீரன் பூலித்-தேவன் பெயர் உள்ளளவும், சேத்தூர் மன்னர் திருவநாதனின் பெயர் இருக்கும். விடுதலை வேள்வியில் சேத்தூர் மக்கள் தங்கள் செந்நீரை வார்த்து இந்த மண்ணையே சிவக்கச் செய்த பெருமை பாராட்டுக்-குரியது.

சின்மயத்தேவர் III 1790-1803

சின்மயத்தேவர் என்பவர் சேறையில் ஆண்டபோது, சிவகிரி பெரிய ஜமீன்தாரின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அடைக்-கலம் கொடுத்தார். வீரபாண்டிய கட்டபொம்மனும் சிவகிரி சமீன் சின்ன மைனரும் சேர்ந்து சமாதானம் பேச வருபவர்களைப் போல வந்தனர். **சேத்தூர் மன்னருக்கு மயக்க மருந்தைக் கொடுத்து சூத்திக் கொலை செய்தான் வீரபாண்டிய கட்டபொம்மன்.** சேத்தூரின் வரலாற்றில் வீரபாண்டிய கட்டபொம்மன் பெரும் களங்கத்தை உண்டு பண்ணிவிட்டான். இச்செய்தியைப் பற்றி கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்ற புத்தகத்தில் பக்கம் 119இல் 'கல்கண்டு' தமிழ்வாணன் எழுதியுள்ளார்.

சேவுகப்பாண்டியத் தேவர் III 1803-1827

மன்னர் சேவுகப்பாண்டியத் தேவர் என்பவர் சங்கர மூர்த்திக் கவிராயர் இயற்றிய சேறைப்பட்பிரபந்தம் என்னும் நூலுக்கு உயர்ந்த சன்மானம் செய்துள்ளார். இவர் தேவதானம் கோவிலுக்கு ஆண்டுக்கு நாலாயிரங்கோட்டை நெல்லும் சேத்தூர் திருக்கண்ணீசுவரர் ஆலயத்திற்கு மூவாயிரங்கோட்டை நெல்லும் அளந்துவந்ததாக இந்த நூல் கூறுகிறது. இந் நூலில் கூறப்படும் நெல்லின் வகைகள்: மிளகி, பூம்பாறை, சீரகச்சம்பா, காயுமிளகி, கல்லுகுண்டை, மூங்கில் சம்பா, வெள்ளை நெல் இன்னும் பல. சோற்றுக் கலைந்தவர்கள் சேத்தூருக்குச் செல்லுங்கள் என்று வழங்கும் பழமொழி இதனை மெய்ப்பித்துவிட்டது.

முத்துச்சாமித் தேவர் III 1847-1875

வடமலை திருவநாதத் தேவருடைய மகன் முத்துச்சாமித்

தேவர், இவர் தமிழில் புலமை பெறுவதற்காக பல புலவர்களை இவருடைய தந்தையார் நியமித்தார். முகவூர் இராமசாமிக்கவிராயர் இயற்றிய 'குறவஞ்சிப்பிரபந்தத்தைப்' பற்றியும், 'தாய்மகளேசல்'

என்ற சிங்காரக் கவியையும் ஏற்று உயர்ந்த கொடையும் கொடுத்துள்ளார். இவருடைய தந்தையார் இறந்த செய்தியை உடனே ஆங்கிலேயருக்கு அறிவிக்காததால் 19 வருடங்கள் சமீன் பதவி நிறுத்திவைக்கப்பட்டது. முத்துச்சாமித் தேவர் காலத்தில் கிஸ்தி கட்ட முடியாமல் சமீன் சப்திக்கு வந்தது. அதை அறிந்த சேத்தூர் மக்கள் தங்கள் தாலிகளையும், பிற நகைகளையும் கொண்டு வந்து கிஸ்திக்கு ஈடாக கொடுக்க வந்ததைப் பார்த்த ஆங்கிலேயர் அசந்தே போய்விட்டார்கள். சேத்தூர் மக்கள் மன்னர் மீது கொண்டுள்ள பேரன்புக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

சுந்தரதாசுத் தேவர் II 1875-1902

இவர் முத்துச்சாமித் தேவர் அவர்களின் மகன். தமிழில் ஆர்வமிக்கவர். தாமே கவி இயற்றும் திறமை வாய்ந்தவர். இவர் எழுதிய பாடல்கள் தனிப்பாடல்கள் திரட்டில் வந்துள்ளன. சுந்தரதாசுத் தேவர் மாண்பு நிறைந்த பண்புடையவர். சீரார்ந்த சீலர். சிவபக்தர். அருங்கலை விநோதர். தமிழ் தழைத்து ஓங்க என்றும் தமிழ்ப்புலவர்கள் புடைசூழ; அப் புலவர் பெருமக்களுக்கு வேண்டும் பொருள் கொடுத்த வள்ளலாவார்.

சுந்தரதாசுத் தேவர் 1877 இல் தேவதானம் கோவிலுக்கு மகா மண்டபம் அமைத்து அட்டபந்தனம் செய்து குடமுழுக்கும் மிகவும் சிறப்பாகச் செய்தார்கள்.

நச்சாடை தவிர்த்தவர் சேறைப்பதிகம், தேவதானம் பெரிய கோவில், கோவில் திருவிழா, திருவாதிரை விழா ஆகிய தலைப்புகளில் பாடல்கள் இயற்றியதோடு மற்ற கோயில்களை

பற்றியும் பாடியுள்ளார். சேறைத்தலவரலாறு மறுபதிப்பை 1893 இல் வெளியிட்டார். மேலும் துறைக் கோவை, பதீகப் பாமாலை, ஆகிய அற்புதமான கவிதைகளை இயற்றினார். இவரைப்பற்றிய குறிப்புகள் கலைக் களஞ்சியம் பாகம் 5 பக்கம் 59 இல் கூறப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மகாராசா இராமவர்மா மீது ஒரு வண்ணம் பாடல் பாடியுள்ளார். இதற்கு திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார். முகவூர் இராமசாமிக் கவிராயர், கல்போது பிச்சுவையர், எட்டிசேரி திருமலைவேல் கவிராயர், சென்னிமலை அண்ணாமலை ரெட்டியார் ஆகியவர்கள் இவரைப்பற்றி பாடியுள்ளார்கள்.

சேவுகப்பாண்டியத் தேவர் (24-1-1973 வரை)

சேத்தூர் சமீன்தார் வடமலை திருவநாத வணங்காமுடி சேவுகப்பாண்டியத்தேவர் அவர்களை, சேத்தூர் குடிமக்கள் அனைவரும், ‘சகலகலா வல்லவர்’ என்று பெருமையாகக் கூறுவார்கள். இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் முத்தமிழ் வித்தகர் என்றே போற்றுவர். பலநூல்கள் வெளியிட்டும் புலவர்களை ஆதரித்தும் ‘முத்தமிழ் வித்தகர்’ என்ற பட்டம் பெற்றார்.

குதிரைச் சவாரி, யானைச் சவாரி, துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம் போடுதல், சிலம்பு வரிசைகள் விளையாடுதல், கத்திச் சண்டை போடுதல் ஆகிய அனைவற்றிலும் அபாரமான திறமை படைத்தவர் சேவுகப்பாண்டியர்.

குதிரைகள், யானைகள், கலைமான்கள், சாதிநாய்கள் பல வண்ணப் பறவைகள், சேவல்கள் ஆகியவற்றை வளர்ப்பதிலும்

தலைசிறந்துவிளங்கினார். இவற்றிற்காக தனித் தனிக் கூடங்கள் உள்ளன.

வேட்டையாடுவதிலும் வல்லவர். கரடி, புலி, காண்டாமிருகம், வரையாடு, மந்தி ஆகியவற்றை வேட்டையாடிக் கொண்டுவந்து அவற்றைப் பாடஞ்செய்து அரண்மனை முன் மண்டபத்தில் வைத்திருந்தமை பார்ப்போர் மனதைக் கவரும் வண்ணம் இருந்தது.

சங்க இலக்கியங்களில் ‘சேவல்போர்’ குறித்து வரும் செய்திகளை நாம் அறிவோம். அவற்றையும் விஞ்சுகின்ற அளவு சேவுகப்பாண்டியர் சேவல் போருக்குப் புத்துயிர் ஊட்டினார். மாதந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளிலெல்லாம் ‘சேவல்போர்’ போட்டி நடைபெறும். போட்டியில் கலந்து கொள்ள அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களில் இருந்தெல்லாம் சேவல்களைக் கொண்டு வருவார்கள். போரில் வெற்றிபெற்ற சேவல்களுக்குச் சன்மானம் வழங்கப்படும். சேவல் கால்களில் கத்திகளைக் கட்டிவிட்டுச் சண்டைபோடச் செய்வதுமுண்டு. இச் சண்டை பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

சேவுகப் பாண்டியர் கஞ்சிரா வாசிப்பதில் ஆற்றல் பெற்று

விளங்கினார். திருச்சி வானொலி நிலையத்தில் சேவுகப் பாண்டியரின் கஞ்சிரா வாத்தியம் ஒலிபரப்பப்பட்டது.

சங்கர நாராயணர் கோவிலுக்கு மின்விளக்கு எரிய உதவி செய்து **4-9-1934** இல் மின்விளக்கைத் திறந்து வைத்தார். இதேபோல் தமிழகத்திலுள்ள பெரிய தலங்கள் தோறும் அறச்செயல்கள் பல செய்துள்ளார்.

தேவதானம் தேரோட்டத் திருவிழாவின் போது நடைபெறும் இசை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் காணக் கோடிக் கண்கள் வேண்டும். 'சேவுகப்பாண்டியர் தேர்வடத்தைத் தொட்டுக் கொடுத்த பின்பே தேர் ஓடும்; வேறு எவர்வரினும் தேரோடாது' - என நாட்டு புறப் பாடல்கள் பாடப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் இந்திர விழாவையும் விஞ்சும் அளவிற்குத் தேவதானம் விளங்கும். அத்தகைய சீரும் சிறப்பும் மங்காமல் சேவுகபாண்டியர் சேவை செய்து வந்தார். அவர் விட்டுச் சென்ற பணியை நாம் நிறைவேற்றுவோமாக.

சேத்தூர் ஜமீந்தார் சேவுகப்பாண்டியத் தேவர் வாழ்க்கை குறிப்பு

மனைவியர்

காந்திமதி நாச்சியார்
மீனாட்சி நாச்சியார் அக்காள், தங்கை (ஊர்க்காடு)
காமாட்சி நாச்சியார் (மலையாளம்)
கல்யாண சுந்தரமகாலட்சுமி நாச்சியார் (ஊர்க்காடு)

பிள்ளைகள்

1. தியாக சுந்தர ராஜ்தேவர் (மனைவி) ஊர்க்காடு ராணி சுப்புலட்சுமி நாச்சியார்
2. சிவப்பிரகாசத் தேவர் (மனைவி) சாவித்திரி நாச்சியார் திருச்சி ராமசாமித் தேவர் மகள் திருமணம் : 20-6-45
3. தங்கராஜா திருமலைக் கொழுந்து - இராமநாதபுரம் சேதுபதி வழியினருடன் திருமணம்.
4. கோட்டிலிங்க முத்துச்சாமி பாண்டியன்-திருமணமாகாத நிலையில் இறந்தார் (மைனர்)
5. ராஜகுமாரி பழனி மலையழகு நாச்சியாரின் (கணவன்

தேவதானம் பெரியகோவில்
முன்னாள் பாராளுமன்றத் தலைவரும் திருவாரூர் நகர சபைத் தலைவருமான சாம்பசிவன்) மணநாள் :- 13-6-45
(1973 சனவரி 24 - இறப்பு)


சிவப்பிரகாசர் தேவர்

ராஜகுமாரி மலையழகு நாச்சியார்

இதழ்களில் தேவதானம் பெரியகோவில் சேறை மன்னர்களின் செந்தமிழ்ப் பற்று

பண்டைத் தமிழகம் தமிழ் மொழியையும் தமிழ்ப்புலவர்களையும் போற்றிப் புரந்தது. புலவர்கள் இயற்றிய கவிதைகளை அறிஞர்கள் கூடிய அவையில் அரங்கேற்றி புலவர்களுக்கு தகுந்த செல்வங்களை வாரி வழங்கி மகிழ்ந்தனர் புரவலர்கள் .

இராமனாதபுரம் சேதுபதி மன்னர்களும் தமிழ் வளர்த்துப் பெருமையுற்றனர். அவர்களை யொப்பவே தமிழ் வளர்த்துப் பெருமையுற்ற சேறை மன்னர்களின் செந்தமிழ்ப் பற்றை ஈங்கு ஆராய்வோமாக.

தேன் கொட்டியது !

சேறை வயல்களில் கயல் மீன்களும், வாளை மீன்களும், துள்ளிக்குதிக்கின்றன. மீன்கள் துள்ளிக் குதிக்கும் போது வயல் ஓரத்திலுள்ள வாழை மரத்திலுள்ள கதலிப் பழத்தில் மோதுகிறது. அவ்வாறு மோதுவதின் பயனாகக் கதலிப் பழங்கள் கீழே உதிர்கின்றன.

அதிலிருந்து தேன் இடைவிடாது சொட்டுகிறது. தேன் வயலில் சொட்டுவதால் வயலிலுள்ள நெற் பயிர்கள் பனையிலும் உயரமாக வளர்கின்றன. சேறையில் குளிர்ச்சியான மலர்கள் பூத்த விசாலமான மரங்கள் ஓங்கி வளர்ந்திருப்பதன் காரணமாக தூரத்தையே மறைக்கும், சோலைகள் அடர்ந்திருப்பதன் காரணமாக இருட்டாகவே இருக்கும். (நாட்டுப் பாடல்கள்)

பாடி மகிழ்ந்தார்!

அந்தச் சோலையின் கண் கிளிகள் சேறை மன்னர்களின் புகழ் பாடக்கேட்ட நாகணவாய் புட்கள் தலையை அசைக்கும். வண்டுகள் பலவிதமான கீதங்களை முழக்கும். அந்தக் கீதங்களைக் கேட்ட செந்தாமரை மலர்கள் வண்டுகளுக்குப் பரிசாகத் தேனை வழங்கும் என்று சேறை சமத்தானப் புலவர் பாடியுள்ளார்.

நான்கு தெய்வங்கள்!

இவ்வூரின் நான்கு திசைகளிலும் நான்கு தெய்வங்கள் இருந்து காத்து வருகின்றன என்று மக்கள் கருதுகின்றனர். கீழ்த்திசையில் மாரிதேவியும், மேல்திசையில் எக்கலா தேவியும், வட திசையில் வடக்கருள் தேவியும், தென் திசையில் காளி தேவியும் காத்து வருகின்றனர்.

இவ்வூரில் ஏதாவது கொள்ளை நோய் வந்தால் இந்நான்கு தெய்வங்களுக்கும் பொங்கலிட்டுப் பூமாலை சூட்டி வழிபட்டால் நீங்காத குறையும் நீங்கும் என்று எண்ணுவதின் காரணமாக இன்றும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன. வருகின்றவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கும் குபேரபுரியைப் போன்றது சேறை யென்றால் மிகையாகாது.

செந்தமிழ் மணம்!

சேறை நாட்டில் இயற்கைமணமும் தெய்வ மணமும் தவிர செந்தமிழ் மணமும் கமழ்கின்றது. செந்தமிழ் மணம் கமழும் நாடுகளில் சேறை முதன்மை வாய்ந்தது.

ஏகாம்பரத்தேவர் அவர்கள் மரபின் வழித் தோன்றிய சேறை

சமத்தான ராஜபரம்பரையினர் செந்தமிழை வளர்த்த செம்மல்கள் என்பதை சேறை இலக்கியங்கள் சிறப்புற விளக்கும். (உதாரணமாக 'நதி விலாசம்' என்ற நூலைப் பாருங்கள்.)

ஆதரித்தார்!

முத்தமிழையும் வளர்க்க சேறை வணங்காமுடி சேவுகப் பாண்டியத் தேவர் எடுத்துக் கொண்ட முயற்சி சொல்லொண்ணுதது.

இயல் தமிழை வளர்க்க ஸ்ரீவில்லிபுத்தூர் அப்புவையங்கார், முகவூர் இராமசாமிக் கவிராயர், மீனுட்சி சுந்தரக்கவிராயர், அருணாசலக்கவிராயர், கந்தசாமிக் கவிராயர், கணபதிக்கவிராயர், அப்பாவுக் கவிராயர் முதலியவர்களையும்; இசைத் தமிழை வளர்க்க மடவார் விளாகம் முத்தையா பாகவதர், சுப்பையா பாகவதர், புதுக்கோட்டை மாமுண்டியாபிள்ளை முதலியவர்களையும்; நாடகத் தமிழை வளர்க்க திருவேங்கடம், நாராயணசாத்திரிகள், திருமலை சாத்திரிகள் முதல்யவர்களையும், ஆதரித்து 'முத்தமிழ் வித்தகர்' என்ற பட்டமும் பெற்றார்.

கவிதைகள் !

சேறை வள்ளல் வணங்காமுடி சேவுகப்பாண்டியத் தேவர் அவர்களைப் போலவே அன்னாரின் முன்னோர்களும் தமிழபிமானங்கொண்டு தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வந்திருக்கின்றனர்.

இச்சேறை மன்னரின் தந்தை சுந்தரதாசுத் தேவர் அவர்கள் 'துறைக் கோவை' 'பதிகப்பாமாலை' 'தனிப்பாடற்றிரட்டு' ஆகிய அற்புதமான கவிதைகள் இயற்றி; பற்பல புலவர்களையும் ஆதரித்து இருக்கின்றார்.

தாய் மகளேசல் !

சேவகப்பாண்டியரின் பாட்டனார் முத்துச்சாமித் தேவர் அவர்கள் மு. இராமசாமிக் கவிராயர் இயற்றிய 'குறவஞ்சிப் பிரபந்தத்தையும்' 'தாய் மகளேசல்' என்ற சிங்காரக் கவியையும் பாராட்டி உயர்ந்த கொடையும், மாதத் திட்டமும் செய்துள்ளார்.

இரண்டாவது, பாட்டனார் சேவுகப்பாண்டியத்தேவர் சங்கர மூர்த்தி கவிராயருக்கு ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார். இம் மன்னரின் சிறப்பைக் கவுரவிப்பதற்காகத்தான் 'சேறைப் பட்பந்தம்' என்ற நூல் இயற்றப்பட்டது.

கிடைக்க வில்லை !

மூன்றாம் பாட்டனாரிலிருந்து பதிமூன்றாவது பாட்டனார் வரையிலும் அவர்களின் முழு விவரங்களைப் பற்றி அறிய நூல்கள் கிடைக்கவில்லை. பதிநான்காவது பாட்டனார் சுந்தரதாசுத் தேவர் மீது 'அன்னம் விடு தூது' என்னும் பிரபந்தம் பாடப்பட்டுள்ளது. புலவர்களையும் ஆதரித்திருக்கின்றார்.

கோவில் கட்டியவர் !

பதினாறாவது பாட்டனார் சின்மயத் தேவர் சேறையம்பலத்தே திருக் கூத்தாடிய சுவாமி நச்சாடை லிங்கப் பெருமானது வடமொழி மான்மியத்தை மொழி பெயர்க்கச் செய்து தக்க சன்மானமும் வழங்கியுள்ளார். இச்சின்மயத் தேவரால் தான் தற்போதுள்ள பெரிய கோவிலான 'நச்சாடை லிங்கம் - தவம் பெற்றவள் கோவில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பஞ்சமில்லை !

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பது முந்தையரின் மொழி ஆனால் இன்றைய திருமொழி என்னவெனில் 'சேறைச் செந்நிலமும் செந்தமிழ் செப்பும்' என்பதாம். தமிழையும் தமிழ்ப் புலவர்களை

சரித்திரம் எழுதியவர் !

சேறை ஒரு தேன் தட்டு, அந்த தேன் தட்டில் செந்தமிழ்த்தேன் சொட்டுகிறது. சேறைப் புலவர்கள் கவிதைத் தேனைச் சேர்க்கும் ஈக்கள் போன்றவர்கள். தேனீக்களில் முதன்மையான ராணி ஈக்களைப் போன்றவர்கள் சேறை மன்னர்கள்.

தேனின் உற்பத்தி இடம் பூக்கள். அந்தப் பூக்களைப்

போன்றது சேறையைச் சுற்றியுள்ள ஊர்கள். அதிகமாக தேனைக் கொடுக்கும் பூக்களுமுண்டு. அநதப் பூக்களில் ஒன்றைப் போன்றது முகவூர். இவ்வூர் சேறையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இவ்வூரைச் சிறப்பாக இங்கே குறிப்பிடுவதற்கு காரணம் குமணவள்ளல் சரித்திரம் எழுதிய மு.ரா. கந்தசாமிக்கவிஞர் இவ்வூரில் தோன்றியதால் தான்.

பாரதி வாக்கு !

'பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற கவிக்குயில் பாரதியின் வாக்கின்படி சேறைத்தெருவெல்லாம் தமிழ் முழக்கம் முழங்கச் செய்வீர்! சேறை மன்னர்களின் செந்தமிழ்ப் பற்றை உலகறியச் செய்வீர்! (மாலைமுரசு 11-6-65 ந. இராசையா)

'சேறை வளமும் சேவகப் பாண்டியரின் கொடையும்'

பஞ்சநதிகளும் சேறையைச் சுற்றியுள்ள குளங்களில் நிரம்பி சேறையை நெல் வழங்கும் நல்லூராக்குகின்றது. நெல் அளவுமீறி விளைவதின் காரணமாகச் 'சோற்றுக்கு அலைந்தவர்கள் சேற்றூருக்குச் செல்லுங்கள்' என்று பெருமை பெற்ற ஊர். சேறையின் வயல் வளத்தைப்பற்றி 'சேறை மன்னர்களின் செந்தமிழ்ப்பற்று' என்னும் தலைப்பில் எடுத்தியம்பியுள்ளேன். இவ்வண்ணம் வளம் பொருந்திய சேறையில் 'வல்' என்ற சொல் சூதையும்; 'மடம்' என்ற சொல் இரவையும்; 'அடி' என்ற சொல் பாக்களின் அடியையும்; 'வில்' என்ற சொல் வீரர்களின் வில்லையும்; 'விலங்கு' என்ற சொல் வேட்டைக்களத்துப் பொருள்களையும் குறிக்குமே தவிர மாற்றுப் பொருளைக் குறிக்காது. 'கோரம்' என்ற சொல் குதிரையைத் தான் உணர்த்துமே தவிர 'பயங்கரம்' என்று பொருள் ஆகாது, 'போர்' என்ற சொல் கதிர்சூடு தவிர கொடிய பகைவரைக் குறிக்காது. இதில் இருந்து சேறையின் சிறப்பு தெற்றெனப் புலப்படும். சேறையின் வளம்பற்றி திரு. மு. குருசாமி அவர்கள் எழுதிய பாடல் இங்கு நினைவு கூறத் தக்கது.

'அன்னம் வயல்சூழ் அணியாளூர் சேறையாம்
மன்னன் முறைகண்ட சேற்றிடமாய் மாநிலத்தில்
தன்புகழ் மின்னிஇ நீழ்வினை செய்ததில்
விண்புகழ் கொண்டதமி பூர் '

'கற்றும் பறவையும் காவி மமர்க் கண்ணும்
விற்பொலியும் வீரமும் கற்புமிகு கன்னியரும்
யுற்புமீ மும்புகழும் நற்றமிழால் வீற்(று)
இருப்பவூர் சேறையூராம்.

இப்பகுதியில் வாழும் பெண்களின் ஆட்டத்தை தேவலோகப் பெண்களும் காண வருவார்கள். இனிமையான குரலையுடைய குயில் மாதருடைய குரலுக்குத் தோற்கும். சேறைப்பட் பிரபந்தம் கூறும் பாடல் இங்கு குறிப்பிடத்தக்கது.

'நீலவிழி வீச்சும் நல்ல பாலனைய பேச்சும் வில்லை
நேர் புருவ வாய்ப்பும் எல்லை காணலாமே

கோல முலைச்சாய்ப்பும் வல்லி போலுமிடை நேர்ப்பு
முல்லை கூறுமுகை பூத்த செய்ய ஆம்பல் போலே

சீலநகை காட்டும் கொவ்வை வாயழகும் ஏற்ற முள்ள
சேறைநகர் மூத்த பள்ளி தோன்றினாளே

'இடையிலோ தனத்திலோ சொல்லிதத்திலோ ஈனுவாழைத்
துடையிலோ மள்ளர் நெஞ்சைத் தூது விட்டயர் கின்றாரே'

இவ்வூரில் இயற்கை மணமும் தெய்வ மணமும் தவிர கொடை மணமும் கமழுகின்றது. ஏகாம்பரத் தேவர் அவர்கள் மரபின் வழித்தோன்றிய இச்சேறை மன்னர்கள் கொடைவள்ளல்கள் என்று சேறை இலக்கியங்கள் சிறப்புற விளக்கும். இக்கொடை வள்ளல்களில் முதன்மையானவர் ஜமீன்தாரும், ஊராட்சி மன்றத் தலைவரும், நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவிலின் பரம்பரைத் தர்மகர்த்தரும் பெருங்கொடை வள்ளலுமாகிய வணங்காமுடி திரு. சேவுகப்பாண்டியத்தேவர் அவர்களே. இம்மன்னரின் காலத்தில் சேறையின் முன்னேற்றம் பெரிதும் வியக்கத்தக்கதாகும். அன்னாரின் கொடைவளத்தைப் பற்றி 'சேறைவள்ளலும் பெரும் சமையலும்' என்ற கட்டுரையில்

வரைந்துள்ளேன். இருப்பினும் மேலும் சில சான்றுகளை இங்கே எடுத்தியம்ப விழைகின்றேன்.

மன்னர் அவர்களால் சேவல் வளர்ப்பதற்காகக் கட்டப்பட்ட கட்டிடம் இன்று **தேவர் துவக்கப்பள்ளியாக** காட்சியளிக்கின்றது. அன்று பக்தர்கள் கூடி பஜனை பாடுவதற்காக கட்டப்பட்ட கட்டிடம். இன்று **கல்விக்கூடமாகக்** காட்சி அளிக்கின்றது. நாட்டியம் அரங்கேற்றத்திற்குக் கட்டிய கட்டிடம் **ஊராட்சி மன்ற அலுவலகமாகக்** காட்சியளிக்கின்றது. குதிரைகள் கட்டிய இடம் இன்று **மருத்துவமனையாக** காட்சியளிக்கின்றது. அன்று சத்திரமாக இருந்தது இன்று ***அரசாங்க அலுவலர்கள் தங்கும் சாவடியாக*** காட்சி அளிக்கின்றது. மாடுகள் கட்டும் பண்ணைத் தொழுவும் அதனைச் சுற்றியுள்ள பகுதியும் தாழ்த்தப்பட்டோர் வாழும் சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. மௌனச்சாமி மடம் இன்று **உயர்நிலைப் பள்ளியாகக்** காட்சியளிக்கின்றது. கூமாச்சி மலையின் அடிவாரத்தின் கண்ணுள்ள இடங்கள் இன்று **உயர் நிலைப்பள்ளியின் விளையாட்டுத் திடலாகக்** காட்சியளிக்கின்றது.

பிறர் துன்பம் துடைக்கும் அன்புருவான வள்ளல் சேவகப் பாண்டியர் என்றால் மிகையாகாது. தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்துப் பெருமையுற்ற வள்ளல். இன்றும் வாழ்கின்ற கூட்டம் மிகமிகப் பெரிது.

சேவுகப்பாண்டிய மன்னர் மீது சேறை மக்கள் அளவிலா அன்பும் அபிமானமும் கொண்டுள்ளார்கள். ஜமீன் ஒழிந்த நாளில் கூட அன்னாரின் தலைமை வேண்டும் என்பதற்காகவே ஊராட்சி மன்றத்தின் தலைவராக சேறை மக்கள் தெரிந்தெடுத்து; எண்பதாம் ஆண்டு விழாவையும் கொண்டாடினர். சேறை நகர் வாயிலின் வளைவு அன்னாரின் நினைவாக்கப்பட்டது. (தினமலர் 8-6-65 ந. இராசையா)

சேறை வள்ளலும், பெருஞ்சமையலும்

'சோணாடு சோறுடைத்து' என்பது முந்தையரின் பழமொழி. ஆனால் இன்றைய திருமொழி என்னவெனில் "சோற்றுக்கு

அலைந்தவர்கள் சேற்றூருக்குச் செல்லுங்கள்'' என்பதாம். வாழ்விற்குரிய இயற்கை வளனும் செயற்கை நலனும் சிறப்புற்று ஓங்கி நிற்கும் ஒப்புயர்வற்ற உயரிய ஊர். சேறை வயல் வளம் நிறைந்த பகுதியாக இருப்பதால் நெல் விளைவுக்குக் கேட்கவும் வேண்டுமோ ? பழுத்த நெல்லால் சுவாமிக்கும் அம்மனுக்கும் தேரும், சூலும், வேலும், ஆபரணங்களும் செய்து கொடுப்பர் இவ்வூர் மக்கள் என்றால் நெல்விளைவின் சிறப்பு தான் என்னே ! என்னே !!

இவ்வூருக்கு குடதிசையிலே ''மேற்குத் தொடர்ச்சி மலை'' அழகாக அரண்போல் அமைந்து இருக்கிறது. ஸ்ரீவடமலை திருவனாத வணங்காமுடி சுந்தரதாசுத் தேவர் அவர்களின் தனிப்பாடல் திரட்டில் கீழே எடுத்துக் காட்டிய பாக்களால் சேறையின் செம்மை தெற்றெனப் புலப்படும்.

''தங்கள் பிறவிதனை யகற்ற வாதவனந்
திங்களுடன் வந்த பணி சேறையே - மங்குலிதென்
னுகமுடைய வெய்தானாட கரர் ஓடுசத்தனுமுடைய வெய்தானாடு''

''காவலை யுற்றதனாற் காணரம்பை மேவுதலாற்
றேவருலகம் பொருவுஞ் சேறையே - மேவரிய
வாலமுண்ட வீசன் அருளுங்குமரனெனும்
பாலன் வளரும் பதி''

ஆதியில் சுந்தரபாண்டியத்தேவர் மகன் சின்மயத்தேவர் அவர்களால் ஆளப்பட்டு வாழையடி வாழையென வந்த இம்மன்னர் பரம்பரையில் வடமலை திருவனாத வணங்காமுடி முத்துச்சாமித் தேவர் அவர்களாலும் இப்பதி சிறப்புற்றது என்றால் மிகையாகாது. அப்பெருந்தகைகளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு இவ்வட்டார மக்கள் முத்துச்சாமிபுரம் என்றும் சுந்தரராசுபுரம் என்றும் அழைப்பது பாராட்டத்தக்கது.

வடமலை திருவனாத வணங்காமுடி சுந்தரதாசுத் தேவர் அவர்கள் பண்புடையவர். சிவபக்தர், அருங்கலை விநோதர், தமிழ் ஆர்வம் கொண்டவர். தானே கவிபாடும் வல்லமை கொண்டவர். அன்னார் இயற்றிய பாக்களைத் தனிப் பாடல்திரட்டாக நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி தேவஸ்தானம் வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது ''பழமரம் நாடும் பறவைகள் போல்'' அன்னாரைப்

புலவர்களும் அறிஞர்களும் நாடிச்செல்வார்கள். அப்புலவர் பெருமக்கட்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளல்.

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான்கொல் எனுஞ்சொல்'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க அவர் தம் குமாரர் வடமலை திருவனாத வணங்காமுடி சேவுகப்பாண்டியத்தேவர் அவர்கள் தந்தையின் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். தனது இளமைப் பருவத்தில் குதிரை ஏற்றம், யானை ஏற்றம், மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், சிலம்பு விளையாடுதல், கத்திச் சண்டை முதலியனவற்றில் நன்கு தேர்ச்சியடைந்தார்.

தனது இளமைப் பருவத்திலேயே நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் சங்கீதத்திலும் நிபுணரானார். கஞ்சிராவாத்தியம் இசைக்கும் ஆற்றல் பெற்று விளங்குவதோடன்றி தமிழகத்திலேயே கஞ்சிரா வாத்தியம் இசைப்பதில் முன்னணியில் நின்றவர் இவரே என்றால் மிகையாகாது. 60 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி வானொலி நிலையத்தில் கஞ்சிரா வாத்தியம் இசைத்து நிபுணர் என்ற பட்டமும் பெற்றவர். கலைஞர்களைப் போற்றுவதில் ஈடு இணையற்றவர். சுப்பிரமணிய பாரதி கூட தன் இளமைப் பருவத்தில் சிறிது காலம் இந்த சமஸ்தானத்தில் வாழ்ந்ததாகத் தெரிவது குறிப்பிடத்தக்கது. இசையுலகில் இவரையறியார் எவருமில்லை. காலஞ்சென்ற நாதஸ்வர வித்வான் இராஜரத்தினம் பிள்ளை அவர்களே ஜமீன்தார் காலில் விழுந்து வணங்கி ஆசிபெற்றது அன்னாரின் பெருமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

எட்டையபுரத்தில் கட்டிய பாரதி மண்டபத்திற்கு. மன்னர் உதவிய வள்ளல் தன்மையைக் காலஞ் சென்ற கல்கி கிருஷ்ண -மூர்த்தி அவர்கள் ''மகாத்மாவும் மகா கவியும்'' என்ற தனது நூலில் புகழ்ந்து கூறியிருப்பது அன்னாரின் வள்ளல் தன்மைக்கு எடுத்துக்காட்டு.

முனைவர் ந. இராசையா

சேறைக்கு அருகில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள இராசபாளையத்தில் ''சேத்தூர் சேவுகப் பாண்டியா மேல்நிலைப் பள்ளி இயங்கி வருவது அன்னாரின் வள்ளல் தன்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

மேலும் நீண்டகாலமாக சேற்றூரில் உயர்நிலைப்பள்ளி ஒன்று இல்லாமல் இருந்த குறையும் அவரால் நிவர்த்திக்கப்பட்டது. தனது முழு முயற்சியால் இராமனாதபுரம் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி ஒன்றை இயக்கி, அதற்கு ஏராளமான சொத்துக்களையும் கொடுத்து கட்டிடமும், நிலமும் விளையாட்டு இடமும் கொடுத்து உதவிய வள்ளல் தன்மையை பாராட்டாமல் இருக்கமுடியாது. ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றுள் எல்லாம் தலை'' என்ற தெய்வப்புலவர் வாக்கிற்கிணங்க மேற்படி உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்கட்கு தனது முயற்சியால் மதிய உணவு வழங்கி வந்தார். இவ்வட்டார உயர்நிலைப்பள்ளிகளில் சேற்றூர் உயர்நிலைப் பள்ளியைத் தவிர, வேறு எந்த உயர்நிலைப்பள்ளிகளிலும் மதிய உணவு அன்று வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சேறையில் தேவர் சமூகத்தினரால் நடத்தப்படும் தேவர் ஆரம்பப் பாடசாலைக்கு கட்டிடமும் நிலமும் வழங்கியிருக்கின்றார்.

இவ்வட்டாரத்தில் அரசினரால் மருத்துவமனை நடத்தப் பெறாத காலத்திலேயே மகாராஜா அவர்களால் மிகவும் சிறப்பாக மருத்துவமனை ஒன்று நடத்தப்பெற்று வந்தது. தற்பொழுது அந்த மருத்துவமனை ராஜபாளையம் உள்ளாட்சி நிருவாகத்தால் சேற்றூர் சேவுகப்பாண்டியா மருத்துவமனை என இயங்கி வருகிறது.

''குடியுயர கோல் உயரும்'' என்ற முதுமொழியை அறிந்து ஆட்சி செலுத்திய அன்னார் அரசியலிலும் ஈடுபட்டு 1928-ம் ஆண்டு தமிழக மேல்சபை அங்கத்தினராய் பணியாற்றினார். மதுரை மாவட்டக் கழகத் தலைவராகவும்; இராமநாதபுரம் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்து பல தொண்டுகள் புரிந்தமை குறிப்பிடத் -தக்கது. அரசியலில் நீதி, நேர்மை, நாணயம் வேண்டும் என்று எண்ணக் கூடிய உயர்ந்த உன்னத குறிக்கோள் உடையவர்.

காலஞ்சென்ற பசும் பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மகாராஜா அவர்களின் நெருங்கிய நண்பர்.

அவரால் ஆளப்பட்டு வந்த கிராமங்களில் ஒன்று தேவதானம். ஸ்ரீவில்லிபுத்தூர் - தென்காசி நெடுஞ்சாலையில் சேற்றூருக்குத் தெற்கே ஏறத்தாழ 4 கி.மீ. தொலைவிலுள்ளது தேவதானம். திருக்கோவிலுக்கு அரசர் இறையிலியாக விட்ட நிலமாதலால், தேவதானம் எனப் பெயர் வழங்கப்படுகிறது என்று 'ஊரும் பேரும்' என்ற நூலில் திரு. ஆர்.பி. சேதுப்பிள்ளை கூறுகிறார். இக்கோவிலுக்கு மன்னர் அவர்களால் விலையுயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள், ஆடைகள், அணிகள் மற்றும் பல சாமான்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு 10 நாட்கள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது 10 நாள் விழாவின் போதும் மன்னர் அவர்களால் கொடுக்கப்பட்ட நிலத்திலின்று வரும் வருமானத்தில் அன்னதானம் வழங்கப்படும். இந்த உணவு விடுதிகளுக்குப் பெயரே 'பெருமை சமையல்' என்பதாகும். ஒவ்வொரு நாள் விழாவின்போதும் இரு வேளைகளும் ஆயிரக் கணக்கான ஆட்களுக்கு உணவு வழங்கப்படும். பாகுபாடில்லாமல் எல்லோருக்கும் அறுசுவை உண்டி கொடுக்கப்படும். பெரும் சமையல் செய்யும் இடமோ மிகப் பெரிது. அங்கு சென்று பார்த்தால் ஒரு பக்கம் பூசணிக்காய் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும். மற்றொரு பக்கம் அரிசி வெள்ளி மலை போல் குவிக்கப்பட்டிருக்கும். வேறோரு பக்கம் பாலும், மோரும், நெய்யும், தனித்தனியாக நிரப்பி வைத்திருப்பதைப் பார்த்தால் சிறு குளங்கள் போல் காட்சியளிக்கும். அதில் வேலை செய்யும் பணியாள் எண்ணிறந்தவர்.

இப்பெருஞ் சமையல் சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணம் சேறை வள்ளலான வடமலை திருவனாத வணங்காமுடி சேவுகப்பாண்டியத் தேவர் அவர்களும் அன்னாரின் முன்னோரும் ஆவார்கள். தெய்வீகத்தையும், தேசியத்தையும் இருகண்களாகக் கொண்டவர்கள் மன்னர்கள் மட்டுமல்ல குடிமக்களும் அதற்கு ஆதரவாகவே இருந்தனர். (தினமலர் 22-5-64 ந. இராசையா)

சேத்தூரில் விடுதலைப் போர்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்கள் பலராவர். அவர்களில் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரர் மாவீரன் பூலித்தேவன் என்பவர் ஆங்கிலத் தளபதி அலெக்சாண்டர் கெரான் என்பவனை முதன்முதலாக 1755 இல் எதிர்த்துப் போராடியது இப்போரின் முதல் முழக்கமாகும்.

தென்னகத்தின் தேசிய எழுச்சிக்கு மாவீரன் பூலித்தேவனோடு தோளோடு தோள் கொடுத்து தமிழகத்தின் தன்மானத்தை காக்க முழக்கமிட்டவர்களில் சேத்தூர் பாளையக்காரர் திருவநாதத்தேவனும் கொல்லங் கொண்டான் திருமலை வாண்டாயத் தேவனும் முக்கியமானவர்களாவர்.

சேத்தூர் பாளையக்காரர் திருவநாதனும், கொல்லங்கொண் -டான் பாளையக்காரர் திருமலை வாண்டாயத் தேவனும், மாவீரன் பூலித்தேவனுக்கு உற்ற நண்பராவர். மாவீரன் பூலித்தேவனின் ஆணைக்காகக் காத்திருந்தவர்கள். கொல்லங்கொண்டான் கோட்டை -யும், சேத்தூர் கோட்டையும் வலுவானதாக இருந்தன. பக்கத்தில் இருந்த சிவகிரி பாளையம் மட்டும் ஆங்கிலேயர் பக்கம் சார்ந்திருந்ததால் சிவகிரி பாளையத்தின் மீது எச்சரிக்கையாகவே இருந்தனர்.

மதுரை, 1736 க்குப் பிறகு நவாபு கைக்கு மாறியது. அப்போது சேத்தூர் பாளையக்காரராக இருந்தவர் சின்னையாத் தேவர் என்ற பாளையக்காரனின் இரண்டாவது மனைவியின் மகன் சிதம்பரத் தேவர் எனபவர். அவரின் ஆட்சிக்காலத்தில் நவாபு சேத்தூர் மன்னனிடம் கப்பம் கேட்டு வந்தான். கப்பத்தை வசூலிக்க மிகவும் கெடுபிடியாக நடந்து கொண்டனர். ஆனால் சிதம்பரத் தேவனோ கப்பம் கட்ட முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். உடனே ஆற்காடு நவாபு சேத்தூர் அரண்மனையை சப்தி செய்ய வருவதாக ஆணையிட்டான்.

நவாபும் ஆங்கிலேயப் படையும் சப்தி செய்ய வருவதை அறிந்த சிதம்பரத் தேவன் சிறிதும் கலங்காமல், அவர்கள் கையில் சிக்கி இறப்பதைக் காட்டிலும் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்று எண்ணினார். அவருடைய முடிவை அவருடைய சகோதரர்கள் ஏழு பேரும் ஏற்றுக் கொண்டனர். தாங்களும் தற்கொலை செய்வது என்னும் முடிவிற்கு வந்தனர்.

அன்று இரவில் யாருக்கும் தெரியாமல் சிதம்பரத் தேவனும், அவருடைய சகோதரர்கள் ஏழு பேரும் அரண்மனையை விட்டு வெளியேறி, சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுவாக்குளத்திலுள்ள குல தெய்வமான கூடமுடையார் கோயிலில் வழிபட்டு அதற்குத் தெற்கிலுள்ள மேட்டில் தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டனர். அந்த இடத்தில் இறந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டுள்ளன. இன்றும் அந்த வீரக்கற்களைக் காணலாம்.

மறுநாள் காலை மன்னர்கள் இறந்த நிலையைத் தெரியா மக்கள் நவாபை மறியல் செய்து சப்தியை தடுத்து நிறுத்த பெரும் திரளாகக் கூடி விட்டனர். நவாபும் வந்தார். இந்த சோகமுடிவை அறிந்த அனைவரும் ஆராத் துயரடைந்தனர். நவாபும் இந்த மக்களுக்கு மன்னர் மீது எவ்வளவு உயர்ந்த உள்ளமிருக்கிறது என்று மனமாரப் போற்றி சப்தி செய்யாமல் வந்தவழியே திரும்பிச் சென்றான். (வீரத்திருமகன் தேவர் குரல், நவம்பர் 2004, ந. இராசையா).

சேத்தூரில் யூசுப்கான் போர் :

1758-இல் யூசுப்கான் சேத்தூர் பாளையத்தின் மீது படையெடுத்தான். அந்த படையெடுப்பின் போது யூசுப்கானுக்கு பணம் செலுத்துவதாக அறிவித்து விட்டு, பூலித்தேவனின் படைகளைக் கொண்டு வந்து நிறுத்தினான். திருவில்லிபுத்தூருக் -குச் சென்ற யூசுப்கான் திரும்பவும் சேத்தூர் மீது படையெடுத்தான். மாவீரன் பூலித்தேவனின் படைவீரர்கள் யூசுப்கானின் படைவீரர்கள் தலையை வெட்டிக் கொண்டே சென்றனர். இச்செய்தியை துர்க்காதாஸ் எஸ்.கே.சாமி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை இயக்கப்போர் மூண்ட இந்தக் காலத்தில் சேத்தூரில் பாளையக்காரனாக விளங்கியவர் திருவநாதத் தேவராவார். நவாபுக்கு வரிகட்ட மறுத்து உயர்தியாகம் செய்த சிதம்பரத் தேவனின் மைந்தர். நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரர் பூலித்தேவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பராவார். கொல்லங் கொண்டான் பாளையக்காரருக்கு உறவினர் திருவநாதத் தேவர்.

சேத்தூர் பாளையக்காரர் திருவநாதத் தேவரின் முன்னோர் பந்தள தேசத்து படைத்தளபதி திருவநாத நாயக்கனை எதிர்த்துப் போர் சேய்து பந்தள தேசம் வரை விரட்டியடித்து வெற்றிபெற்றார். அதன் நினைவாக சேத்தூர் மன்னர்களின் பெயரில் 'திருவநாதன்' என்னும் பட்டம் வழங்குவதாயிற்று.

நவாபுக்கு வரி கொடுக்க மறுத்து குரல் கொடுத்தார் திருவநாதன். மாவீரன் பூலித்தேவனோடு இணைந்து நவாபையும் ஆங்கிலேயரையும் கடுமையாக எதிர்த்தார். பலகட்டமாகப் போர்கள் நடந்தன. 1767 மே மாதம் மூன்றாம் நாள் சேத்தூர் கோட்டை ஆங்கிலேயரால் தாக்கப்பட்டது. கோட்டையிலுள்ள வீரர்கள் அருகிலுள்ள காடுகளில் இருந்து சூறாவளிபோல் தாக்கி கும்பினியர் படைகளைச் சின்னாபின்னப் படுத்தினர். இந்த வீரம் செறிந்த போரைக் குறித்து கும்பினியத் தளபதியான டொனால்டு காம்பல், கும்பினியக் கவர்னர் சார்லஸ் பௌசியருக்கு எழுதிய கடிதத்தின் மொழி பெயர்ப்பு காணத்தக்கதாகும். சேத்தூர் போருக்கு முன்னால் கொல்லங் கொண்டானில் போர் செய்து, அதன் முடிவை மேலிடத்திற்கு இது போன்ற கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதங்கள் யாவும் இன்னும் சென்னை எழும்பூரிலுள்ள ஆவணக் காப்பகத்தில் உள்ளன.

கர்னல் காம்பல் என்ற ஆங்கிலேயர் எழுதிய கடிதத்தின் சுருக்கம் வருமாறு.

மதிப்பிற்குரிய ஐயா,

இன்று நான் கொல்லங்கொண்டானிலிருந்து எனது படைகளை நடத்திக் கொண்டு சேத்தூருக்கு வந்தேன்.

கோட்டையின் அருகிலுள்ள சத்திரத்தில் தங்கியிருந்த படைகள் நம்மை வந்து தாக்கினர். கேப்டன் கூப்பர் வீராவேசத்துடன் போரிட்டு கூட சேத்தூர் படை வீரர்கள் இடைவிடாமல் போரிட்டனர். நம்முடைய படை வீரர்களும் மிகவும் கொடுமையான துப்பாக்கித் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர். கேப்டன் கூப்பருக்கு விரல் துண்டானது. லெப்டினெட் சான்சனுக்கு ஒரு கை ஊனமானது. மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டு 46 பேர் படுகாயமுற்றனர். இரண்டு பதினெட்டுப் பவுண்டு பீரங்கி, ஒன்பது பவுண்டு பீரங்கி ஆகியவற்றைக் கொண்டு கோட்டையின் ஒரு வாயிலை நோக்கி இடைவிடாமல் சுடும்படி ஆணையிட்டேன். படைகள் சோர்வடைந்து விட்டதால், கோட்டையை உடனடியாக சுற்றி வளைத்து முற்றுகையிடுவதற்கு முடியாமல் போயிற்று.. சேத்தூர் கோட்டை பாளையங் கோட்டையைப் போல் பெரிதாகயிருக்கிறது. இங்கு ஆயிரம் பொதி மாடு சுமையுள்ள உணவுப் பொதிகளும், கொல்லங் கொண்டானிலிருந்து கொண்டு வரப்பட்ட 400 பொதிச் சுமையுள்ள உணவுகளும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஏராளமான படைகளை அனுப்பி வைக்கவும். இந்தக் கோட்டையைத் தகர்க்கும் வேலையை நானே நாளை செய்து முடிக்கிறேன். இதற்குத் தென்பகுதியிலுள்ள அனைத்துக் கோட்டைகளையும் அடக்கும் வரை என் படைகளில் ஒரு பட்டாளத்தை இங்கேயே வைத்துக் கொள்கிறேன்''.

இவ்வாறு டொனால்டு காம்பெல் மேலிடத்திற்கு எழுதியுள்ளார்.

சேத்தூர் பாளையக்காரருக்கும், கும்பினியர்களுக்கும் நடை பெற்ற இறுதிப் போரான இந்தச் செய்தியை ''இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்'' என்ற நூலில் பக்கம் 64 இல் நான் குறிப்பிட்டுள்ளேன்.

வீரம் செறிந்த விடுதலைப் போரை சேத்தூர் பாளையக்காரர் செய்தும் அந்த வரலாறுகள் யாவும் மறைக்கப்பட்டன. கும்பினியரின் ஆணைகளால் சேத்தூரின் விடுதலைப் போரைத் தெரிந்து கொள்ள முடிகிறது. தமிழில் உருவான வரலாறுகளால் இந்நிகழ்வு முழுமையாக மறைக்கப்பட்டுள்ளது. மாவீரன் பூலித்தேவனின் பாளையக்காரர்கள் இந்திய விடுதலைப்

போராட்டத்தில் முதல் முழக்கம் முழங்கினர் என்பதை உண்மையான வரலாற்றாளர்கள் வெளியில் கொண்டு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

சேத்தூர் காவல் தெய்வங்கள்

சேத்தூரின் நான்கு திசைகளிலும் தெய்வங்கள் காவலாக நின்று மக்களை காத்து வருகின்றனர். கிழக்கில் மாரியம்மனும், மேற்கில் எக்கலா தேவியும், தெற்கில் காளியம்மாளும், வடக்கில் வடக்குராள் செல்வியும் திசைக்காவலாகக் காத்து வருகின்றனர். மக்கள் நான்கு தெய்வங்களையும் வணங்கிப்பாடுவர். எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் இந்த நான்கு தேவதைகளையும் பாடியே தொடங்குவர்.

கொள்ளை நோய் வந்தாலும், மழை பெய்யாதிருந்தாலும் நான்கு தெய்வங்களுக்கும் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். ஆண் தேவதைகள் காத்தலில்லாமல் பெண் தெய்வங்களாகக் காவல் தெய்வங்களை வணங்குவது ஏனென்று தெரியவில்லை.

இவற்றைத் தவிர கிருஷ்ணன் கோயில், மணல் விநாயகர், புத்தடி கருப்பசாமி, பண்டாரக் கிழவன், கூடமுடையார் கோயில், புதியசாமி கோயில், பேச்சியம்மாள், முனியாண்டி, கோட்டமலை கருப்பசாமி, சாத்தான் கோயில், மஞ்சனப் பேச்சி, சவரிமலையாண்டி, முத்தழகி, சிங்கப்புலி, லிங்கத்தடியான், வைரசாமி, ஆமச்சுனையான், அய்யனார் கோயில், செல்லத்தாயி, கரடிப்பேச்சி, கன்னிமார் ஏழுபேர், இசைக்கி, ராமன், கடுமலையான், வாழக்கா முத்தையா, முட்டிக் கருப்பசாமி, சவளக்காரமுத்தையா, மாடசாமி, சுடலைமாடன், வீரம்மாள் காளி, சேர்வாரன்சாமி, பார்வதி, முத்திரியம்மன், திருமலைக்கொழுந்தீசர் அங்காள பரமேஸ்வரி, வடக்கத்தியான், மணியநாயகன் கோயில், முருகன், வெயிலுகந்த விநாயகர், யோகீஸ்வரர், சக்கம்மா, காசிநாதர், ஒடுக்கம், துர்க்கை, குருசாமி ஆகிய தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். மக்களிடம் தெய்வ நம்பிக்கை மேலோங்கி உள்ளது. விழாக்கள் நடைபெறும் போதெல்லாம் ஜமீன்தார்களுக்கு பிரசாதம் கொடுத்து வழிபடுவர். ஜமீன்தார் பிரசாதத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் தான் திருவிழா

ஏற்பாடுகளைக் கவனிப்பர். அத்தகைய பெருமையையுடைய ஊராக சேத்தூர் விளங்கி வருகின்றது.

இதைப்பற்றி சேத்தூரைச் சேர்ந்த இளம் முனைவர் திரு. சி. ஆழகர் என்பவர் விரிவாக ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அகத்தியர் வழிபட்ட மணல் விநாயகர்

தேவதானம் பெரியகோயில் மேற்பார்வையில் மணல் விநாயகர் கோயில் இருந்து வருவதாகக் கூறுகின்றனர். தமிழ் முனிவர் அகத்தியர் முனிவரே வந்து விநாயகர் பூசை நடத்திய ஊர் சேத்தூர். அத்தகு பெருமை வாய்ந்த மணல் விநாயகரை மக்கள் வணங்கி வருகின்றனர்.

ராமேஸ்வரத்தில் மணலைக் குவித்து சிவலிங்கத்தை உருவாக்கி ராமபிரான் வழிபட்டார். திருவாடனைக்கு அருகிலுள்ள உப்பூரில் உப்பைக் குவித்து விநாயகரை உருவாக்கி ராமபிரான் வழிபட்டார். அதே போல் இராசபாளையத்திற்கு அருகிலுள்ள சேத்தூரில் அகத்திய முனிவர் மணலைக் குவித்து விநாயகரை உருவாக்கி வழிபட்டடிருக்கிறார்.

இந்த அதிசய மணல் விநாயகரைப் பற்றிய தெரிந்துக் கொள்வோமா ...

சிவபெருமானால், அகத்தியருக்கு வழங்கப்பட்ட காவிரி

மணல் விநாயகர்

அகத்தியர்

நீரை, தனது கமண்டலத்தில் ஏற்றுக்கொண்டார். அகத்திய முனிவர் வரும்போது ஒரு கானகத்தில் கமண்டலத்தைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்திருந்தார் அப்போது விநாயகப் பெருமான் காகம் வடிவம் கொண்டு கமண்டலத்தைக் கீழே தள்ளிவிட்டார். இதனால் காவிரி நதி பெருக்கெடுத்து ஓடியது. இதனால் அகத்திய முனிவர் மிகுந்த வேதனை அடைந்தார்.

அகத்தியர் முன் விநாயகர் தோன்றினார். பொதிகை மலைக்குச் சென்று உமா மகேஸ்வரரின் அபிஷேகத்திற்கான காவிரி நீரைக் கொண்டு வந்தேன். அதைக் கவிழ்த்து விட்டீர்களே. இனி நான் என்ன செய்வது? என்று விநாயகப் பெருமானிடம் வேண்டினார்.

அங்கு பாய்ந்தோடிய காவிரியிலிருந்து நீரைக் கமண்டத்தில் எடுத்துக்கொடுத்து அதைப் பொதிகை மலைக்கு எடுத்துச் செல்லுங்கள் என்று கூறி விநாயகப் பெருமான் மறைந்து விட்டார்.

பொதிகை மலைக்கு வரும் வழியில் களாவனத்திற்கு வந்து சேர்ந்தார் அகத்திய முனிவர். அகத்திய முனிவர். அங்கு பஞ்சஸ்தலங்களில் ஆகாயத்தலமாக விளங்கி வரும் நச்சாடை தவிர்த்த ஈஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் வனமாக இருந்தது. அப்போது காலைப் பொழுதாக இருந்ததால் காலைக் கடன்களை முடித்து விட்டு, விநாயகப் பெருமானை வழிபடுவதற்கு மணலைக் குவித்து, விநாயகரைப் போல் உருவாக்கப்பட்ட விநாயகரின் மேல் அபிஷேகம் செய்தார். பின்னர் பொதிகை மலைக்கு அகத்திய முனிவர் சென்றார் என்பது வரலாறு.

ஒரு நாள் அந்தக்காட்டில் சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு பசுவானது தன் மடுவிலுள்ள பாலை மணல் விநாயகரின் மேல் செரிந்தது. அந்த அதிசயத்தைப் பார்த்த சிறுவர்கள் ஊரிலுள்ள பெரியவர்களிடம் கூறினர்.

மறுநாள் பெரியவர்கள் மறைந்து இருந்து பார்த்தனர். வழக்கபோல் பசு வந்து மணல் விநாயகர் மேல் பாலைச் சுரந்த அதிசயத்தைக் கண்டனர். அப்போது ஒரு சிறுவன் மீது அருள் வந்து,

இந்த மணல் விநாயகர் அகத்திய முனிவரால் வழிபாடு செய்யப்பட்டது. இதை வழிபட்டால் எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்கும் என்று அருள்வாக்கு கூறியது. அந்த இடத்தில் ஒரு கோயில் கட்டி வழிபாடு செய்து வந்தனர். அகத்தியரால் உருவாக்கப்பட்டதால் அகத்தியருடைய சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் முழுவதும் பஜனைகள் பாடி, விஷேச பூஜைகள் செய்து வழிபட்டு வருகின்றனர். மணலால் செய்யப்பட்ட மணல் விநாயகர், பக்தர்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்து வருகிறார் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. (தின மலர், ந. இராசையா)

சமணமதம்

சேத்தூரில் சமணமத வழிபாடு இருந்தது. என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த மகாவீரர் சிலையும், சமணமுனிவர்கள் வாழ்ந்த குகையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கூன் பாண்டிய மன்னன் காலத்தில் சேத்தூர் பகுதியில் சமணமதம் பரவியதாகத் தெரிகிறது. எம்மதமும் சம்மதம் என்னும் சீரிய கொள்கையைக் கடைப்பிடித்தனர் என்று தெரிகிறது. முஸ்லீம் சமாதிகள், அல்லாக் கோயில் இருந்த இடங்களின் எச்சம் இன்றும் உள்ளது. கிறித்தவ மதமும் உள்ளது.

இராஜபாளையம் அருகே சமண முனிவர்கள் வாழ்ந்த குகை கண்டுபிடிப்பு 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

மொட்டைமலை

இராசபாளையம் அருகே உள்ள சேத்தூர் மேட்டுப்பட்டிக்கு தென்கிழக்கில் மொட்டைமலை உள்ளது. இந்த மலை தளவாய்புரம் வரை அமைந்து உள்ளது.

குகை கண்டுபிடிப்பு

இந்த குகை கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சமண முனிவர்கள் தங்கி வாழ்ந்த குகை ஆகும்.

கி.பி. 7-ம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் கூன் பாண்டியன் இந்த பகுதியில் சமண மதத்தை பரப்பினான். இந்த குகையில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த குகை கூன் பாண்டியன் காலத்தைச் சேர்ந்தது என்பது தெளிவாகிறது.



கல் படுக்கை

இந்த குகை மலையை குடைந்து உருவாக்கப்பட்டு உள்ளது. 10 அடி உயரம் கொண்டதாக உள்ள குகை தெற்கில் இருந்து வடக்கு நோக்கியும், பின்பு கிழக்கு பக்கமாகவும் குடையப்பட்டு அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்த குகையில் 3 அறைகள் உள்ளன. முதல் 2 அறைகளில் சமண முனிவர்கள் படுத்து தூங்குவதற்கு கல் படுக்கைகள் உள்ளன. 3-வது அறை மிகவும் இருட்டாக இருப்பதால் உள்ளே செல்ல முடியவில்லை. அங்கே ஏராளமான வவ்வால்கள் அடைந்து உள்ளன.

பள்ளிக்கூடம்

சமண மதக் கோவில்களை குகைக்கோவில்கள், குடை வரைக்கோவில்கள், கட்டிடக் கோவில்கள் என்று 3 பிரிவாக பிரிக்கலாம்.

மொட்டை மலையில் உள்ளது குகைக்கோவில் ஆகும். முதலில் சமணர்கள் வசிக்கும் இடமாகவும், பின்பு வழிபாட்டு இடமாகவும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

குகைக்கு முன்பு உள்ள கல் மண்டபம் கல்வி கற்பிக்கப்படும் பள்ளியாக இருந்தது என்று தெரிய வருகிறது.

குகையைக் காக்க வேண்டும்

வரலாற்றுச் சிறப்பு மிக்க சமணர்கள் தங்கிய இந்த குகை தற்போது பாழடைந்து உள்ளது.

வரலாற்றுச் சின்னமான இந்த குகை அழிந்து விடாமல் காப்பது அரசின் கடமையாகும். (மாலை மலர் 12-8-2000, ந.இராசையா)

இராஜபாளையம் அருகே உள்ள 7-ஆம் நூற்றாண்டுச் சேர்ந்த மகாவீரர் சிலை கண்டுபிடிப்பு

சமண மகா வீரர் சிலை

இராசபாளையம் அருகே உள்ள சேத்தூரில் கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமண முனிவர்களில் உயர்ந்தவராகக் கருதப்படும் மகாவீரர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமண மதத்திற்கு ஜைனமதம், அருக மதம், நிகஃடமதம், அநேகாந்தவாத மதம், ரியாத மதம் என்னும் பெயர்களும் உண்டு. சமணர் என்றால் துறவிகள் என்பது பொருள். துறவை வற்புறுத்திக் கூறி, துறவு பூண்டோரே வீடு பெறுவர் என்று இந்துமதம் கூறுகிறது. புலன்களையும், கருமாக்களையும் சமண முனிவர்கள் வென்றவர்கள் ஆதலில் இவர்களை 'தீர்த்தக்காரர்' என்றும் ஜீனர் என்றும் அழைத்தனர். சமண சமயக் கடவுளுக்கு 'அருகன்' என்றும் பெயர் உண்டு.

சமண, சமயக் கொள்கைகளை அவ்வப்போது தோன்றும் (முனிவர்கள்) 'தீர்த்தங்காரர்கள்' போதித்து வந்தனர். சுமார் 24 தீர்த்தங்காரர்கள் பல்வேறு காலங்களில் தோன்றி சமண மதத்தைப் பரப்பி வந்தனர். அவர்களில் சமண, சமயக் கொள்கைகளை விருஷப தேவர் என்பவர் முதன்முதல் பரப்பியவர். கடைசியாக வந்தவர் மகாவீரர் ஆவார். இவரை 24-வது தீர்த்தங்காரர் என்று அழைக்கின்றனர்.

முதலாக உள்ள 22 தீர்த்தங்காரர்கள் ஒவ்வொருவரும் முறையே பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து வந்ததாகவும், 23-வது தீர்த்தங்காரர் 100 ஆண்டுகளும், 24-வது தீர்த்தங்காரர் மகாவீரர் 72 ஆண்டுகளும் வாழ்ந்தவர்கள் என்று வரலாறு கூறுகிறது. மகாவீரரே சமண மதத்தை திருத்தி அமைத்தார். அதனால் சமண மதத்தை மகாவீரர் தோற்றுவித்தார் என்றும் கூறுகின்றனர். மகாவீரர் காலம் கி.மு. 599-527.

இளமைக்காலம் :- மகாவீரர், கி.மு. 599-ல் சித்திரைத் திங்கள், வளர்பிறை பதிமூன்றாம் நாள் மகத நாட்டில் பாடலிபுத்திரத்திற்கு அருகிலுள்ள குண்டலிபுரத்தில் மகாவீரர் பிறந்தார். தந்தையார் சித்தார்த்தர் தாயார் குரிசலா தேவியார். இவருடைய இயற்பெயர் வர்த்தமானர்.

திருமணம்:- உரிய வயதில் யசோதா என்னும் மங்கையை மணந்து ஒரு பெண் மகவையும் பெற்று இல்லறத்தை இனிதே நடத்தி வந்தார். மகாவீரர் திருமணம் செய்து கொள்ளாமல் துறவியானார் என்றும் கூறப்படுகிறது.

பெயர்க்காரணம்:- மகாவீரர் தமது 28-ஆம் வயதில் பெற்றோரை இழந்து, தமது 36-வது வயதில் துறவியானர், 12 ஆண்டுகள் கடுமையான தவம் புரிந்தார். மக்கள் முக்தி அடைவதற்கான வழியைக் கண்டுபிடித்தார். அதனால் அவரை மகாவீரர் என்றும், ஜீனர் என்றும் அழைத்தனர். ஜீனர் என்றால் வெற்றி பெற்றவர் என்று அர்த்தம், மகாவீரர் கடுமையான தவம் புரிந்து விருப்பு வெறுப்புகளை வென்றமையால் இவரை மகாவீரர் என்றே அனைவரும் அழைத்தனர்.

தென்னாட்டில் சமணமதம் :- மகாவீரர் காலத்துக்குப் பின்னர் சமணமதம் மூன்று பிரிவாகச் செயல்பட்டது. அதில் ஒன்று திகம்பர ஆகும். சந்திரகுப்தர் காலத்தில் வட இந்தியாவில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. ஏராளமான ஜைனர்கள் தெற்கு நோக்கி வந்தனர். சந்திர குப்தரின் குருவாகிய பத்திர பாகு என்பவர் தலைமையில் வந்தனர். தமிழ்நாட்டில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் சமணமதம் பரவத் தொடங்கியது. சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளில் சமணமதம் தமிழ்நாட்டில் செழிப்பாக வளர்ந்து வந்தது.. மகேந்திர பல்லவன், கூன் பாண்டியன் ஆகிய மன்னர்கள் காலத்தில் தென்பகுதியில் ஜைனமதம் அதிகமாக பரவியது.

மதுரைக்குப் பக்கத்தில் உள்ள மலைகளில் பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன. சமணர்கள் தங்கிய குடைவறை படுக்கையில், 24 தீர்த்தங்காரர்களின் சிலைகள் ஆங்காங்கே உள்ளன.

மதுரைக்கு மேற்கில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலையில் சமண படுக்கைகள், மகாவீரர் சிலை மற்றும் 24 தீர்த்தங்காரர் சிலைகள் ஆகியவை உள்ளன. அதனால் சமணர் மலையென்றே அழைக்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் கழுகுமலையில் மகாவீரர் சிலையும் தீர்த்தங்காரர் சிலைகளும் மற்றும் கல்வெட்டுகளும் உள்ளன.

தென்நாட்டில் ''நெய்வேலிவென்று நின்ற சீர் நெடுமாறன்'' என்று அழைக்கப்பெற்ற பாண்டியனை அரிகேசா மாறவர்மன், கூன் பாண்டியன், சுந்தரபாண்டியனென்றும் கூறுகின்றனர்.

கூன் பாண்டியன் காலத்தில் தான் தென்தமிழ் நாட்டில் சமண முனிவர் சிலையும், மகாவீரர் சிலையும், சமணப்படுக்கை -களும் அமைந்தன என்று தெரிய வருகிறது. இராசபாளையம் பகுதியில் சேத்தூர், கொல்லங்கொண்டான், புத்தூர் போன்ற இடங்களில் சமணர்களின் நினைவுச்சின்னங்களை எழுப்பியதாகத்

தெரிகிறது. அந்த நினைவுச் சின்னங்களில் ஒன்று மகாவீரரின் சிலையாகும்.

மகாவீரரின் சிலை சேத்தூரில் எக்காலதேவி அம்மன் கோயிலின் பின்புறமுள்ள ஊரணியில் உடைந்த நிலையில் புதைந்து கிடந்தது. அச்சிலை தலைப்பாகம் மட்டும் உள்ளது. மற்ற பகுதிகள் காணப்படவில்லை. தற்போது இந்தச் சிலை சேத்தூர் சேவகப்பாண்டிய உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ளது.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 8-ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை பக்திக் காலம் என்றனர். அந்தக் காலத்தில் தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும் சைவ, வைணவ மதத்தைப் பரப்பினர். சமண மதத்தையும் பௌத்த மதத்தையும் தமிழகத்தில் பரப்பி வந்துள்ளனர்.

அந்தக் கால கட்டத்தில் தான் சமணர்களின் சிலைகள் அகற்றப்பட்டிருக்க வேண்டும் அல்லது சேதப்படுத்தியிருக்க வேண்டும் என்று யூகிக்க முடிகிறது.

கூன் பாண்டியனின் வயிற்று வலியை சைவர்கள் போக்கியதும் மீண்டும் சமண மதத்திலிருந்து சைவ மதத்தில் சேர்ந்தான். அப்போதுதான் சமண மத நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சிலையின் அமைப்பைப் போன்ற முழு உருவச்சிலைகளை பல இடங்களிலும் காண முடிகிறது. கூன் பாண்டியனின் காலம் கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சேத்தூர் மலையில் சமணர்களின் படுக்கையை உடைய குகை உள்ளது. அதை சைவர்கள் கைப்பற்றி, வெளியே முகப்புக் கட்டிடத்தை கட்டி அதில் மீன் சின்னமும் பொறிக்கப்பட்டிருப்பதால இருந்து, ஜைனமதத்தைப் பாண்டியர்கள் அகற்றியிருக்க கூடும் என்பதற்கு இதையே சான்றாகக் கொள்ளலாம்.

சமணர்களின் தமிழ் தொண்டுகள்:- ஜைனர்கள் தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் செய்திருக்கும் சேவை மகத்தானதாகும். தமிழில் புதிய சொற்களை உண்டாக்கினர்.

தமிழ் நூல்களை இயற்றினர் நேமிநாதம், நன்னூல், அகப்பொருள் விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும், யாப்பெருங்கலக்காரிகை, யாப் பெருங்கால விருத்தம் ஆகிய யாப்பிலக்கணங்களையும், திவாகர ரிகண்டு, அறநெறிச்சாரம், பழமொழி, ஏலாதி முதலிய நீதி நூல்களையும், சீவகசிந்தாணி, ஜைணயாபதி ஆகிய பெருங்காப்பியங்களையும்,யசோதராகாவியம் நீலகேசி, சிறு பஞ்ச நூல்களையும் படைத்தார். தமிழுக்கு அவர் செய்த சேவை மகத்தானதாகும். (தின பூமி ஜனவரி 30, ந.இராசையா)

'ராஜாவுக்கு ராஜா விட்டுக் கொடுக்க வேண்டுமா?'

சேத்தூர் ஜமீன்தார் வடமலை திருவநாத வணங்காமுடியார் சுந்தரதாஸ் சேவுகப்பாண்டியத்தேவர் சங்கீத ஞானமிக்கவர். புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மாமுண்டியா பிள்ளையிடம் 'கஞ்சிரா' கற்று, அந்த வாத்தியத்தில் புகழ்பெற்று விளங்க வேண்டும் என்று இவருக்கு விருப்பம். 'கஞ்சிரா' வாத்தியத்தில் கைதேர்ந்தவர் மாமுண்டியா பிள்ளை. ஒரு காலத்தில் கச்சேரிகளில் பக்க வாத்தியங்களில் ஒன்றாகக் கூட இந்தக் கஞ்சிராவை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். 'ஒற்றைக் கை வாத்தியம்' என்று இதை ஏளனமாகக் கூறுவார்கள். ஆனால், மாமுண்டியா பிள்ளை இதைக் கையாண்ட பிறகு இதற்கு ஒரு புது 'மவுசு' ஏற்பட, கச்சேரிகளிலும் பக்க வாத்தியமாக இது இடம் பெற்றது.
மாமுண்டியா பிள்ளையைக் குருவாகக் கொண்டு கஞ்சிரா கற்க வேண்டும் என்று ஆசைப்பட்ட ஜமீன்தார், புதுக்கோட்டைக்குப் பயணமானார்.

புதுக்கோட்டையில் பிள்ளையைச் சந்தித்த ஜமீன்தார், சங்கீத மரபுப்படி அவரை நமஸ்கரித்துத் தன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தன் வேண்டுகோளைச் சொல்ல, ஜமீன்தாரின் 'சங்கீதப் பசியை' அறிந்த பிள்ளையும், அவரைச் சீடராக ஏற்றுக் கொண்டார். இந்த நிமிஷத்திலேயே 'வித்துவான் ஜமீன்தார்' என்ற நிலை மறைந்து *'குரு - சிஷ்யன்'* என்ற புதுஉறவு மலர்ந்தது!

வாரத்துக்கு இரண்டு நாட்கள் மாமுண்டியா பிள்ளை சேத்தூரில் தங்கியிருந்து ஜமீன்தாருக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது என்றும், அடுத்த வாரம் மறுபடியும் அவர் வரும்போது அந்தப் பாடல்களை ஜமீன்தார் வாசித்துக் காட்ட வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. சில மாதங்களுக்கு எந்தத் தடங்கலுமின்றி இது நடந்தது.

சங்கீதத்தைத் தவிர 'சேவல் போரிலும்' சேத்தூர் ஜமீன்தாருக்குப் பெருத்த ஈடுபாடு... இதற்காகவே அழகழகான போர்ச் சேவல்களை அரண்மனை முழுக்க வளர்த்து வந்தார் அவர். ஒவ்வொரு வருடமும் தை மாசம் முதல் சித்திரை மாசம் வரையிலான ஐந்து மாசங்களே சேவல் போருக்குரிய சீசன்! அதிலும் ஞாயிற்றுக்கிழமைதான் இந்தப் போர் நடக்கும். 'தென்பிடாகை' யிலுள்ள சேவல் போர் பிரியர்கள் எல்லோரும் அந்தச் சமயத்தில் சேத்தூருக்கு வந்து கூடிவிடுவார்கள்.

'போர் சீசன்' வந்து விட்டால் ஜமீன்தாருக்கு ஊண், உறக்கம் இருக்காது. 'எங்கே நல்ல சேவல் கிடைக்கும்... அதை எப்படி வாங்குவது... அவற்றுக்கு எப்படி பயிற்சி கொடுப்பது' என்பது பற்றிய விஷயங்களிலேயே அவர் கவனம் இருக்கும். சேவலின் காலில் கத்தியைக் கட்டிப் போர் செய்ய வைப்பதெல்லாம் அவருக்குப் பிடிக்காது. ஒரே எடை, ஒரே வயது, ஒரே உயரம் உள்ள சேவல்களைத் தேர்ந்தெடுத்துக் கத்தி கட்டாமல் சண்டை போட வைக்கும் இதற்கு 'வெப்போர்' முறையில் தான் ஜமீன்தாருக்கு ஈடுபாடு. சேவல்களுக்கெல்லாம் 'ஜாதகம் கூட' எழுதி வைத்திருப்பார். தன் சேவலை வேறொரு சேவல் ஜெயித்துவிட்டால் அதற்குத் தங்க வளையம் போட்டுக் கௌரவிப்பார். அதை வளர்த்தவனுக்கும் ஆயிரக்கணக்கில் பணம் கொடுப்பார். அந்தச் சேவலைப் படம் பிடித்து அரண்மனையிலும் மாட்டிக் கொள்வார்... இறந்த சேவல்களைப் பாடம் செய்தும், அரண்மனையில் வைத்திருப்பார். அப்படி ஒரு ஈடுபாடு அவருக்கு! இதனால் அவரைக் 'கோழித்துரை' என்று குடிமக்களும் அவருடைய நண்பர்களும் பெருமையோடு அழைப்பார்கள்.

இந்தச் சேவல் போர் சீசனில், எப்போதும் போல் கஞ்சிரா வகுப்புக்காக மாமுண்டியா பிள்ளை அரண்மனைக்கு வர, போரில் ஈடுபட்டிருந்த ஜமீன்தாரால் அந்த வாரத்துக்குரிய பாடங்களைச் 'சாதகம்' செய்ய முடியவில்லை. இதை அறிந்த பிள்ளையவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. வந்த சாரட் வண்டியிலேயே அவர் புதுக்கோட்டைக்குத் திரும்பிவிட, இதை அறிந்த ஜமீன்தார் வெலவெலத்துப் போய் விட்டார்! உடனே வேகமாகத் தான் குதிரையில் ஏறிச்சென்று தன் குருவை வழி மறித்து அரண்மனைக்குத் திரும்புமாறு மன்றாடினார்.

அப்போது மாமுண்டியா பிள்ளை மிகவும் மனச்சங்கடத்துடன்... **'நீங்கள் இந்தச் சேத்தூர் சமஸ்தானத்தின் ராஜாவாக இருக்கலாம்... ஆனால்... நான் சங்கீத சமஸ்தானத்து ராஜா'** என்றார் பெருமையோடு!

'இதுவரை நாம் இருவரும் குருவும் சிஷ்யனுமாக இருந்தோம். இப்போது தங்கள் வாக்குப்படி தாங்கள் ராஜா ஆகிவிட்டீர்கள்... எனவே ராஜாவுக்கு ராஜா விட்டுக் கொடுக்க வேண்டாமோ...' என்று சொல்லிக் கொண்டே, அந்த இசைமேதையின் கையைப் பிடித்துக் கெஞ்சி அரண்மனைக்கு அழைத்து வந்து விட்டார் ஜமீன்தார்! சங்கீத வேள்வி தொடர்ந்தது...

ஜமீன்தார் சேகவுப்பாண்டியத் தேவர் பிற்காலத்தில் செம்பை, சித்தூர் போன்றவர்களுக்கெல்லாம் பக்கவாத்தியம் வாசிக்கக்கூடிய அளவுக்குப் புகழ் பெற்றார். சென்னை, **மியூசிக் அகாடமியின்** முதல் சங்கீத மாநாட்டைத் துவக்கி வைத்தவர் இவர்.

1967-ல் ஜமீன்தார் சேவுகப் பாண்டியத்தேவரை ஒரு திருமணத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது 'சங்கீதத்திலும் சேவல் போரிலும் தாங்கள் புகழ்பெற்றவர்கள். அப்படியிருக்க, தங்களைச் **'சங்கீதத் துரை'** என்று அழைக்காமல் **'கோழித்துரை'** என்று கொச்சையாக அழைக்கிறார்களே?' என்று நான் மெதுவாகக் கேட்க...

முனைவர் ந. இராசையா

'சங்கீதத்தை வித்வான்களால்தான ரசிக்க முடியும். ஆனால், 'சேவல் போரை' எல்லோராலும் பார்க்கவும் ரசிக்கவும் முடியும். எனவே, மண்வாசனையோடு ***'கோழித்துரை'*** என்ற பட்டத்தை மக்கள் கொடுத்திருக்கிறார்கள்' என்று சொல்லிச் சிரித்தார் கலாரசிகரான ஜமீன்தார்!

(தகவல் **குகன்** நன்றி)

மனித சமுதாயத்தில் கடந்த காலத்தில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறுவது வரலாறு. தமிழ்நாடு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. உலக வரலாற்றுக்கு தமிழ்நாட்டு வரலாறு வழிகாட்டியாக உள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் புகழை உலக அளவிலுள்ள அதிசயங்களில் முதன்மையாகக் கொண்டுவர முயன்று வருகின்றனர். அதற்காக தீவிர வேலைகளும் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் எண்ணத்தக்க கோயில்களில் தேவதானம் பெரிய கோயிலும் ஒன்றாகும். கோயில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது போற்றத் தக்க செயலாகும் இதன் மூலம் கடந்த கால நிகழ்ச்சிகளில் காணப்படும் குழப்பத்தை ஓரளவுக்குக் குறைக்கிறது. உண்மையான முரண்பாட்டை ஆய்வதும், விளக்கங்களைத் தருக்க முறையில் கூறுவதும் வரலாறாகும்.

அந்த வகையில் தேவதானம் பெரிய கோயிலின் முழுவரலாற்றையும் கொண்டுவர வேண்டும் என்று மிகுந்த ஆவல் கொண்டேன். அதற்கான முயற்சிகளையும் கையாண்டேன். என் முயற்சி தோல்வியைத் தான் தந்தது. கிடைத்த வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டு இந்நூல் 'தேவதானம் பெரிய கோவில்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளேன். அதற்குக் காரணம் பொருளாதார நிலையும் ஒன்றாகும். இது ஒரு ஆரம்ப நிகழ்வு எனக் கொண்டு, நீண்ட வரலாற்றை விரைவில் வெளியிட ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். இடர்பாட்டுக்கு மன்னிக்க வேண்டுகிறேன். நச்சாடை தீர்த்த ஈசுவரர் என்னுடைய இடர்பாடுகளையும் தீர்ப்பார் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

பக்கம் 77 - ன் தொடர்ச்சி :



தியாகசுந்தர ராஜ் தேவர் அவர்கள்



ராஜ்குமார் திருமலை குமாரசாமித் தேவர் என்ற V.T.S. தங்கப்பாண்டியன் அவர்கள் மனைவி திரிபுரசுந்தரி நாச்சியார் சேதுபதி வழியினருடன் திருமணம்.

சிவப்பிரகாசத் தேவர் அவர்கள்

பக்கம் - 77 ல் புகைப்படம் உள்ளது.



கோட்டிலிங்க முத்துச்சாமி பாண்டியன் அவர்கள்
திருமணமாகாத நிலையில் இறந்துவிட்டார் (மைனர்)

ராஜகுமாரி பழனி மலையழகு நாச்சியார் அவர்கள்
கணவர்

(முன்னாள் பாராளுமன்றத் தலைவரும், திருவாரூர்
நகரசபைத் தலைவருமான சாம்பசிவன் அவர்கள்)
மணநாள் : **13-6-45** இறப்பு: சனவரி **24 - 1973**



V.T.S.D. துரைராஜசேகர் அவர்கள்

தற்போது தேவதானம் பெரியகோயிலின்
நிரந்தர அறங்காவலர்.

இந்தப் புகைப்படங்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால்,
கடைசிப் பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அடுத்து வரும்
பதிப்பில் பக்கம் 77-ல் இணைக்கப்படும்.